Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

பெப்.01-07,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 242

## பொன்விழா கொண்டாட்டம் மேற்குலகின் கண்ணோட்டம்

## தெளிவாகும் உண்மைகள்



## வாலியின் அனுபவம்

## சுதந்திர விழாவும் அந்தர வாழ்க்கையும்





## மகேஸ்வரி வீசிய மந்திர வலை

# முரசம்

## புறாக்களும் தமிழ் மக்களும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

சிறீலங்காவின்
தேசிய தினமும்- அதன்
பொன்விழாவும்
வெகு விமரிசையாக
கொண்டாடப்படவுள்ளது!

அமோகமாகக்
கொண்டாடும் அளவுக்கு
சுதந்திரத்தால்
கிடைத்த பயன் என்ன?

சிந்தித்துப் பார்த்தால்
சாதனைகளைவிட
வேதனைகள்தான்
50 ஆண்டு காலத்தில்
அதிகமாகி வந்துள்ளன!

வெள்ளையர்களின்
கரங்களில் இருந்து,
பெரும்பான்மை இனத்தின்
கரங்களுக்கு
ஆட்சி அதிகாரம்
மாற்றப்பட்ட நாள்
என்பதுதான் சரி!

சிங்கள மக்களுக்கும்
பிரச்சனைகள்
இல்லாமல் இல்லை!

சுதந்திரத்தின் பின்னர்
தென்னிலங்கையில்
இரண்டு தடவைகள்
மிகப் பாரிய
ஆயுதக் கிளர்ச்சிகள்
வெடித்திருக்கின்றன!

ஆயிரக்கணக்கான
சிங்கள இளைஞர்களும்
யுவதிகளும்-
உண்மையான சுதந்திரத்திற்காக
இரத்தம் சிந்தினார்கள்!

வேலை இல்லாத் திண்டாட்டம்
இன்னமும் தீர்ந்தபாடில்லை!
விலைவாசி
விஷம்போல் ஏறிவருகிறது!

ஏழைகள் மேலும்
ஏழைகளாகி வருகின்றனர்!
பட்டதாரி இளைஞர்கள்
தெருவில் அலைகிறார்கள்!

மறுபடியும்
சிங்கள இளம் தலைமுறை
கிளர்ச்சியில் ஈடுபடலாம்
என்று செய்திகள்
உலாவித் திரிகின்றன!

ஆக, மொத்தத்தில்
சிங்கள மக்களுக்கும்
பூரண சுதந்திரம்
கிடைத்தபாடாக இல்லை!

அரசியல் சுதந்திரம்
கிடைத்திருப்பதாகக் கூறலாம்!

தங்கள் இனத்தாரில்
தங்களை யார் ஆளவேண்டும்?
என்பதை
ஐந்தாண்டுக்கு ஒருமுறை
தீர்மானிக்கும் சுதந்திரம்
கிடைத்திருக்கிறது!

தங்கள் இனத்தை,
தங்கள் மொழியை,
தங்கள் மதத்தை
தங்கு தடையின்றி வளர்க்கவும்
சுதந்திரம் கிடைத்திருக்கிறது!

மேற்கண்ட
சுதந்திரங்கள் கூட
தமிழ்பேசும் மக்களுக்கு
இன்றுவரை கிட்டவில்லை!

தங்கள் தலைவிதியை
தாங்களே தீர்மானிக்கும்
அரசியல் சுதந்திரமும்
மறுக்கப்பட்ட நிலையில்தான்
தமிழ்பேசும் மக்கள் உள்ளனர்!

பொருளாதாரத் தடைகள்
போக்குவரத்துத் தடைகள்
காரணமாக
நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து
வடக்கு-கிழக்கு பகுதிகள்
தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளன!

சந்தேகப் பார்வைகள்,
பாதுகாப்புக் கெடுபிடிகள்
காரணமாக
தமிழ் மக்கள்
மனதால் பிரிக்கப்பட்டுள்ளனர்!
அந்நியமாக்கப்பட்டுள்ளனர்!

உளவியல் ரீதியான,
பிரதேச ரீதியான
பிரிவினை உணர்ச்சிகள்
நாளும் பொழுதும்
பெரிதாகிக் கொண்டிருக்கின்றன!

துப்பாக்கி ஏந்திய
படைபலம் மூலம்தான்
உடைந்துபோன நாட்டை
ஒட்டுப்போட்டு
வைத்திருக்கிறார்கள்!

சுதந்திர தினத்தன்று
வெண்புறாக்களும்
பறக்கவிடப்படக்கூடும்!

வவுனியா தடுப்பு முகாமிலும்
விசாரணையின்றி
நீண்டகாலம் சிறைகளிலும்
வாடும் தமிழ் மக்களை
திறந்துவிட மட்டும்
நினைத்தாரில்லையே!

தமிழ் மக்களின்
சுதந்திரச் சிறகுகளை
வெட்டிப்போட்டுக்கொண்டு
புறாக்களை
பறக்கவிட்டென்ன?

தீர்வை
தேயவைத்துக்கொண்டு
சமாதானம் பேசியென்ன?

இங்கு
சுதந்திரம் வந்தது
யாருக்கு?

இக் கேள்வியைத்தான்
50 ஆண்டுகளாக
தமிழ்பேசும் மக்கள்
கேட்டுக் கொண்டு
இருக்கிறார்கள்!
இந்தப் பொன்விழா ஆண்டில்
அந்தக் கேள்வியின்
கனம் கூடியுள்ளதே தவிர
குறையவில்லை!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஆத்துமாவில் பெலன்

"நான் கூப்பிட்ட நாளிலேயே எனக்கு மறு உத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்!" (சங்:138:3)

ஜெபத்தை கேட்கிற தேவன், ஜெபத்திற்கேற்ற பதிலை தருகிறார். சில வேளைகளில் அதற்கு ஏற்றபடி நம் உள்ளம் செயற்படுகிறது. சில சமயங்களில் பதிலை அறியவிரும்பினாலும் பெற்றுக் கொள்ள முடியாதுபோய்விடுகிறது. நமது ஜெபத்திற்கு பதில் நமது கர்த்தரிடமிருந்து கிடைக்கும்பொழுது நமது ஆத்துமா பெலனடைகிறது. ஆகவே எல்லாவற்றையும் செய்ய, நலமாய் வாழ நாம் தைரியம் அடைந்து விடுகிறோம். ஆத்துமாவில் பெலன் இல்லை என்றால் பயம், கவலை என்று வாழ்வு போராட்டமாக மாறிவிடுகிறது.

இன்று வாழ்வில் பயத்துடனும், கவலையுடனும் வாழும் சகோதரனே! சகோதரியே! உன் காரியங்களை மாற்றி உன் கண்ணீரைத் துடைத்து, கவலையின்றி உன்னை தைரியமாக வாழ வைக்கவல்ல கர்த்தர் இருக்கிறார். அவர் கைவிடமாட்டார். உன்னை தள்ளிவிடவும் மாட்டார். உன்னைப் பெலப்படுத்தி எல்லா சூழ்நிலைகளிலும் சிறப்பாய் வாழ உன்னை பக்குவப்படுத்தி வாழ வைப்பார்.

நமது ஆத்துமா, ஆவி, சரீரத்தில் பெலன் கொடுக்கும் தேவன் தமது வார்த்தைகளில் உண்மையுள்ளவர். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் வாழும் ஒவ்வொரு சகோதர, சகோதரியிலும் கர்த்தர் இவ்விதமாய் பெலத்தை தந்து ஆசீர்வதிக்கிறார். ஆகவே நாம் பெலன் உள்ளவர்களாய் வாழ நமது வாழ்வில் கர்த்தரின் சந்தோஷம் நிரம்ப வேண்டும்.

ரி.தேவபாலன், மட்டுநகர்.



## தூக்கத்தைவிட தொழுகையே சிறந்தது!

சுபஹு தொழுகையை நம்மில் பெரும்பாலான மக்கள், அதன் நேரத்துக்கு நிறைவேற்றாமல் விடுகின்றனர். ஆனால் சுபஹு தொழுகையை அதன் நேரத்தில் நிறைவேற்றினால் கிடைக்கும் பலாபலன்களை அறிவார்களாயின் உரிய நேரத்தில் அத்தொழுகையை நிறைவேற்றத் தவறமாட்டார்கள்.

நபி அவர்களின் அருள் மொழிகள் மூலம் அதன் சிறப்புக்கள் வருமாறு:

* சுபஹுத் தொழுகையின் இரண்டு ரக் அத்துகள் இந்த உலகத்தை விடவும், இவ்வுலக சாதனங்களை விடவும் சிறந்தவையாகும். (நூல்- *முஸ்லிம்*)

* ஜமா அத்துடன் சுபஹு தொழுதவர் அன்றிரவு முழுவதும் தொழுதவரைப்போல் ஆவார். (நூல்- *முஸ்லிம்*)

* பஜர், இஷா இவ்விரண்டும் நயவஞ்சகர்களுக்கே மிகக் கஷ்டமான தொழுகைகளாகும். இவ்விரண்டு தொழுகைகளிலும் உள்ள சிறப்புக்களை அவர்கள் அறிந்திருந்தால் தவழ்ந்தாவது அவ்விரு தொழுகைகளிலும் கலந்து கொள்ள வருவார்கள். (நூல்-*புகாரி முஸ்லிம்*)

* சுபஹு தொழுதவர் அல்லாஹுவின் பாதுகாப்பில் உள்ளார் (நூல்- *முஸ்லிம்*)

* வெள்ளியன்று ஜமா அத்துடன் தொழுத சுபஹு தொழுகைதான் இறைவனிடம் மிகச் சிறந்த தொழுகையாகும்.

எனவே சுபஹு, இஷா இவ்விரு தொழுகைகளையும் ஜமா அத்துடன் நேரம் தவறாமல் பேணக்கூடியவர் உண்மையான இறை விசுவாசியாவார்.

தொகுப்பு:- எம்.எம்.முகம்மது ஸாகிர்- சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல.239

பரிசுக்குரிய கவிதை

### எந்தப் புரம்?

மண்ணைத் தோண்டுங்கள்
மண்டை ஓடுகளும்
மனித எலும்புகளும்
வருவது திண்ணம்!
இது-
"கொக்கட்டிச் சோலை"யா?
இல்லை! "குமாரபுரமா?"
அன்றில் 'குடாநாடா?"

ஜி.மோகனேஸ்வரி-கிண்ணியா.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



### யதார்த்தம்

பிஞ்சுக் கரங்களால் பிடித்து
மணல் குவித்து
தட்டி உடைத்திடுவார்-
விளையாட்டு இங்கே!
ஐந்து பெரியவர்கள் ஆளுக்காள்
போட்டியிட்டு
கட்ட முயலுகிறார்
மணல் வீடு அங்கே!

திருமதி.ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
பூவரசன்குளம், வவுனியா.

### கட்டியம்

வடக்கு மக்களை,
அடக்கு முறையில்
மடக்கி வைத்து
வாக்கு குவிக்க இருக்கும்.
பஞ்சமா தமிழ் கட்சிகளை,
பிஞ்சுகள் படமாகக்
காட்டுது.

நா.சந்திரன்-கொக்கட்டிச்சோலை.

### மீதங்கள்

சொந்த மண்ணே
சோரம் போனபின்,
சொத்தை விழுந்தது
சொந்த வாழ்க்கையில்!
சோதரங்களை இழந்த
பின்னரும்,
தேடல்களே மீதமானது...!

என்.சஹாப்தீன்- ஒட்டமாவடி.

## கவிதைப் போட்டி இல.242



### இன்றைய பாப்பாவுக்கு!

கூடி விளையாடாதே பாப்பா!
குண்டு வந்து விழுந்துவிடும் பாப்பா!
ஓடி ஒளித்துவிடு பாப்பா!
வெடி ஓசை வரும் முன்னே பாப்பா!
மண்தோண்டக்கூடாது பாப்பா!
மறைந்த செல் வெடித்துவிடும் பாப்பா!
பொல்லாத தேசமடி பாப்பா!
புறங்காட்டி படுத்து விடு பாப்பா!

அம்பிளாந்துறையூர்-அரியரன்

**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 07.02.1998

**முகவரி:**
கவிதைப் போட்டி இல.242,
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

### சுதந்திரக்கோட்டை

எவரும் கட்டலாம்;
எவரும் உடைக்கலாம்;
எவராலும்
தடுக்க மட்டும்
இயலாது!!

எஸ்.பிரபா-பதுளை.

### ஓட்டும் வேட்டும்

இது ஓட்டுக் கேட்க
கூட்டுச் சேரும்-டம்பிகளா?
புது வேட்டுக் கொதுங்க
பங்கர் ஆக்கும்-தம்பிகளா?

செ.அகிலா-கலகெதர.

### தப்பாது

'புல்டோசர்' வந்தால்
கல் வீடும் தப்பாது-இந்த
மணல் வீடும் மிஞ்சாது!

அ.சந்தியாகோ-கண்டி.

### திறமையின்மையோ...?!

மணற்கோட்டை-
கட்டிய பின்னரே இடியும்!
சமாதானக் கோட்டையோ-
கட்ட முதலே இடிகிறதே?

சி.சிவபரீஸ்வரன்- சுழிபுரம், யாழ்ப்பாணம்.

### விழி திறப்பார்களா?

மண்ணில் கோட்டைகள்
மண்ணாகிச் சரிந்திட (போரில்)
விண்ணில் இருந்தே
வீம்புபேசி வீணடிக்கும்
மாண்புமிகு நம்மவர்கள்
பொன்னான சிறார்களின்
பண்பான ஒற்றுமையை
பாங்காகப் பார்த்தாவது
கண்விழி திறப்பார்களா?

கேயெஸ்பி-கொழும்பு-05.

### நெத்தியடி!

இது என்ன கூட்டுமுயற்சி?
உரிமைகளை விற்கும்
தமிழ்க் கட்சிகளுக்கு,
மழலைகளின் நெத்தியடியா?

மோ.றொமேஸ்-கொழும்பு-13.

### நிர்மாணம்

தேர்தல் திருவிழாவிற்கு
சமாதானக் கோபுரம்
நிர்மாணிக்கப்படுகிறது!

ஏ.எச்.எம்.மௌஜுத்-
ஹிஜ்ராபுரம்.

# வாசக(ர்)சாலை




அரசியல் நிகழ்வுகளை பக்க சார்பின்றி தருவதில் முரசே! உனக்கு நிகர் நீயே! பாலகுமாரனின் 'இனி என் முறை' தொடர் அடுத்த அங்கம் எப்போது? என்றளவுக்கு சூடுபிடிக்கிறது. தீர்வுத் திட்டம் என்று கூறி தீராத ஒரு திட்டத்தை தந்துவிட்டு அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தல் மூலம் சிறுபான்மை மக்களுக்கு மாயஜாலம் காட்டுகிறது. இதனை உணராமல் தமிழ் கட்சிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது பாதகமன்றோ! இதனை இராஜதந்திரியார் சிறப்பாய்க் கூறியிருக்கிறார்.

வ.பிர்தௌஸ், கிண்ணியா.

★ ★

தமிழ்க் கட்சிக்காரர்கள் உண்மையைச் சொன்னால் ஏன் தாங்கிக் கொள்கிறார்களில்லை. குட்டிக் கரணமடித்து பதில் தரத்தான் அவர்கள் இலாயக்கு. நாங்களும் கிடக்கிறோம்- அம்பாறை மாவட்டத் தமிழர்கள், பார்க்கிறார்களா? உங்களது கண்களெல்லாம் எங்கே ராசா போயிற்று? யாழில் தேர்தல் நிலவரம் எப்படி என்று பார்க்கவா? ஷா.. அதமட்டும் உடமாட்டியள். எங்கட பக்கம் ஓட்டுக் கேக்கிற எண்டா கொஞ்சம் உசாரோட வாங்க... குட்டி நெட்டிக்கெல்லாம் தமிழ்க் கட்சிகளின் விளையாட்டுக்கள் எல்லாமே தண்ணி பட்டபாடு.

கே.எஸ்.புவன், அக்கரைப்பற்று.

★ ★

அன்பின் முரசுக்கு!

நீ தாங்கிவரும் அனைத்தும் சூப்பர். அதில் இனிய தொடரான 'மேக்கப் புன்னகை', 'இனி என் முறை' ஆகிய இரு தொடர்களும் எம்மை அசத்துகின்றன. அதை தாங்கி வரும் முரசுக்கு பாராட்டுக்கள்.

கி.றெஜிச்சந்திரன், வத்தளை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் 'அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

### தலைமை யார்?

உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய முரசின் கருத்துக்களும், அலசல்களும் வெகு நேர்த்தியாக இருந்தன. காட்டூன்களும் அருமை. காதிலை பூ கந்தசாமியார் சிரிக்க மட்டுமா, சிந்திக்கவும்தான். தேர்தலில் வெற்றி தோல்வியை வைத்து, தமிழ் மக்களின் தலைமை யார் என்று தீர்மானிக்க முடியாது. வாக்குச் சீட்டுக்கள் மட்டும் வரலாற்றை மாற்ற முடியாது.

சி.சிவயோகநாதன், திக்கம், யாழ்ப்பாணம்.

### சிகப்புச் சட்டையும் துவேஷமும்

அன்பு முரசே!

அமெரிக்காவின் கடைக்கண் பார்வைக்காக முன்னாள் இடது சாரிகள் ஏங்குகிறார்கள். சிகப்புச் சட்டையுடன் இப்போதும் காணப்படும் லங்கா சமசமாஜ கட்சித் தலைவர் ஒருவர் அமெரிக்காவை பாராட்டியிருக்கிறார். புலிகளுக்கு விதித்த தடையை புகழ்ந்துள்ளார். சிகப்புச் சட்டை போட்டாலும் மனதில் இருப்பது இனத்துவேஷம்தான்.

இ.மதிவாணன், தெகிவளை.

பாலகுமாரனின் 'இனி என் முறை' தெவிட்டாத விருந்து. நாயகியின் மனம் சிறிது ஆட்டம் காண்கிறது. அதனை வெகு இயல்பாக சுட்டிக் காட்டிச் செல்லும் நயம் நன்று. சஸ்பென்ஸ் கலந்த நடையும் தன்னால் முடியும் என்பதைக் காட்டிவிட்டார்.

செ.யோகராசா, திருமலை.

முரசே! 'இனி என் முறை'யும் 'மேக்கப் புன்னகை'யும் போட்டி போடுகின்றன. எது முதலிடத்தில்? இரண்டுக்கும் சம இடம் கொடுத்துவிட்டோம். பட்டுக்கோட்டை பிரபாகர் வெளுத்து வாங்குகிறார் என்றால், பாலகுமாரன் விளாசித் தள்ளுகிறார்.

திருமதி நிர்மலா மெசலின், மஸ்கெலியா.

காதிலை பூ கந்தசாமியார் தேர்தலை வைத்து ஒரு போடு போட்டுவிட்டார். இங்கு எங்களுக்கிடையே அதுதான் பேச்சு. சுவரொட்டி வீரத்தையும், பிரசார வேகத்தையும் கண்ணாரக் கண்டு களித்தோம். காணும் போதெல்லாம் கந்தசாமியாரை நினைத்தோம்.

சி.தேவதாஸ், யாழ்ப்பாணம்.

### நிஜவதை

பூலான் தேவியின் துணிச்சல் வாழ்க்கையில் அவள் பட்ட அனுபவம் கற்றுக் கொடுத்த பாடம்தான். மனித மிருகங்கள் மத்தியில் நின்று கொண்டு காருண்யம் பற்றியும், அஹிம்சை பற்றியுமா எண்ண முடியும்? பூலானின் கோபம் நியாயமானதே.

சி.வத்சலா, மன்னார்.

### கண்ணீரில் நனைக்கிறார்

டயானா முரசில் தொடராகவந்து எங்களையும் கண்ணீரில் நனைக்கிறார். சம்பவங்கள் நடைபெற்ற காலத்திற்கு உரிய புகைப்படங்களை பிரசுரிப்பதும் சிறப்பாக உள்ளது. டயானா என்ற ரோஜாவை வாட வைத்த சாள்ஸ் இங்கு வருகிறாராமே!

செல்வி.என்.சுகிர்தா, கொழும்பு-11.

### எரிச்சல் வந்திருக்கும்

அன்புள்ள முரசுக்கு,

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு 'முரசு' ஊசலாட்டமில்லாத நிலைப்பாடு எடுத்திருந்தது. நடுநிலை என்று கூறிக் கொண்டு நழுவல் கருத்துக்களாக கூறாமல், முழு ஈடுபாட்டோடும், இதய சுத்தியுடனும் முரசின் கருத்துக்கள் அமைந்திருந்தன. சகல தமிழ்க் கட்சிகளுமே முரசில் எரிச்சல் பட்டிருப்பர். பல இலட்சங்களை கொட்டி அவர்கள் பிரசாரம் செய்ய, முரசு வாக்காளர்களை எட்டிப் பிடித்து நிறுத்திக் கொண்டு இருந்தது. எரிச்சல் வராமல் போகுமா?! ஆனால் முரசின் பணியை மக்கள் பாராட்டுவார்கள்!

எம்.பாலசுந்தரம், நல்லூர்.

முரசுக்கு!

அம்பாறையில் ஊர்காவல் படையின் படுகொலை வேட்டையை கண்டிக்கக்கூட தமிழ்க் கட்சிகளுக்கு நேரமில்லை. கிழக்கிலும் தேர்தல் நடந்திருந்தால், முண்டியடித்து கண்டித்திருப்பர். தேர்தலில் வாக்குப் பெறத்தான் தமிழ்க் கட்சிகளின் வாய் திறக்கும். அறிக்கைகள் பறக்கும். கிழக்கில் தேர்தல் நடந்தால் நாமும் முட்டைதான் போடவேண்டி இருக்கும்.

வே.வாமதேவன், காரைதீவு.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

# இனவாதத்தைத் தூண்டிவிடத் திட்டம்!

## ஆளும் அணிக்கு எதிரான சக்திகள் பிரசாரம்

நாட்டில் இனப்பதற்றத்தை ஏற்படுத்த ஆளும் கட்சிக்கு எதிரான சக்திகள் தூபமிட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இன,மத உணர்வுகளைத் தூண்டும் விதமான ஊர்வலங்கள், பிரசாரங்கள் என்பவற்றின் பின்னணியில் பிரதான கட்சிகளின் பிரமுகர்கள் சிலர் உள்ளனராம்.

ஆளும் தரப்புக்கு எதிரான தங்கள் நிலைப்பாடுகளுக்கு ஆதரவு தேடும் வாய்ப்பாக தலதா மாளிகைத் தாக்குதலைப் பயன்படுத்துவதுதான் எதிரணிகளின் நோக்கம்.

குறிப்பிட்ட கட்சிகள் தங்கள் நோக்கங்களை நிறைவு செய்ய தூண்டிவிடும் சக்திகள் இனவாதத்தைத் தோற்றுவிக்கும் சக்திகளாக உள்ளன என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

கொழும்பிலும், கண்டியிலும் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்த முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர் தூண்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரச தரப்புக்கும் தலதா மாளிகைத் தாக்குதல் பாரிய நெருக்கடிகளை தோற்றுவித்திருக்கிறது.

வடக்கு-கிழக்கு யுத்த வெற்றியை நம்பியே அடுத்த தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலையில் அரசாங்கம் இருந்தது.

**ஆளும் கட்சி**

ஆனால், யுத்த நிலவரங்கள் ஆளும் தரப்பின் அரசியல் அடித்தளங்களையும் ஆட்டம் காணச் செய்வதாகவே மாறிவருகின்றன.

தற்போதைய கட்டத்தில், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்போவதாகவோ, பொதுத் தேர்தலை நடத்தப்போவதாகவோ எதிரணியை மிரட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நிலவரத்தை தனக்கு சாதகமாக்க முற்பட்டுள்ள ஐ.தே.கட்சியினர் அரசை ராஜினாமாச் செய்யுமாறும், பொதுத் தேர்தல் நடத்துமாறும் கோரும் நிலைக்கு வந்துள்ளனர்.

**படை நடவடிக்கை**

ஜயசிக்குறுய் நடவடிக்கையை தீவிரப்படுத்துவதாகக் காண்பித்து, தலதா மாளிகை குண்டுவெடிப்பின் தாக்கத்தை தணிக்க அரசு முயலலாம் என்று நம்பப்படுகிறது.

அநேகமாக சுதந்திரப் பொன்விழாவின் பின்னர் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை தீவிரப்படுத்தி, அதனை பெரியளவில் பிரசாரப்படுத்த அரசாங்கம் முனையும்.

யாழ் உள்ளூராட்சித் தேர்தல் முனையை திறந்தது மூலம் புலிகளின் கவனத்தையும், சக்தியையும் பரவலாக்கலாம் என்று படையினர் நினைத்தனர்.

ஆனால், புலிகள் அரசின் திசைதிருப்பல்களுக்கு இழுபடாமல், தங்கள் இலக்குகளை திட்டவட்டமாகத் தெரிவு செய்து தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர்.

யாழ் உள்ளூராட்சித் தேர்தல் உட்பட பலமுனைகளில் புலிகளை இழுப்பதற்காக, படையினரும் பல முனைகளுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. அதனால் வன்னியிலும் படை நடவடிக்கை வீழ்ச்சி கண்டது. கண்டி நகரப் பாதுகாப்பு போன்ற முக்கிய தேவைகளுக்கும் படையினர் போதவில்லை.

எனவே பலமுனைகள் திறக்கப்பட்டமை படையினரைவிட புலிகளுக்கே சாதகமாகிவிட்டது என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். யாழ் குடாநாட்டு தேர்தல் பணிகளுக்கு பல்லாயிரம் பொலிசார் நாடெங்கும் இருந்து அனுப்பப்பட்டனர். வன்னியில் இருந்து படையினரும் கொண்டு செல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கைதானவர்கள் யார்?

கண்டி தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு தொடர்பாக சிலர் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மலையகப் பகுதிகளிலும் சுற்றிவளைப்பு- தேடுதல்கள் நடைபெற்றுவருகின்றன.

மலையகப் பகுதிகளில் தாக்குதல் நடத்தும் புலிகளின் அணிகள், தாக்குதல் முடிந்த கையோடு கிழக்குக்குச் சென்று விடுகின்றனர்.

அதிகாலை நேரத்தில் பாதுகாப்பு அரண்கள் இல்லாத பாதை வழியாக கிழக்கு மாகாணத்திற்கு செல்வது கஷ்டம் அல்ல.

அதனால் தாக்குதல் நடத்திய புலிகள் மலையகப் பகுதிகளில் மறைந்திருக்கலாம் என்று எதிர்பார்க்க முடியாது.

கண்டியில் இருந்து மட்டக்களப்புக்கு சென்ற தனியார் பஸ்ஸில் இருந்தே பலர் கைது செய்யப்பட்டனர். கண்டியில் நகைக் கடையில் வேலை செய்பவர்களே அவர்கள் என்றும், ஞாயிறு விடுமுறை தினம் என்பதால் வீடு செல்லப்புறப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது.

## புங்குடுதீவில் ஈ.பி.டி.பி. மீது தாக்குதல்

### புலிகள் இயக்கம் உரிமை கோரல்

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மடத்தடி வெளியில் இருந்த ஈ.பி.டி.பி முகாம்மீது புலிகள் இயக்கத்தினர் தாக்குதல் நடத்தினர்.

23.01.98 அன்று அதிகாலை 1.02 மணியளவில் அத்தாக்குதல் நடைபெற்றது.

புங்குடுதீவில் புலிகள் இயக்கத்தினர் நீண்ட காலமாக இருந்து வருகின்றனர். ஈ.பி.டி.பி. முகாம் பகுதியிலும் இரவு நேரங்களில் புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டம் இருப்பதுண்டு.

யாழ் குடாநாட்டில் உள்ள எந்தவொரு இயக்கத்தினர்மீதும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்புவரை புலிகள் பாரிய தாக்குதல்கள் எதிலும் ஈடுபட்டதில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்ட பின்னரே யாழ் குடாநாட்டில் உள்ள தமிழ்க் கட்சிகள்மீது புலிகள் இலக்கு வைக்கத் தொடங்கியுள்ளனர். அதன் ஆரம்ப அறிகுறிதான் ஈ.பி.டி.பி முகாம்மீதான தாக்குதல் என்று தெரிகிறது.

குறிப்பிட்ட தாக்குதலுக்கு புலிகள் காரணம் இல்லை எனவும், புலிகள் மறுப்பு விடுத்துள்ளனர் என்றும் ராய்டர் செய்தி நிறுவனம் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

25.01.98 அன்று காலையில் ஒலிபரப்பான புலிகளின் குரல் வானொலிச் செய்தியில் ஈ.பி.டி.பி முகாம்மீதான தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

புங்குடுதீவு பொறுப்பாளர் மேஜர் ஆனந்தன், கப்டன் அரவிந்தன் ஆகியோர் படையினரால் கொல்லப்பட்டமைக்கு காரணமானவர்கள் குறிப்பிட்ட முகாமில் இருந்தனர். அதன் காரணமாகவே முகாம் தாக்கப்பட்டது என்று புலிகள் தெரிவித்திருந்தனர்.

ஈ.பி.டி.பி தரப்பில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டனர். ஆர்.பி.ஜி. எல்.எம்.ஜி-01, ரி.56ரக துப்பாக்கிகள்-03, ரி.81 ரகத் துப்பாக்கி-01, ரி.56 பட்மொடல்-01 ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும், தமது தரப்பில் இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

வேலணை பிரதேச சபைக்கான ஈ.பி.டி.பி. முதன்மை வேட்பாளரும் இத் தாக்குதலில் பலியான எட்டுப்பேரில் ஒருவராவார்.

புலிகளின் குற்றச்சாட்டை ஈ.பி.டி.பி மறுத்துள்ளது. படையினருடன் இணைந்து இலங்கையின் எப்பாகத்திலும் எக்கட்டத்திலும் நாம் செயற்பட்டதில்லை. அரசியல் ரீதியாகவே புலிகளை விமர்சித்து வருகிறோம். அதேசமயம் எமது தற்காப்புக்காகவே ஆயுதங்களை வைத்திருக்கிறோம். வலியத் தேடிச் சென்று தாக்குவதில்லை. இதனை மக்கள் அறிவர் என்று ஈ.பி.டி.பி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பாதுகாப்பிலும் பாரபட்சம்

கொழும்பு வர்த்தகர்கள், 'லொறிகளுக்கான அனுமதிப்பத்திரம் (பாஸ்)' பெற வேண்டிய புதிய நடைமுறையால் சொல்லொணாத் துயரம் அடைந்துள்ளனர்.

புறக்கோட்டை 4ம், 5ம் குறுக்குத் தெருவில் மளிகை, பலசரக்கு மற்றும் உணவுப் பண்டங்களே பெருமளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இங்குள்ள சுமார் 300 வர்த்தக நிலையங்களில் 296 வரை தமிழ் வர்த்தகர்களுடையது.

பொலிஸார் அங்கு சென்று, குறிப்பிட்ட "அரிசி லொறிகள் வந்தனவா?" என்று கேட்டுத் தொல்லைப்படுத்துவதால் தென்னிலங்கை பெரும்பான்மையின வியாபாரிகள் அங்கு சென்று கொள்முதல் செய்துவரப் பயப்படுகிறார்களாம்.

புறக்கோட்டைப் பகுதி வியாபாரம் பாதுகாப்புக் கெடுபிடிகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுதக் கொள்வனவில் மோசடிகள்

### ஆங்கில வார இதழ் தெரிவிப்பு!

"கடந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதி அமைச்சர் ரத்வத்த 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் விடுத்த செய்தியில் "ஜயசிக்குறுய் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் புலிகளிடமிருந்து 96 சதவீதமான பிரதேசத்தைக் கைப்பற்றி தமது இலக்கினை எட்டிவிட்டனர்" என்றார்.

இவ்வாறான கணிப்புக்களையும் காலக்கெடுக்களையும் அமைச்சர் ரத்வத்த எத்தகைய முறையை அனுசரித்துக் கூறுகிறார் என்பதை வெளிப்படையாக அவர் கூறுவதில்லை.

இக்கூற்று உண்மையானால் இந்த நான்கு சதவீத இடத்தைக் கைப்பற்றுவதற்கு இந்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் பாரிய தொகை அவசியமில்லை என்றாகி விடுகிறதே.

ஆயுதக் கொள்வனவுகளில் இடைத்தரகர்கள் பெரும் பணத்தை சுருட்டுகின்றனர் என்பது தெளிவு. செல்வாக்குள்ள அதிகாரிகளுக்குக் கணிசமான தொகையைத் தந்துவிட்டு தத்தமக்குரிய கொள்முதல் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

கடந்த டிசம்பரிலும் இவ்வருடம் ஜனவரியிலும் பாராளுமன்றத்தில் அவசரகால நிலை தொடர்பான விவாதங்களின் போது எதிர்க்கட்சியால் சில சம்பவங்கள் சுட்டிக் காட்டப்பட்டன.

எனினும் முழுமையான தகவல்கள் பரந்த அளவில் கிடக்கின்றன. உண்மைகளை பத்திரிகைகள் மோப்பம் பிடித்துவிடாமலிருப்பதற்கும் பெரும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சில சம்பவங்கள் ஜனாதிபதி சந்திரிக்காவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது, அவர்- செல்வாக்குள்ள பலரின் ஒத்தாசையுடன் தோன்றிய புதிய ஆயுத முகவர் நிலையத்துக்கு வாய்ப்பு வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திட்டத்தை உரிய வேளையில் தடுத்துவிட்டார்."

இவ்வாறு சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

## வாக்காளர் அட்டை விநியோகம்

### தமிழ்க் கட்சிகள் அதிருப்தி!

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர் அட்டை விநியோகம் உரிய முறையில் நடைபெறவில்லை.

யாழ் தபாலகத்திற்கு சென்ற வாக்காளர் அட்டைக்குள்கூட உரியவர்களுக்கு அனுப்பப்படாமல் இருந்தன.

இதேவேளை தபால்காரர்கள் சிலரை தமிழ்க் கட்சிகள் சில கைக்குள் போட்டுக் கொண்டு வாக்காளர் அட்டைகளைப் பெற முயன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தபால்காரர் ஒருவர் வீடுவீடாக வாக்காளர் அட்டைகளை விநியோகித்துக் கொண்டிருந்தாராம். தங்கள் வீட்டில் குறிப்பிட்ட பெயர் உள்ளவர் இல்லை எனவும், வன்னியில் இருப்பதாகவும் பல வீடுகளில் கூறப்பட்டதாம். தபால்காரரோ கட்டாயமாக வாக்காளர் அட்டைகளை கொடுத்ததுடன், வைத்திருங்கள் மாலையில் வந்து பெற்றுக்கொள்கிறேன் என்றாராம்.

இந்த விடயம் கட்சி ஒன்றுக்கு தெரியவந்தது. குறிப்பிட்ட தபால்காரரை பிடித்துக் கேட்டனராம். கொண்டு திரியப் பாரமாக இருந்தது அதுதான் கொடுத்து வைத்தேன் என்றாராம்.

மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவாக இருக்கும் என்பது தெரிந்து, குளறுபடிகள் செய்து வாக்களிப்பு வீதத்தை உயர்த்த பலத்த முயற்சிகள் நடந்துள்ளன.

## வீடுகள் தகர்ப்பு! புலிகள் நடவடிக்கை

மட்டக்களப்பு-வாழைச்சேனை நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் புலிகள் இயக்கத்தினருக்கும் படையினருக்கும் இடையில் அவ்வப்போது இடம்பெறும் மோதலினால் முறுகல் நிலை மேலும் தீவிரமடைந்துள்ளது.

வாழைச்சேனையில் மக்களோடு மக்களாகப் புலிகள் பதுங்கியிருக்கிறார்கள் என்பது படையினரின் கணிப்பு. இத்தனைக்கும் மத்தியில் அப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலை சீரழிந்து போயுள்ளது. மக்களுடன் பதுங்கியிருந்து தாக்கிவிட்டுத் தப்பிக்கொள்ளும் உத்தியை சகல தரப்பினரும் கையாள்வதாக பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க, வாழைச்சேனையில் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தணிப்பதற்கு, அவர்கள் பரவலாக மேலும் பல இடங்களில் நிலை கொள்ளக்கூடும் என்பதனால், புலிகள் இயக்கத்தினர் அப்பகுதியில் உரியவர்களின்றிக் காணப்படும் பெரிய வீடுகளை இடிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள்.

இவ்விதம் கடந்தவாரம் பொதுமக்களுக்குச் சொந்தமான இரு பெரிய வீடுகளைப் பொதுமக்களைக் கொண்டு புலிகள் இயக்கத்தினர் தகர்த்துள்ளனர். இந்த வீட்டின் உரிமையாளர்கள் கொழும்பில் உள்ளனர். தகர்க்கப்படும் வீட்டுடமைகள் பொதுமக்களால் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது போன்று உரிமையாளர்கள் இல்லாத மேலும் பல வீடுகள் தகர்க்கப்படலாம் என்று தெரியவருகிறது.

தற்சமயம் உடைக்கப்பட்ட பெரிய வீடுகள் முன்னர் சிறுவர் நிலையங்களாகப் பாவிக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது.

முரசு வாசகர்கள் அனைவருக்கும் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்!

## மரங்கள்மீது படையினர்!

பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிகளாகக் கருதப்படும் இடங்களில், புலிகள் இயக்கத்தினர் தமது அலுவல்களை மேற்கொள்வதற்காக இரவு வேளைகளில் ஊடுருவுகிறார்கள் என்று தமக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து பாதுகாப்புப் படையினர், மாலையாகியதும் உயரமான மரங்கள்மீது ஏறிப் பதுங்கிக் கொள்கின்றனர்.

மாலையாகியதும் மரங்களில் ஏறிக்கொள்ளும் படையினர் இரா முழுவதும் கண்காணிப்பில் ஈடுபட்ட பின்னர் காலையில் மரங்களை விட்டு இறங்கி விடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் வாழும் ஒரு சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையினால், மாலையாகியதும் மக்கள் வீடுகளைவிட்டு வெளியில் வரவே அஞ்சுகின்றனர்.

## சிறப்புத் தலையங்கம்

*அன்புள்ள உங்களுக்கு வணக்கம்*
*கண்டியில்*
*தலதா மாளிகைமீது*
*நடைபெற்ற குண்டுவெடிப்பு*
*கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும்!*
*மத வழிபாட்டுத் தலங்கள்*
*மீதான தாக்குதல்கள்*
*எப்பகுதியில் நடந்தாலும்*
*ஏற்றுக்கொள்ள முடியாததே!*
*அதே சமயம்*
*கண்டியில்*
*இந்து ஆலயம் ஒன்றும்*
*இந்து கலாசார மண்டபமும்*
*ஒரு கும்பலால்*
*படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளன!*
*குருந்துவத்தை முத்துமாரியம்மன்*
*சித்திரத்தேரும் கொளுத்தப்பட்டுள்ளது.*
*தாக்கப்பட்ட ஆலயத்தை*
*அரச தொலைக்காட்சிகள்கூட*
*உரிய நேரத்தில்*
*காண்பிக்கத் தவறிவிட்டன!*
*தலதா மாளிகை*
*தாக்கப்பட்டதை*
*தமிழ்ப் பத்திரிகைகள்,*
*தமிழ்க் கட்சிகள்,*
*இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய*
*மத குருமார்கள்*
*கண்டித்துள்ளனர்.*
*அத்தகைய கண்டனங்கள்*
*வரவேற்கப்பட வேண்டியவையே!*
*அதே சமயம்,*
*பௌத்த மதகுருமார்கள்,*
*சிங்கள சகோதர பத்திரிகையாளர்,*
*சிங்கள அரசியல் கட்சிகள்*
*என்பன*
*இந்து ஆலய தாக்குதல் பற்றி*
*மூச்சுவிடாததும்*
*கவலைக்குரியதாகும்.*
*உணர்வுபூர்வமான முறையில்*
*இன ஒற்றுமையை*
*கட்டி எழுப்பவும்*
*மத நல்லிணக்கத்தை*
*தோற்றுவிக்கவும்*
*உழைக்க வேண்டியது*
*சகலரது பொறுப்புமாகும்.*

*அன்புடன்- ஆசிரியர்.*

## படையினரின் சகபாடிகள் கொட்டம்!

### அப்பாவிப் பொதுமக்கள் அவஸ்தை

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினருடன் கூட்டுச் சேர்ந்து செயற்படும் சகபாடிகளான சில தமிழ் இயக்கத்தவர்கள் மக்களைப் படாதபாடு படுத்துவதாகக் கூறப்படுகிறது.

அவர்கள் ஆங்காங்கே முகாமிட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் அப்பாவியான பொதுமக்கள், இந்த இயக்கத்தவர்களால், தமது விருப்பப்படி நடந்து கொள்ளுமாறும் பணிக்கப்படுகின்றனர். அதன் படி நடக்கத் தவறும் பட்சத்தில் புலிகள் என நாமஞ் சூட்டப்பட்டு படையினரிடம் காட்டிக் கொடுக்கப்படுகிறார்களாம்.

வீடுகளில் உள்ள யுவதிகள், கணவனை இழந்த இளம் பெண்கள், குறித்த இயக்கத்தவரின் பலாத்காரத்திற்கு, இல்லையேல் பழி வாங்கலுக்கு ஆளாக்கப்படுகிறார்களாம். இணங்க மறுக்கும் பட்சத்தில் பலவகையான பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருப்பதாக சம்பந்தப்பட்டோர் கண்ணீரும் கம்பலையுமாக வேதனை தெரிவிக்கிறார்கள்.

பாடசாலை செல்லும் சிறுவர்களிடம் குறித்த வீடுகளில் உள்ள யுவதிகளுக்கு அல்லது பெண்களுக்கு கடிதம் கொடுத்தனுப்புகின்றார்களாம். இவ்விதம் கடிதத்தை எடுத்துச் சென்று கையளிக்க மறுத்த ஒரு பாடசாலைச் சிறுவன் பலமாகத் தாக்கப்பட்ட சம்பவமொன்று சமீபத்தில் நடந்துள்ளது.

ஏற்கெனவே ஒரு விதவை பாலியல் வற்புறுத்தலுக்கு அழைக்கப்பட்டு வன்மையாக அவர் மறுத்தவுடன், அவரது யுவதியான மகள் பலாத்காரப்படுத்தப்பட்டுள்ளார். ஒருவாறு தப்பி புனர்வாழ்வு பெறும் வேளையில் அந்த யுவதியின் தம்பி கைது செய்யப்பட்டு, வன்முறைக்குள்ளாக்கப்பட்ட அந்த யுவதியை மீண்டும் அழைத்து வருமாறு கோரப்பட்டுள்ளாராம். இத்தகைய இரு சம்பவங்கள் மட்டக்களப்பின் வெவ்வேறு இடங்களில் இடம் பெற்றுள்ளன.

அப்பாவிப் பொதுமக்களால் தாங்க முடியாத பல துன்புறுத்தல்களை தமிழ் இயக்கத்தவர்களே மேற்கொண்டு வருவது இழிவான செயல் என்று இவர்களால் அவஸ்தைக்குள்ளாக்கப்பட்ட விதவைகளும் இளைஞர், யுவதிகளும் அழுது புலம்புகிறார்கள். இந்த விதத் துன்புறுத்தல்களிலிருந்து தப்பிக்கொள்ளும் வழிவகையில் பல குடும்பங்கள் தாய்வேறு பிள்ளைகள் வேறு என்று பிரிந்துள்ளன. பராமரிப்பு நிலையங்களையும், அநாதை இல்லங்களையும் நோக்கி பலர் ஓடித் தப்பியுள்ளார்கள்.

இது இவ்வாறிருக்க இவர்களால் துன்புறுத்தப்பட்ட பல இளைஞர்களும் யுவதிகளும் பழி வாங்கும் எண்ணத்துடன் வேறு வழியின்றி புலிகளில் இணையும் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## பணிகள் தீவிரம்

(கண்டி நிருபர்)

கண்டி தலதா மாளிகையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் எல்லாமாக 15 பேர் இதுவரையும் கொல்லப்பட்டுள்ளனர். 21 பேர் காயம் அடைந்துள்ளனர். சம்பவம் இடம்பெற்ற இடத்தை ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் ஆகியோர் பலரும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டு சுதந்திர பொன்விழாவைக் கொண்டாட பணிகள் இரவு பகலாக இடம்பெற்று வருகின்றன.

குண்டுகளை பொருத்தி வந்த நீல நிற எல்ப் லொறியின் சுக்கானம் (ஸ்ரியறிங்) சுமார் 200 யார் தூரத்தில் விழுந்திருந்ததைப் பொலிஸார் கண்டுபிடித்தனர். குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட நட்டம் பல இலட்சம் ரூபாவாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இப்பொழுது தலதாமாளிகைப் பக்கம் செல்ல எவருமே அனுமதிக்கப்படுவதில்லை.

## காலம் கடந்த கண்ணீர்ப் புகை!

### ஆலயம் மீது செங்கற்கள் வீச்சு!

(நமது நிருபர்)

கண்டி தலதா மாளிகையில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புச் சம்பவத்தின் எதிரொலியாக கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்திற்கு 10 இலட்சம் ரூபாவுக்கு நஷ்டம் விளைவிக்கப்பட்டுள்ளதாக ஆலய நிருவாகியின் சார்பில் திரு எஸ். பாலசுப்பிரமணியம் 'முரசு'க்குத் தெரிவித்தார்.

இந்த ஆலயத்துள் அன்றையதினம் நண்பகல் புகுந்த ஆயிரம் பேர் அடங்கிய கும்பல், ஆலயத்தின் உள்ளே இருந்த 10 உண்டியல்களை உடைத்து பணத்தை அபகரித்ததுடன் 22 சிலைகளை முற்றாகச் சேதப்படுத்தி விட்டனர் எனவும் அவர் மேலும் சொன்னார்.

ஆலயம் இப்பொழுது மூடப்பட்டுள்ளது. வழிபாடு செய்யவும் பக்தர்களுக்கு அனுமதிப்பதில்லை. கட்டுக்கலை வீதியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 5000 செங்கற்களை கையில் எடுத்து சரமாரியாக அவற்றை கோயிலை நோக்கியும், கடைகளை நோக்கியும் வீசி எறிந்து, கும்பல் சேதப்படுத்தியது.

சுமார் 50 யார் தூரத்தில் இருக்கும் கண்டி பொலிஸ் நிலையத்தில் இருந்து காலம்கடந்து கண்ணீர்ப்புகை செலுத்தி கும்பலைக் கலைக்க பொலிஸார் முன் வந்தனர்.

இதேவேளையில், கோயிலுக்கு 26 ஆம் திகதி காலை விஜயம் செய்த எதிர்கட்சித் தலைவர் திரு ரணில் விக்கிரமசிங்க, முதலமைச்சர் திஸாநாயக்க, அத்துக்கோரளை எம்.பி. ஆகியோர் மாநகரசபை உறுப்பினர் ஜோன் பாஸ்கரனுடன் ஆலயத்துக்கு ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிட்டார்.

இது இவ்வாறிருக்க கண்டி நகரில் சுமார் 15 வீடுகள் பேராதனை வீதியில் கல்லெறிந்து சேதமாக்கப்பட்டன. இப்பொழுது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதுடன் நகரில் பலத்த பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

அன்றையதினம் குருந்துவத்த முத்துமாரியம்மன் சித்திரத்தேர் தீயிட்டு முற்றாக எரிக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 10 இலட்ச ரூபாவுக்குமேல் எனவும் தெரியவந்துள்ளது.

## புலிகள் தடை விதிப்பு

(காரைதீவு நிருபர்)

இலங்கையின் 50வது சுதந்திரப் பொன்விழா தொடர்பாக நாடளாவிய ரீதியில் சகல அமைச்சுக்களும், திணைக்களங்களும் நிகழ்ச்சிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளன.

குறிப்பாக கல்வியமைச்சு அன்றைய தினம் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த வேண்டிய நிகழ்ச்சி நிரலை மாகாண கல்வித்திணைக்களம் ஊடாக அனுப்பிவைத்துள்ளது. பொலிஸாரும் அந்தந்த பிரதேசங்களில் விழாவினைக் கொண்டாட பொதுமக்களின் ஒத்துழைப்பை கோரியுள்ளனர்.

இந்த வேளையில் அம்பாறை மாவட்டத்தில் சில பகுதிகளுக்கு புலிகளின் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளதாம். அதில் சுதந்திர தின விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்க வேண்டாம் எனவும் கூறப்பட்டுள்ளதாம்.

அதிகாரத் தரப்பில் நடைமுறைப்படுத்த வேண்டிய சூழ்நிலை, மறுதரப்பில் பகிஷ்கரிக்க வேண்டிய சூழ்நிலை. தமிழ்ப் பிரதேச பாடசாலைகள், அதிகாரிகள் இருதலைக் கொள்ளி எறும்பு நிலையில் தீர்மானமின்றி அரைகுறையுடன் செயல்படுவதாகத் தெரிகிறது.

# யாழ்ப்பாணத்தில் மின்சாரம்
## இரட்டிப்புச் செலவு!

யாழ் மாவட்டத்துக்கு பிரிட்டிஷ் உதவியின் கீழ் வழங்கப்பட்ட மின் இயந்திரத்தால் வழங்கப்படும் மின்சாரம் கூடுதலாக பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கி, எஞ்சியதே பொதுமக்களுக்கு பெயருக்கு வழங்கப்படுகிறது. மின்சாரம் என்ற பெயரில் மாதாந்தம் ஒவ்வொரு குடியிருப்பாளரும் 66 ரூபா கட்டவேண்டும். அத்துடன் லாம்பும் கொழுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் எப்பொழுது மின் சாரம் நிற்கும் என்பது அந்த இயந்திர இயக்குநருக்குத் தான் தெரியுமே தவிர மக்களுக்குத் தெரியாது.

சில சமயம் சாப்பிடும்போது நிற்கலாம். சிலவேளை பெயருக்கு 5 நிமிடம் மட்டும் கண்ணைக் காட்டி விட்டு போய்விடும்.

தற்சமயம் சில பகுதிகளில் மூன்று நாட்களுக்கு ஒரு தடவையும் சில பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவையும் பெயருக்காகவும் காசுக்காகவும் மின் வழங்கப்படுகிறது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவெனில் ரி.வி. மோட்டார், டெக் இவை எல்லாம் பாவிப்பவர்கட்கும் மாதம் 66 ரூபா. ஒன்றும் பாவிக்காமல் தனிய இரண்டு மூன்று பல்பு எரிப்பவர்க்கும் 66 ரூபா. இதில் எதுவித பாரபட்சமும் கிடையாது. சுருங்கக் கூறின் எமது பணத்தை கொண்டு இராணுவ முகாம்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.

அத்துடன் எல்லாப் பகுதிக்கும் சரியான அளவில் மின்சாரம் வழங்கப்படுவது இல்லை. சில இடங்களில் சகல மின் பாவனைப் பொருட்களும் பாவிக்கக்கூடியதாக உள்ளது. சில இடங்களில் அரிக்கன் லாம்பும் பக்கத்தில் வைத்தால்தான் பிள்ளைகள் படிக்க முடியும். இதனை மின்சார சபையில் போய் முறையிட்டால் எதுவித நடவடிக்கையும் எடுப்பது இல்லை. "மின்சாரம் இப்படித்தான் தருவோம். விருப்பம் என்றால் எடுங்கள்" என்று பொறுப்பற்ற முறையில் பதில் தருகிறார்கள். மின்சாரம் வந்ததன் பின் இரட்டிப்புச் செலவு ஏற்பட்டுள்ளது. மின் கட்டணம் 66 ரூபா. மண்ணெண்ணைக்கு புறம்பாக 100 ரூபா. இதையாரிடம் சொல்லி அழுவத் என்பது தெரியவில்லை.

மு.சின்னத்துரை, யாழ்ப்பாணம்.

# பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்!
## மோப்ப நாய்களும் உலா

(கண்டி நிருபர்)

கண்டி நகரில் இலங்கையின் சுதந்திர பொன்விழா ஏற்பாடுகள் துரிதமாக்கப்பட்டுள்ள இவ்வேளையில் நகரின் எட்டுத்திக்குகளிலும் பலத்த பாதுகாப்பு முன்னேற்பாடுகள் பரவலாக்கப்பட்டுள்ளன.

மோப்பம் பிடிக்கும் நாய்களின் துப்புத் துலக்கும் பணியும் தினமும் நடைபெறுகின்றன. நடைபாதை பத்திரிகை விற்பனையாளர்கள் உட்பட ஏனைய சிறு வியாபாரிகளின் நடமாட்டமும் தலதா வீதி உட்பட எல்லா இடங்களிலும் தடுக்கப்பட்டுள்ளன. சிவில் உடை தரித்த பொலிஸார் எல்லா இடங்களிலும் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். துண்டுப் பிரசுரம் மூலம் பொதுமக்களும் நகர வரியிறுப்பாளர்களும் கடைப்பிடிக்க வேண்டிய சில ஆலோசனைகளும் கடமைகளும் பற்றிய விளக்கத்தை பொலிஸார் வழங்கியுள்ளனர்.

பெப்ரவரி 3ம் திகதி பொன்விழா தொடர்பாக ஏற்பாடாகி இருந்த அரச பெரஹறாவும் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது. நகரின் மாடிக் கட்டடங்கள் பலவும் வெண்ணிறச் சோலை போன்று காட்சியளிக்கின்றன. முப்படை, பொலிஸ் அணிவகுப்பு மரியாதையுடன் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி தலதாமாளிகையில் இருந்து உரையாற்றவும் இருக்கின்றார். ■

# காத்தான்குடி பஸ் சாரதி குடிபோதையில்!
## கொழும்பில் பயணிகள் தத்தளிப்பு!

காத்தான்குடி பஸ் டிப்போவின் சாரதியொருவர் குடிபோதையில் முரண்டு பிடித்ததால் கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கும் காத்தான்குடிக்கும் வரவிருந்த பயணிகள் கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இரவு வேளையில் தத்தளிக்க வேண்டியேற்பட்டது.

கடந்த 16.01.98 அன்றிரவு ஒன்பது மணிக்கு கொழும்பு மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து காத்தான்குடியை நோக்கி 'இன்ரசிற்றி' கடுகதி பஸ் ஒன்று புறப்பட ஆயத்தமாக இருந்தது.

அந்த பஸ்ஸின் சாரதியாக இருந்த ஏ.எம். நயீம் (இல.8) என்பவர் நிறைந்த மதுபோதையில் இருந்துகொண்டு, பஸ்ஸில் ஏற வந்த பயணிகளிடம் இலஞ்சம் கேட்டு வாய்த்தர்க்கம் புரிந்துள்ளார்.

அவர் நிறை மதுபோதையில் தள்ளாடிய நிலையில் பயணிகளைத் தூஷிக்கிறார் என்ற தகவலை அறிந்த மத்திய பஸ் நிலைய அதிகாரிகள் உடனடியாக பஸ் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அனுப்பியபோது, பஸ்ஸிலிருந்த சாரதியும், நடத்துநரும் பஸ்ஸிலிருந்து இறங்கித் தப்பியோடியுள்ளார்கள். இந்த இக்கட்டான நிலையில் பயணத்திற்கு அந்த இராப்பொழுதில் வேறு ஒழுங்குகளும் தெரியாத பயணிகள் தத்தளிக்க வேண்டியிருந்தது.

பயணிகளின் அழுகுரல்களும் விசனமும் எழுந்ததால், இந்நிலைமையைக் கருத்திலெடுத்த கொழும்பு மத்திய பஸ் தரிப்பு நிலைய அதிகாரிகள் உடனடியாகப் போக்குவரத்து அமைச்சுக்கும், காத்தான்குடி பஸ் டிப்போவுக்கும் அறிவித்ததுடன் மாற்று ஏற்பாடாக அந்த பஸ்ஸை (இல. 62-4657) கதுறுவெல வரைக்கும் கொண்டுசெல்வதற்கு ஒரு சிங்கள சாரதியையும், நடத்துநரையும் ஒழுங்கு செய்திருந்தனர்.

அந்த ஏற்பாட்டின் பேரிலும் தத்தளித்துப்போய்விட்ட பயணிகள், பயணத்தைத் தொடர்வதற்கு முன்வந்து உதவிய பெரும்பான்மை இன சாரதி, நடத்துநர் ஆகியோரின் சேவை மனப்பான்மையின் காரணமாகவும், பயணிகள் ஒருவாறு கதுறுவெலயை அடைந்து மட்டக்களப்பை வந்து சேர்ந்தனர்.

காலையில் மட்டக்களப்பை அடைய வேண்டிய பயணிகள் மாலையிலேயே வந்து சேர்ந்தனர்.

தக்க தருணத்தில் மத்திய பஸ் நிலைய அதிகாரிகள் எடுத்த சாதுரிய நடவடிக்கையினால் சம்பந்தப்பட்டசாரதியின் நடவடிக்கையினால் ஏற்படவிருந்த பெரும் உயிராபத்துத் தவிர்க்கப் பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட சாரதியும், நடத்துநரும் மேலதிக விளக்கமளிப்பதற்காக கொழும்பு மத்திய பஸ் நிலையத்திற்கு அழைக்கப் பட்டிருக்கிறார்கள். ■

# கிழக்கிலங்கை பஸ் கம்பனிக்குள் ஊழலும் மோசடியும்

கிழக்கிலங்கை புதிய பஸ் கம்பனி (NEBO) ஊழியர் ஒருவர் வேலை நீக்கப்பட்டது தொடர்பாக தொழில் நீதிமன்றத்தில் நிருவாகத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. ஆனால் வழக்கில் தீர்ப்பு பஸ் கம்பனி நிர்வாகத்திற்கே சாதகமான நிலையிலுள்ளபோது, ஊழியருக்கும் பஸ் கம்பனி நிர்வாகத்திற்குமிடையேயுள்ள இழுபறி நிலையைத் தக்க தருணமாகப் பயன்படுத்த முயன்றார் இந்த பஸ்கம்பனியின் உயர் தலைமையிலுள்ளவரும், அரசியல் கட்சியொன்றின் அமைப்பாளருமான ஒருவர். உடனடியாகக் காரியத்தில் இறங்கினார்.

வழக்குத் தொடுத்த ஊழியருடன் பேரம்பேசி, அவர் வேலை இழந்த காலம் முழுவதற்கும் அரைச் சம்பளத்துடன் வேலையையும் வழங்குவதாக உறுதியளித்து, ஏற்கனவே சட்டத்தரணியொருவர் மூலமாக நடந்து கொண்டிருந்த வழக்கை, சட்டத்தரணிக்கும் தெரியாமல் கோவையைப் பெற்று வேறொரு சட்டத்தரணி மூலமாக வழக்காடி ஊழியருக்குச் சாதகமாக தீர்ப்பைப் பெற்று விட்டாராம். இதன்படி சென்ற 16.01.98 லிருந்து அந்த ஊழியருக்குத் தற்காலிக வேலையும், வேலை நீக்கப்பட்டிருந்த காலம் முழுவதற்கும் அரைச் சம்பளமும் வழங்கப் பட்டது.

இதனிடையே கடந்த 18.01.98 அன்று சபையின் நிருவாகக் கூட்டம் கூடியபோது, தலைவர் தன்னிச்சையாகச் செயற்பட்டு முறைகேடான விதத்தில் தீர்வு கண்டதற்கு வன்மையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அவரது சிபார்சும் நிராகரிக்கப்பட்டது. நிருவாக சபையின் உறுப்பினர் ஒருவரால் இந்த விடயம் உடனடியாக போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி மற்றும் மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. அவர்களது பணிப்பின்பேரில் மேற்படி பஸ் கம்பனியின் தலைவர் ஊழியருக்கு மீண்டும் வழங்கிய நியமனம் நிராகரிக்கப்பட்டிருப்பதோடு, இது விடயமாக மேலதிக விளக்கம் கோரி தலைவர் போக்குவரத்து அமைச்சுக்கு வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார். ■

# உள்ளே மட்டும் தமிழ்

இலங்கையின் தேசிய தின பொன் விழாவை முன்னிட்டு 1998 பெப்ரவரி 2ம் திகதி முதல் மூன்றாம் திகதிவரை பிரித் பாராயணமும், தான வைபவமும் இடம்பெறுகிறது. கண்டி மங்கள மண்டபத்தில் நடைபெறும் மேற்படி நிகழ்ச்சிக்காக புத்தசாசன அமைச்சால் அழைப்பிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அழைப்பிதழின் முகப்பில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது. அழைப்பிதழின் உள்ளே மட்டும் மும்மொழிகளில் நிகழ்ச்சி நிரல் வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரதினம் யாருக்கு? சுதந்திர தினத்தை முன்னிட்டு அமைச்சு ஒன்றால் நடத்தப்படும் நிகழ்ச்சியில்கூட தமிழுக்கு சம அந்தஸ்தைக் காணவில்லையே!

என்.ஏ.

# அதிகாரிகளின் மறதி

மட்டக்களப்பு-செங்கலடி பிரதம தபாலகத்தில் செயலிழந்திருந்து எடுத்துச் செல்லப்பட்டு, கடந்த 4 மாதங்களாகத் திருப்பிக்கொண்டு வரப்படாதிருந்த ஃபக்ஸ் இயந்திரத்தின் கதி குறித்து 'முரசு' மூலம் புகார் தெரிவித்ததையடுத்து, ஃபக்ஸ் இயந்திரம் அவசர அவசரமாகத் திருத்தம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது. ஆயினும் அந்த ஃபக்ஸ் இயந்திரத்தைப் பாவிக்க முடியாத நிலையுள்ளது. ஏனெனில் கொழும்புக்குச் சென்று திருத்தப்பட்ட அதை எடுத்து வந்த அதிகாரிகள், ஃபக்ஸ் இயந்திரத்தின் றிசீவரை (கேட்கும் பாகம்) மறதியாக வைத்துவிட்டு வந்துவிட்டார்களாம்.

அதிகாரிகளின் அசமந்தப் போக்குகளை விவரிக்க இது ஓர் உதாரணம். பாழ்பட்ட யுத்தம் பலருக்கு பிழைப்புக்கு மாத்திரம் வழி காட்டியிருக்கிறது என்கிறார் மனம் சலித்துப்போன ஓர் அன்பர்.


விளம்பரப் பகுதி

கொழும்பு 5இல் 3 படுக்கையறை கொண்ட மாடிவீடு வாடகைக்குண்டு.
இல.66, விஜயகுமாரதுங்க மாவத்தை.
Tel: 075-331962

கம்பியூட்டர் பாடநெறி
புதிய அணுகு முறை.
க.பொ.த (சா/த) எழுதிவிட்டீர்களா? அடுத்தது என்ன?
அரசாங்கத்தால் நடாத்தப்படும் NCCA பரீட்சைக்கு சிறப்பான வழி காட்டி.
அரசாங்கத்தில் பதிவு செய்த நிறுவனம்.
வெளிநாடு செல்வோருக்கு குறுகியகாலபாடநெறி.




Diploma in Computer Studies
காலம்: 5மாதம் கட்டணம்: 3000.00
Diploma in General Electrician
காலம்: 4மாதம் கட்டணம்: 2500.00
விண்ணப்ப முடிவுத்திகதி :- 28 பெப்ரவரி 1998
OPTIONAL SUBJECTS
Ms office, Page Maker, Corel Draw, Windows 95, Computer Assembling, House wiring, Coil rewinding etc.. மேலதிக விபரங்களுக்கு சுய முகவரி எழுதி, முத்திரை ஒட்டப்பட்ட காகித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.
MICS
36, 2nd Cross Street Puttalam ☎032-65370
NEC Kalpitiya Road, Nurachcholai.
9,19 th Lane Colombo-3 ☎ 01 575586


ASIAN COMPUTER SYSTEMS
5ஆம் ஆண்டில் வெள்ளவத்தையிலும் தனது கிளையை ஆரம்பிக்கின்றது.
APPROVED BY VOCATIONAL EDUCATION COMMISSION
INSTITUTE AFFILIATED TO IDPM (IMIS) ENGLAND
O/L மாணவர்க்கு விசேட கொம்பியூட்டர் பயிற்சிகள்
DIPLOMA IN COMPUTER STUDIES
Introduction , MS Windows, Dbase III+, Word Perfect, Lotus 123, Info. Technology
காலம் : 4 மாதம்
MICROSOFT OFFICE APPLICATION
Introduction , Microsoft Windows 95, MS Excel, MS Word, MS Power Point
காலம் : 3 மாதம் கட்டணம் : 5,750/=
DIP. IN DESKTOP PUBLISHING (Typesetting)
Aldus Pagemaker, Core Draw, Art Gallery, Word Art, Paint Brush, Type Styler,
காலம் : 3 மாதம் கட்டணம் 5650/=
ADVANCED DIP. IN INFO. TECHNOLOGY
Introduction, Windows 95, MS Word, MS Excel, Dbase III+, Foxpro 2.5, IT
காலம்:4 மாதம் கட்டணம் : 6500/=
GROUP & INDIVIDUAL CLASSES
Unlimitd Practical Hours
தவணைமுறை கட்டணங்கள்
வெளிநாடு செல்வோருக்கு குறுகிய கால வகுப்புகள்
ASIAN COMPUTER SYSTEMS
250 First Floor, George R. De. Silva Mw, Colombo 13. Tel : 075-338726
HARROW INTERNATIONAL No : 11, Rajasinghe Rd, Colombo 6. Tel : 077-315271

மட்டக்களப்பு மாந்திரீகம்
உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள்.
இரகசியம் வெளியாகாது.
DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.

சித்தர் மாந்திரீகம்
அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA, 30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06. TELE PHONE: 500067.
25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை


கலை அலங்கார வகுப்புக்கள்
★ சிகை அலங்காரம்
★ அழகுக்கலை
★ மணப்பெண் அலங்காரம்
★ 4 மாத கற்கைநெறி
ஆரம்பம்: 28-02-98
FASNAZ BEAUTY SALON
142,டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06.
தொலைபேசி: 589457


3ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி டிலானி [சேவியர்] றோய்ஸ்


அன்னை மடியில் 22.05.1969
இறைவன் அடியில் 18.12.1997

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு மறைந்தாலும் உன் இனிய நினைவுகள் எம் நெஞ்சங்களில் நீங்காது என்றும் நிலைத்திருக்கும்.
உன் பிரிவால் துயருற்று கலங்கும் அன்புக் கணவன், அப்பா, அம்மா, மாமா, மாமி, சகோதரிகள், மைத்துனர்கள்.

தகவல்
K.Anton Royce
3/377 Great South Road,
Greenlane Auckbeel,
Newzealand.




மனையாள மாந்திரிகம்
மனையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாணி தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோனாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ் வசிய யந்திரங்கள் உண்டு.



தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
162, KOTAHENA STREET,- MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
கல்வி நெறிகள்
★ 90 Days Spoken English
★ 90 Days Spoken Sinhala
★ Method of Book-Keeping
★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)
மேற்படி பாடநெறிகள் நேரிலும்/ தபால் மூலமும் நடைபெறுகின்றன. வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமே அறிந்து கொள்ளலாம.
மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணபப படிவத்துடன் தொடர்பு கொள்க.
விரும்பும் பாடநெறி:....................
பெயர்:....................
முகவரி....................
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11.Tel: 434770, 074-718592

றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கல்ர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano) ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**க**ண்டி தலதா மாளிகை புலிகளின் இலக்காக மாறிவிட்டது என்ற தகவல் 1995ம் ஆண்டில் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு கிடைத்துவிட்டது.

யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் புலிகள் கைவிட்டுச் சென்ற முகாம்கள் பலவற்றைப் படையினர் சோதனையிட்டனர்.

சோதனையிடப்பட்ட முகாம்களில் ஒன்றில் தலதா மாளிகையின் மாதிரி வடிவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக பாதுகாப்புத் தரப்பு உஷாரானது. அரசுக்கும் தகவல் தரப்பட்டது. கண்டியில் பாதுகாப்பு ஏற்பாடு பலப்படுத்தப்பட்டு, இரகசிய கண்காணிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

**இத் தகவலை நம்பகமான வட்டாரம் ஒன்றில் இருந்து பெற்று 175வது முரசில் (ஒக்டோபர் 20-26,1995) தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தோம்.**

தான் புலிகள் தீர்மானிக்கிறார்கள்.

தலதா மாளிகையின் அமைப்புப் பற்றிய விபரங்கள் புலிகளால் முன்னரே திரட்டப்பட்டிருந்தாலும், தாக்குதல் நடத்தும் முடிவு தேவை கருதியே எடுக்கப்பட்டிருக்கிறது.

**வடக்கு-கிழக்கில் புலிகளுடன் யுத்தத்தை நடத்திக்கொண்டு, சுதந்திரப் பொன்விழாவை அரசு கோலாகலமாக கொண்டாட முடியாது என்பதை உணர்த்தவும், பாரிய சவால் ஒன்றை விடுத்துக் காட்டவும்தான் தலதா மாளிகையை புலிகள் இலக்காகத் தேர்ந்தெடுத்தனர்.**

இலங்கையின் 50வது சுதந்திப் பொன் விழாவை கண்டியில் கொண்டாட ஜனாதிபதி சந்திரிக்கா முடிவெடுத்து அறிவித்த செய்தியை செவிமடுத்த மறுநொடியே, தலதா மாளிகைத் தாக்குதலுக்கு பிரபாகரன் நாள் குறித்துவிட்டார் என்று தோன்றுகிறது.

புலிகளின் நடவடிக்கைகள் எப்போதுமே படிப்படியாகவே வளர்ச்சி காண்பது வழக்கம். பாரிய தாக்குதலுக்கு முன்பாக குறிப்பிட்ட

காது. தாக்கமும் கட்டடத்தில் இருந்து மட்டுமல்லாமல், மக்கள் மனங்களில் இருந்தும் மறைந்துவிடும்.

அதனால்தான் பொன்விழாவுக்கு அதிக நெருக்கமும் இல்லாத, அதிக தூரமும் இல்லாத நாளாக தாக்குதலுக்கு திகதி குறித்துள்ளனர். பொன்விழாவுக்கு ஒன்பது நாட்களுக்கு முன்பாக தாக்குதல் நடந்திருக்கிறது.

கண்டிப் பாதுகாப்புக்கு நாடெங்கும் இருந்து பத்தாயிரம் பொலிசாரை 26.01.98 அன்று அனுப்பி வைக்க ஏற்பாடாகி இருந்தது. ஆனால் அதற்கு முதல்நாளே குண்டுலொறி புகுந்துவிட்டது. பாதுகாப்புத் தரப்புக்கு கடும் சந்தேகம் ஏற்பட்டிருப்பதும் அதனால்தான்.

**பாதுகாப்பு தரப்புக்குள் இருந்து தகவல் புலிகளுக்கு கசிகிறதா? என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது நாட்டின் உளவுத் துறை.**

சமீபகாலமாக தமது குண்டுத் தாக்குதல்களுக்கு சன நடமாட்டம் அதிகம் இல்லாத

நுழைவு வாயில் கதவை பூட்டினார்கள். அவர்கள் பூட்டிக்கொண்டிருக்கையில் லொறி நுழைவாயிலுக்கு வந்து நின்றது. லொறியில் இருந்து குதித்த இரு கரும்புலிகள், நுழைவாயிலை நோக்கி 'டொம்பா' என்று அழைக்கப்படும் சிறிய ரக மோட்டார்களுடன் விரைந்தனர்.

தலதா மாளிகைக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவதுதான் கரும்புலிகளின் திட்டம். ஆனால் அதற்கிடையே நுழைவாயிலை மூடிவிட்டு பொலிசார் உள்ளே ஓடிவிட்டனர்.

அதனால் கரும்புலிகளால் உள்ளே புக முடியவில்லை. உள்ளே புகுந்திருந்தால் பாரிய சேதத்தை விளைவித்திருப்பர்.

**தலதா நுழைவாயிலில் மோதி லொறியை வெடிக்கவைப்பதுதான் அடுத்த திட்டம். ஏனெனில் நுழையவாயிலை தாண்டி லொறி உள்ளே செல்ல இரும்புக் கேடரும், படிக்கட்டுக்களும் அனுமதிக்காது.**

எனவே, கரும்புலிகள் உள்ளே புகுமுடியவில்லை என்றதும், லொறிச் சாரதியான கரும்புலி தனது வோக்கியில் பொறுப்பாளருடன் தொடர்புகொண்டு அவசரமாக நிலையை விளக்கியிருக்க வேண்டும்.

'லொறியை மோது' என்று கட்டளை வந்ததும் லொறியால் நுழைவாயிலில் மோதி வெடிக்கவைத்தார்.

லாளிகளை தாக்கத்தான் புலிகள் ஆயுதங்களுடன் வந்தனர் என்றும், கலதாரி ஹொட்டலில் அமெரிக்க கொமாண்டோக்கள் தங்கியிருப்பதாக கருதி அவர்களைத் தாக்கவே புலிகளின் ஆயுத அணி குண்டு லொறியுடன் வந்தது என்றும் தப்பான கணிப்புக்களும் வெளியாகி இருந்தன.

தலதா மாளிகை குண்டு வெடிப்பால் மாளிகையின் நுழைவாயிலில் இருந்த சந்திர வட்டக்கல் இருந்த இடம் தெரியாமல் போயுள்ளது. அந்தக் கல் இருந்த பகுதியில்தான் பத்தடி ஆழக் குழி ஏற்பட்டுள்ளது.

தலதா மாளிகைக்கு முன்பாக இருந்த நாகதேவாலயம் பாரிய இடிபாடுகளுக்கு உள்ளாகியுள்ளது. பண்டைய சிங்கள மன்னர்களால் உருவாக்கப்பட்ட தூண்களைக் கொண்ட கட்டடம் அது. குண்டுவெடிப்பு அதிர்வால், அந்த தேவாலயத்தின் பெரிய கற்கள் நூறு யார் தூரத்திற்கு அப்பால் தூக்கிவீசப்பட்டுள்ளன. ஒவ்வொரு கல்லும் கிட்டத்தட்ட 200 கிலோ எடை வரும்.

தலதா மாளிகை முகப்புக்கூரை, அத்தாணி மண்பம் போன்றவை பலத்த சேதம் அடைந்துள்ளன. குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் இருந்து கிட்டத்தட்ட 50 அடி தூரத்தில் இருந்த புனித தந்தப்

# கண்டிக்குள் புகுந்த குண்டுலொறி

கண்டி தலதா மாளிகைப் பக்கமாக சந்தேகத்துக்குரியதாக நடமாடியதாகக் கூறி பல தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கடந்த இரண்டு வருடகாலத்தில் கைதாகினர். விசாரணைக்கு உள்ளாகினர்.

கண்டி தலதா மாளிகை மீதான தாக்குதலை பௌத்த வழிப்பாட்டுத்தலம் மீதான தாக்குதலாக சித்தரித்தாலும்கூட, அதற்கும் அப்பாற்பட்ட காரணங்களும் உள்ளன.

இலங்கைத்தீவை வெள்ளையர் முழுமையாக கைப்பற்ற முன்னர் சிங்கள மக்களின் கடைசி ராசதானியாக விளங்கியது கண்டி ராச்சியம்.

1815 மார்ச் 4ல் கண்டி ராச்சியம் வெள்ளையர் கையில் வீழ்ந்தது. கண்டி ராசதானியை இழந்தால் சகலதையும் இழந்தமைக்கு சமன் என்பதுபோன்ற நம்பிக்கை பௌத்த சிங்கள மக்களிடம் இருக்கிறது.

இலங்கையில் சிங்கள பௌத்த மக்களுக்கு மூன்று முக்கிய கலாசார நகர்கள் உள்ளன. கண்டி, பொலன்னறுவ, அநுராதபுரம். இந்த மூன்றில் கலாசார மைய நகராக இருப்பது கண்டி.

சிங்கள பௌத்த மத மக்களின் வழிப்பாட்டுத்தலமாக தலதா மாளிகை இருந்தாலும்கூட, மொத்தமான சிங்கள இனத்தின் அரசியல், கலாசார பெருமைகளை நினைவூட்டும் வரலாற்றுச் சின்னமாகவே கொள்ளப்படுகிறது.

**இலங்கைத்தீவின் நிர்வாகத் தலைநகராக கொழும்பு இருந்தாலும், கலாசார தலைநகர் என கண்டியை அழைக்கலாம். எனவே கொழும்புக்கு அடுத்ததாக புலிகளின் கவனத்தை கண்டி கவரும் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான்.**

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் நவாலிதேவாயலப் பகுதியில் நடைபெற்ற குண்டுவீச்சுக்கள், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் உட்பட பல இந்துக் கோவில்கள் சேதமாக்கப்பட்டமை போன்றவற்றின் பின்னர் எல்லாளன் படை என்ற பெயரில் எச்சரிக்கை கடிதங்கள் முன்னர் வெளியாகி இருந்தன.

**தமிழ்ப் பகுதிகளில் பாடசாலைகள், கோவில்கள் ஆகியன குண்டுவீச்சுக்களுக்கு உள்ளாகும்போது சிங்கள் மக்களோ, வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்களோ கண்டிப்பதில்லை என்றும், ஆகவே தாமும் பதிலடியில் ஈடுபடும்போது கண்டிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை எனவும் எல்லாளன் படை அறிக்கைகளும் எச்சரிக்கைகளும் விடுத்துக் கொண்டிருந்தது.**

அதனையடுத்தே பாடசாலைகளுக்கு விடுமுறையும் விடுக்கப்பட்டது. பௌத்த தேவாலயங்களுக்கும் பாதுகாப்புக்கள் அளிக்கப்பட்டன.

எனவே, நீண்டகாலமாக, கிட்டத்தட்ட இரண்டு வருட காலமாக எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குமீதுதான் புலிகளின் குண்டுலொறி மோதி வெடித்திருக்கிறது.

தலதா மாளிகை பற்றி மட்டுமல்லாமல் நாட்டின் முக்கிய கேந்திர மையங்கள், கலாசார மையங்கள் போன்றவை பற்றிய பல விபரங்களை புலிகள் ஏற்கனவே திரட்டி வைத்திருக்கின்றனர்.

எந்த இலக்கை தாக்குவது என்பதை அப்போதைய தேவை கருதி, அல்லது தாக்குதலுக்கு ஏற்ற வாய்ப்பைப் பொறுத்துத்

பிரதேசங்களையோ, பகுதிகளையோ தங்கள் நடமாட்டங்களுக்கு பரிச்சயமாக்கிக் கொள்வார்கள்.

மலையகத்தில் நடவடிக்கைகளுக்கான பின்தளமாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட புலிகளின் தலைமைப்பீடமே செயற்படுகிறது.

**சமீபகாலத்தில் கிழக்கில் பாரிய நடவடிக்கைளில் புலிகள் ஈடுபடவில்லை. தலைநகரிலும், மலையகத்திலும் ஊடுருவல்கள், தாக்குதல்களுக்கு உரிய விநியோகங்கள், குண்டு வாகனங்களை தயார்படுத்தல் போன்றவற்றில் புலிகளின் கிழக்குத் தலைமைப்பீடம் தன் கவனத்தை செலுத்திக் கொண்டிருந்தது.**

கொழும்பு கலதாரி குண்டுத் தாக்குதல் ஏற்பாடும், விநியோகமும் கிழக்கில் இருந்துதான் கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டன. அந்த நடவடிக்கையில் பலியான புலிகளில் பலர் கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்றும் தகவல்.

கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள் கடந்த சில மாதங்களாக அடையாளத் தாக்குதல்கள் என்றளவில் மட்டும்தான் இடம்பெற்று வந்தன.

அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. கிழக்கில் பாரிய தாக்குதல்களை நடத்தினால், படையினர் தங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளை தவிர்க்க முடியாமல் விஸ்தரிக்கக் கூடும். சோதனை அரண்களை அதிகமாக்கக் கூடும். அவ்வாறு செய்தால், கிழக்கில் இருந்து மலையகம் நோக்கிய தரைப் பாதையில் இடையூறுகள் ஏற்படலாம் என்று புலிகள் கருதியிருக்கலாம்.

14.11.97 அன்று கொழும்பில் களனி திஸ்ஸ அனல் மின் நிலையத்தில் 'மக்நெற்' குண்டுகள் வெடித்தபோது, பதுளையிலும் மின்மாற்றிகள் மூன்று தகர்க்கப்பட்டன.

**குன்றுகளில் குண்டுத் தாக்குதல் தொடரப் போவதற்கான ஆரம்ப செய்திதான் பதுளைத் தாக்குதல்.**

ஆனால் மலையகத்திலும் புலிகளின் கைநீள்கிறது என்பதைச் சொல்ல பாதுகாப்புத் தரப்பு வெட்கப்பட்டதால், ஏதோ உள்ளூர் சக்திகளின் கைவரிசை என்பதுபோல அமுக்கப் பார்த்தனர்.

**'முரசு' மட்டுமே பதுளை மின்மாற்றித் தகர்ப்பை புலிகளின் தாக்குதல் என்று கூறியிருந்தது. 18.01.98 அன்று பண்டாரவளையிலும் மின்மாற்றிகள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டன.**

அதன் பின்னர் 'குன்றுகளில் குண்டுகள்' என்ற தலைப்போடு எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் கூறப்பட்ட தகவல்களை, கண்டி குண்டு வெடிப்பு உறுதி செய்திருக்கிறது.

மலையகப் பகுதிகளில் சிறு சிறு தாக்குதல்கள் மூலம் தங்கள் நடமாட்டங்களுக்கு புலிகள் பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டனர். தாக்குதல் ஒன்று நடந்தால் பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி இருக்கும் என்பதையும் நோட்டம் பார்க்கவும் மின்மாற்றித் தாக்குதல்கள் பயன்பட்டன.

தலதா மாளிகைத் தாக்குதலும் கிழக்கில் உள்ள புலிகளின் பொறுப்பில்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு முதல்நாளோ அல்லது மிக நெருக்கமான தினத்திலோ தாக்குதல் நடத்துவது கடினம். அங்குலத்திற்கு அங்குலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

அதிக நாட்கள் முன்னதாக நடத்தினாலும் பயனில்லை. சுதந்திர தின விழாவை பாதிக்

# அரசியல் குண்டுலொறியுடன் ரணில்

நாட்களையே புலிகள் தெரிவு செய்துவருகின்றனர்.

தலதா மாளிகை தாக்குதலும் 25.01.98 அன்று ஞாயிற்றுக் கிழமைதான் நடைபெற்றுள்ளது. ஏனைய நாட்கள் என்றால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கும்.

ஓரளவான காலைக் குளிரில் கண்டி நகரம் தூக்கம் கலையாமல் இருக்க, அந்தத் தூக்கத்தை கெடுக்கப்போகும் குண்டுலொறி நகருக்குள் பிரவேசித்தபோது காலை ஆறுமணி.

வழக்கமாக காலை ஆறுமணிக்குத்தான் இரவுக் காவல் கடமையில் இருந்த பொலிசாரின்



பணி முடிவடையும். காலைநேர கடமைக்கு வரும் பொலிசார் பணியைப் பொறுப்பேற்பர். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அதிக விழிப்பும் உஷார் நிலையும் இருக்காது. அந்த விடயம்கூட புலிகளால் கவனத்தில் எடுக்கப்பட்டுத்தான் லொறி புகும் நேரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டி ஜனாதிபதி மாளிகைக்கும், சென் போல்ஸ் தேவாலயத்திற்கும் சமீபமாகவுள்ள காவலரணை சமீபித்தபோது, ஹெட் லைட் வெளிச்சத்தை பீய்ச்சியபடி லொறி சென்றது.

**காவலரணில் நின்ற பொலிஸ்காரர்களுக்கு கண்கள் கூசின. கூர்ந்து பார்த்தபோது லொறி என்பது தெரிந்தது. அதற்கிடையே லொறியில் இருந்து துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின.**

குறைந்தது ஐந்துபேர் லொறிக்குள் இருந்துள்ளனர்.

**துப்பாக்கிப் பிரயோகமும், லொறியும் விபரீதத்தை உணர்த்தியதால், காவலரணில் நின்ற பொலிசார் தப்பியோடினர். லொறி காவலரணில் வெடிக்கப்போகிறது என்று நினைத்தே தப்பிச் சென்றனர்.**

காவலரணில் தெருவுக்கு குறுக்காக வைக்கப்பட்டிருந்த 'கேடரை' இடித்துத் தள்ளிக் கொண்டு லொறி தலதா மாளிகை நுழைவாயிலை நோக்கி விரைந்தது.

காவலரணில் இருந்து தலதா மாளிகை கிட்டத்தட்ட நூறு யார் தூரத்தில் இருந்தது.

தலதா மாளிகையில் கடமையில் இருந்த பொலிசார் காவலரண் பக்கம் வெடிச்சத்தம் கேட்டதும் உஷாராகிவிட்டனர். எட்டிப் பார்க்கையில் லொறி வருவதைக் கண்டுவிட்டனர். ஒரே பாய்ச்சலாக பாய்ந்து தலதா மாளிகையின்

நகரம் அதிர்ந்தது. உள்ளே புக முடியாத இரு கரும்புலிகளும், லொறியை ஓட்டிவந்த கரும்புலியும் பலியாகினர்.

அதேசமயம் லொறி வெடிக்க முன்பாக அதற்குள் இருந்த இரண்டு மூன்றுபேர் குதித்தோடி வேறு ஒரு வாகனத்தில் ஏறிச் சென்றதாக சில தகவல்கள் கூறுகின்றன. இரண்டுபேர் லொறியில் இருந்து குதித்து ஓடியதை கண்டதாக சிலர் கூறுகிறார்கள்.

குண்டுவெடித்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்த குறைந்தது ஐந்து பேர் தேவை. ஏ.கே. 47 பட்மொடல் துப்பாக்கிகள்-03,மற்றும் டொம்பாக்கன்-02, கிரனேட்-12 ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

**இரண்டு வோக்கி டோக்கி தொடர்பு சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. பிரிதொரு வாகனத்தில் இருந்த குறிப்பிட்ட நடவடிக்கைக்கு பொறுப்பானவருடன், லொறியில் இருந்தவர்கள் தொடர்பு கொண்டபடி வந்துள்ளனர். வழிநடத்தப்பட்டுள்ளனர் என்பது தெரிகிறது. ஒரு வோக்கி தற்செயலாக பழுதடைந்தாலும் என்று முன்னெச்சரிக்கையாகஇரண்டு வோக்கிகள் லொறியில் இருந்துள்ளன.**

மோதலுக்கு அவசியம் ஏற்படவில்லை என்ற நிலையில், தங்கள் தரப்பு உயிரிழப்பை குறைப்பதற்காக, லொறியில் இருந்த புலிகளில் இரண்டுபேரையோ, மூன்று பேரையோ பிறி தொரு வாகனத்தில் ஏற்றிக்கொண்டு பறந்திருக் கலாம்.

வடக்கு-கிழக்குக்கு வெளியே நடைபெறும் புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக உள்ளவரை தளத்துக்கு பொறுப்பானவர் என்று அழைப்பர். அந்தப் பொறுப்பாளர் நேரடியாக நடவடிக்கையில் பங்கு கொள்ளமாட்டார். வழிநடத்தும் வேலையை செய்வதுதான் அவருக்குரிய கடமை.

**எனவே, தளத்துக்கு பொறுப்பானவரின் வாகனத்தில் ஏனைய புலிகள் தப்பிச் சென்றிருக்கலாம். அயுதங்களை கொண்டு சென்றால் சோதனை அரண்களில் சிக்க நேரும் என்பதால் கைவிட்டுச்சென்றிருக்கலாம்.**

எனவே, மூன்று கரும்புலிகளும், இரண்டு அல்லது மூன்று தாக்குதல் அணிப் புலிகளும் லொறியில் வந்திருக்கலாம். கலதாரி ஹொட்டல் குண்டுவெடிப்பில் ஐந்து புலிகள் பலியானார்கள். அதிலும் மூன்று பேர்தான் கரும்புலிகள்.

கலதாரி குண்டுவெடிப்பின் பாணியில்தான் தாக்குதல் திட்டமிடப்பட்டுள்ளது.

**காவலரண்களை தாக்கிவிட்டு இலக்கை நோக்கி செல்லும் புதிய உத்தியை புலிகள் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளனர். அதனால் காவலரண்களில் படைக் குவிப்பு செய்ய வேண்டி ஏற்படும். அப்படியில்லாவிட்டால் புலிகளின் குண்டு வாகனங்களை காவலரண்களில்கூட இனிமேல் தடுக்க முடியாமல் போகும் என்பதை அப்போதே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருந்தோம்.**

ஆனால், கலதாரி ஹொட்டல் காவ

பேழை தப்பியதுதான் அதிஷ்டம்.

**சுதந்திரதின விழாவுக்காக அமைக்கப் படவிருந்த மேடையில் இருந்து 20 யார் தூரத்தில்தான் குண்டுலொறி வெடித்திருக்கிறது.**

குண்டுவெடிப்பு அதிர்வால் சென் போல்ஸ் தேவாலயம் மற்றும் குயின்ஸ் ஹொட்டல், இலங்கை வங்கி உட்பட பல கட்டடங்களின் கண்ணாடிகள் நொறுங்கிப் போயுள்ளன.

**அதே தினத்தில் நுவரெலியாவில் மின்மாற்றிகள் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளன. கண்டி குண்டுவெடிப்புக்கு மூன்று மணிநேரம் முன்பாக மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன. கண்டியில் இருந்து 77 கிலோ மீட்டர் (48 மைல்) தொலைவில் இருக்கிறது நுவரெலியா.**

சுதந்திரதின விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை திறக்கப்படும். அப்பாதை வழியாக யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ் ஒன்றில் மக்களை அழைத்து வந்து பொன்விழாவில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. ஆனால் பிரபாகரன் குண்டுலொறியை அனுப்பி வைத்திருக்கிறார் என்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் அரசை சாடுகின்றன.

கண்டியில் தாக்குதல் நடைபெற்றமை பிரதிப்பாதுகாப்பு அமைச்சரை எதிர்க் கட்சிகள் சீண்டவும் வாய்ப்பாகியுள்ளது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் கோட்டை என வர்ணிக்கப் படுவது கண்டி. இவர் பிறந்தது வ்ளர்ந்தது எல்லாமே கண்டியில்தான்.

**பிரபாகரனின் பிறந்த ஊரான வடமராட்சிக்கு சென்று விட்டதாக படையினர் முன்னர் கூறியதுண்டு. பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கோட்டைக்குள் புகுந்து விட்டதாக புலிகள் கூறமுடியாது. ஏன் என்றால் தலதா மாளிகை தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரப்போவதில்லை. ஆனால், புலிகள் செய்யாத பிரசாரத்தை எதிர்க்கட்சி செய்யப்போகிறது.**

பௌத்த மதகுருமாரை தூண்டிவிட்டு அரசுக்கு நெருக்கடி கொடுப்பது ஐ.தே. கட்சிதான். குட்டையை சந்தோசமாகக் குழப்புகிறது எதிர்க்கட்சி. அரசுமீது மோதி ஆட்டம் காணச் செய்ய அரசியல் குண்டு லொறியுடன் புறப்பட்டுள்ளார் ரணில்.


**எதிர்க்கட்சியின் பிரசாரங்கள், பௌத்த மதகுருமாரின் அழுத்தங்கள் போன்றவற்றில் இருந்து மீள்வதற்காகத்தான் புலிகள் மீதான தடை அறிவிப்பு அவசர அவசரமாக வெளியிடப்பட்டது.**

தலதா மாளிகைத் தாக்குதலின் பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் அழுத்தமானது பௌத்த மதத்திற்கு அரசியலில் உள்ள அழுத்தமான பிடியை வெளிக்காட்டுகிறது.

கிறிஸ்தவ தேவாலயங்கள், இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டபோது மதரீதியான சோகங்கள் ஏற்பட்டனவே தவிர, அரசையே ஆட்டம் காணச்செய்யும் அரசியல் பூகம்பமாக மாறியதில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

**நாரதர்**

# அதிரடி அய்யாத்துரை



**தேவாரம் பாடிவிட்டு** 'நமோ பார்வதி பதியே' என்று கூறிமுடிப்பதுபோல, நம்நாட்டு செய்தி அறிக்கைகளில் தினமும் தவறாமல் இடம்பெறும் விஷயம் "ஜயசிக்குறுய் தொடர்கிறது; முன்னணி நிலைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன." செய்தி அறிக்கையில் இடம்பெறாவிட்டால்கூட வாசிப்பாளர்கள், இனிமேல் பழக்க தோஷத்தில் சொல்லித் தொலைக்கப் போகிறார்கள்.

**யாழ் தேர்தலில்** சகல முன்னணித் தமிழ்ப் பத்திரிகைகளும் நேர்மையான நிலைப்பாடு எடுத்ததை பலரும் பாராட்டுகினம். மேம்போக்காக எழுதுவதற்கும், ஈடுபாட்டுடன் எழுதுவதற்கும் வித்தியாசம் உண்டுதானே! இம்முறை யாழ் தேர்தல் நிலவரத்தில் சகல கட்சிகளையுமே விமர்சனத்திற்கு உள்ளாக்கிவிட்டன தமிழ்ப் பத்திரிகைகள். முரசுக்கும் அதில் சிறு துளிப்பங்குண்டு. வாக்களிப்பை கூடுதலாக்குவதற்குத்தான் சகல கட்சிகளுமே ஆவலாயிருந்தன. 'சனத்தைக் குழப்பவேண்டாம்' என்று அன்புக் கட்டளைகளும் இடப்பட்டதாம். அனுசரித்துப் போயிருந்தால் இலாபம்தான். அடக்கி வாசித்திருந்தால் வாசகர்கள் என்ன, பேப்பர் வாங்காமலோ விடப்போகினம்? ஆனால் சற்றும் மசியாமல் முன்னணிப் பத்திரிகைகள் எடுத்த நிலைப்பாட்டை பாராட்டவேண்டும்.

**உள்ளூராட்சித் தேர்தலில்** சகல தமிழ்க்கட்சிகளுக்கும் முரசுமீதுதான் காய்ச்சல். சில கட்சிகளின் மேடைகளில் ஒரே அர்ச்சனை. யாழ் மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில் குறைந்த வாக்காளர்களே இருந்து வாக்களித்தனர். அதனால் எற்பட்ட தாக்கங்களைக் களைய, இந்தமுறை அதிக வாக்குகளைப் பெற்றுக் காட்டுவது என்று ஜனநாயகக் கட்சி பா.உக்கள் ஒவ்வொருவரும்- படுதீவிரமாக- தனிப்பட்ட கௌரவப் பிரச்சனை போலக்கருதி உழைத்தார்கள். வாக்களிப்பை 'முரசு' குறைக்க முயல்வதாக அவைக்கும் சிறு கசப்பு. மாநகரத்தை கூட்டாகவேனும் பிடிக்க நினைத்த கழகத்தினருக்கும் 'முரசு' தொடரால் கோபம். கூட்டான கட்சிக்கு நீண்டநாள் கோபம். ஆனால் ரெலோயிஸ்ட்டுக்களுக்கு என்ன கோபம்? கடைசியில் இருந்து பார்த்தால் மட்டும்தான் முதலிடத்தில் வருவினம் எண்டு முதலிலேயே தெரிந்த கதைதான். 'முரசா'ல் அவைக்கு என்ன பாதிப்பு? வசைபாடிய காரணம் யாதோ?

**கொழும்பில் உள்ள** யாழ் முதலாளிகளிடம், யாழ் செல்லும் தங்கள் உறுப்பினர்களுக்கு 'ரிக்கெட்' போட்டுத்தருமாறு மிரட்டியதாம் ஒரு கட்சி. சில முதலாளிகளிடம் பல இலட்சங்கள் வசூலும் செய்யப்பட்டதாம். பம்பலப்பிட்டியில் உள்ள ஒரு தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒரு இலட்சம் சுளையாகப் பெறப்பட்டதாம்.

**முக்கியமான இயக்கங்களுக்கு** யாழ்ப்பாண தேர்தலில் குறைந்தது தலா 50 இலட்சம்வரை செலவானதாகத் தகவல். இந்த குட்டித் தேர்தலில் வெற்றிக்கொடி நாட்டினால்தான் எதிர்கால பெரிய தேர்தலில் அலைவீசும் என்பதால்தான் முக்கிய கட்சிகள் முழுக்கவனம் எடுத்தவையாம்.

**ரெண்டு எழுத்தார்** யாழில் தாக்குதல் நடத்துவர் என்று முரசு சொன்னது சரியாய்ப் போச்சலலோ! அவை விட்டுப்பிடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு 'தாக்குதல் நடக்காது, நடத்தும் யோசனை இல்லை' எண்டு தமிழ்க் கட்சிகள் நினைத்தவையாம். தாக்குதல் நடந்தபின்னர் சகல கட்சிகளும் வலு உஷார். பிரச்சனையான பகுதிகளை எட்டியும் பார்க்கவில்லை.

**'முரசு'தான் சிலருக்கு** கண்ணுக்குள்ளும் மனதுக்குள்ளும் குத்துகிறதாம். தாங்கள் எழுதுவதைப் பற்றி யாரும் பேசுகினமே இல்லை என்ற வயிற்றெரிச்சலில் பொறாமை வரத்தானே செய்யும்! முரசைப் போல எழுதியும் பார்க்கினம். அதுவும் சரிப்படவில்லை. கடைசியாக முரசை திட்டித்தீர்ப்பதிலும், முரசில் யார் யார் எழுதுகிறார்கள் என்று ஆராய்ச்சி செய்வதிலும் ஈடுபட்டிருக்கினம். நல்ல தொழில். தமிழ்க் கட்சியான கழக விசுவாசிகள் சிலரும் அதில் அடக்கம். தொடரட்டும் முயற்சி; சரியாகக் கண்டுபிடித்தால் ஆயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப்படும்!

**கூட்டான கட்சியின்** நிலமானவர் வானொலியில் உரையாற்றியதைக் கேட்டவர்களுக்கு வாழ்க்கை வெறுத்துப்போச்சு. செந்தமிழை எக்கச்சக்கமாக 'டமேஜ்' பண்ணிப்போட்டார். திருவானமலையின் சம்பந்தமானவர் தேர்தல் பிரசாரத்தில் ஒதுங்கியே இருந்திருக்கிறார். உண்மையாகவே அவருக்கு இதில் பிடிப்பில்லையாம். கிழக்கின் சிங்கத்தாருக்கும் விருப்பம் இல்லையாம். க்ட்சிக் கட்டுப்பாடு கருதி சிங்கத்தார் வெளியே பேசாவிட்டாலும், இந்த விவகாரங்களில் அவரது நிலைப்பாட்டைப் பாராட்டத்தான் வேணும்.

**இவ்வாரம் ஸ்பெயின் பொன்மொழி:**

**"முதலாளிக்கு கடன்கள் ஏறிவிட்டால், வேலைக்காரர்கள் திருடர்களாக மாறிவிடுவார்கள்!"**

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

**அற்புதன் — எழுதுவது**




# கடத்திச் சென்று— காட்டுக்குள் வீசினர்!

முல்லைத்தீவு உட்பட வன்னிப் பகுதிகளில் இந்தியப் படையினர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரமாக்கினர்.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதுபோலவே அத்தாக்குதல்கள் நடைபெற்றன.

புலிகளும் இந்தியப் படையினர் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருந்தனர்.

1989 ஜூலையில் முல்லைத்தீவு காட்டுப் பகுதியில் புலிகளின் முகாம் ஒன்றை இந்தியப் படையினர் சுற்றிவளைத்தனர்.

புலிகள் பதிற் தாக்குதல் நடத்தியதில் ஐந்து இந்தியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இந்தியத் துருப்புக்கள் சுற்றிவளைப்பைக் கைவிட்டு பின்வாங்கின. பலியான படையினரின் ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

வரலாற்றின் ஓட்டத்தில் சம்பவங்களும், தந்திரங்களும் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதையும் இதில் நோக்கலாம்.

விடுதலை இயக்கங்களிற்கு இந்தியா ஆயுதமும், பயிற்சியும் கொடுத்த காரணம், தமிழீழம் பெற்றுக் கொடுக்க அல்ல என்பது தெரிந்ததுதான்.

இலங்கை அரசை பணியவைத்து பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதும், இந்தியாவின் சொற்படி நடக்க வைப்பதுதான் இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளரின் இறுதித் திட்டமாக இருந்தது.

அதே தந்திரம் பின்னர் இந்திய அரசுக்கு எதிராக இலங்கை அரசுக்கு பயன்பட்டது.

இந்தியப்படையை தாக்க புலிகளுக்கு இலங்கை அரசு ஆயுதம் கொடுத்தது. இந்தியப்படை புலிகளால் அடிவாங்கிக் கொண்டிருக்கையில், ஜனாதிபதி பிரேமதாசா பின்வருமாறு அறிவித்தார்: "இந்தியப்படை வெளியேறியே தீரவேண்டும். இதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை."

புலிகளின் இராணுவ் ஆற்றலில் பிரேமதாசாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. இந்தியப்படைக்கு எதிராக புலிகள் நடத்திய தாக்குதல்கள் பிரேமதாசாவுக்கு பெரும் ஆச்சரியமாக இருந்தன.

பிரேமதாசாவுடன் நெருக்கமாக இருந்த சிலரது தகவல்களின்படி, பிரபாகரனையிட்டு அடிக்கடி பாராட்டிப் பேசுவாராம் பிரேமதாசா. தன் இருகை முஸ்டிகளையும் மடக்கிக்காட்டி "பிரபாகரன் நன்றாக சண்டைபோடுகிறார்" என்று சொல்வாராம் பிரேமதாசா.

பிரேமதாசா சந்திக்க விரும்பியும் கடைசிவரை அவரால் சந்திக்க முடியாமல்போன ஒருவர் பிரபாகரன்.

"பிரபாகரன் ஏற்கக்கூடிய தீர்வை தன்னால் வழங்க முடியாவிட்டாலும், பிரபாகரனை ஒருமுறையாவது நேரில் காண விரும்பினார் பிரேமதாசா" என்று அவரது நெருங்கிய சகா ஒருவர் கூறினார்.

### பிரேமா கோரிக்கை

இந்தியப் படையினர் புலிகளை தாக்குவதை நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்தது.

இதுவும் இராஜதந்திர நாடகத்தில் திருப்பமான ஒரு கட்டம்தான்.

இலங்கை அரசுப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே போர் மூளாமல் தடுக்க வந்தது இந்தியப்படை.

அதே இந்தியப் படை புலிகளுடன் போரிட்டுக் கொண்டிருக்க, இலங்கை அரசு புலிகளின் நண்பனாகியது. இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையிலான போரை நிறுத்த கோரிக்கையும் விட்டது.

மொத்தத்தில், இலங்கைக்கு படை அனுப்பவும், பின்னர் புலிகளுடன் போர் நடத்தவும் இந்திய அரசு கூறிய காரணங்கள் அனைத்துமே வலுவிழந்தன.

அந்த நிலையில் இந்தியப் படைகள் இலங்கையில் நிற்கும் ஒவ்வோர் நிமிடமும் ஆக்கிரமிப்பாகவே கருதப்படும் என்றாகியது.

அதனை இந்திய அரசு உணர்ந்தாலும்கூட, ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியின் அரசியல் தேவை கருதி இலங்கை அரசுடன் முரண்டு பிடிக்க வேண்டியதாயிற்று.

பாராளுமன்றத் தேர்தலை சந்திக்கத் தயாராகிக்கொண்டிருந்தார் பிரதமர் ராஜீவ் காந்தி. 'போன மச்சான் வெறுங்கையுடன் திரும்பி வந்தான்' என்று இந்தியப்படை விரைவாகத் திரும்பினால் தேர்தலில் பின்னடைவு ஏற்பட அதுவும் ஒரு காரணமாகிவிடும் என்று நினைத்தார் ராஜீவ்.

ஆகவே, இந்தியப் பொதுத் தேர்தல் நடந்து முடியும்வரை இந்தியப் படையை முற்றாக வாபசாக்குவதில்லை என்று ராஜீவ் காந்தி முடிவுசெய்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதி பிரேமதாசா வளைந்து கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.

### ஜே.வி.பி. பிரசாரம்

தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தினரின் நடவடிக்கைகள் தீவிரமாகிக் கொண்டிருந்தன.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதும் ஜே.வி.பி.யின் முக்கிய கோஷங்களில் ஒன்றாக இருந்தது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தவரை அந்தக் கோஷத்தை எழுப்பி தம்மை தேசபக்தர்கள் என்று ஜே.வி.பி. காட்டிக்கொண்டது.

ஆனால், பிரேமதாசாவின் முன்னால் ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்புக் கோஷம் எடுபடவில்லை.

ஏன் தெரியுமா? ஜே.வி.பி.யைவிட வேகமாக இந்திய எதிர்ப்பில் முன்னின்றார் பிரேமதாசா.

இலங்கைத் தொலைக் காட்சியில் இந்தியத் திரைப்படங்கள் ஒளிபரப்புச் செய்வதற்குத் தடை உத்தரவு பிரேமதாசாவிடம் இருந்து பறந்தது.

சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு பாகிஸ்தானின் தலைநகரில் நடைபெற இருந்தது.

இந்தியப் படை விவகாரத்தில் இந்திய அரசுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை காரணம் காட்டிய இலங்கை அரசு அதில் கலந்துகொள்ள மறுத்துவிட்டது.

இந்திய எதிர்ப்பில் ஜே.வி.பி. இரகசிய வானொலி தீவிர பிரசாரம் செய்தது.

இலங்கை அரசின் வானொலியில் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடுகளை பிரசாரம் செய்ய உத்தரவிட்டார் பிரேமதாசா.


நானா

மொத்தத்தில், இந்திய எதிர்ப்பில் ரோகண விஜயவீரா எட்டடி பாய்ந்தால், பிரேமதாசா பதினாறடி பாய்ந்தார்.

### நானா கொலை

உட்கொலைகள் பற்றிய பட்டியலில் தவறவிடப்பட்ட கொலைபற்றி நண்பர் ஒருவர் நினைவூட்டியிருந்தார். அதனை இங்கு குறிப்பிட்டுவிடுகிறேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈரோஸ் பொறுப்பாளராக இருந்தவர் நானா. இவரது சொந்தப் பெயர் பால்ராஜ்.

திருமலையைச் சேர்ந்தவர் என்றாலும் ஈரோசுக்காக 'நானா' வேலை செய்தது மட்டக்களப்பில்.



பெண்கள் விடயத்தில் நானா பலவீனம் உள்ளவர். பலவீனங்கள் மனித இயல்பு. ஆனால் அந்தப் பலவீனம் பலத்தையும் அழித்து விடுவதாக இருக்கக்கூடாது.

ஒரு ஆணும், பெண்ணும் விரும்பினால் அவர்கள் உடல்ரீதியாக உறவு வைத்துக் கொள்ளலாம் என்பது ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கங்களின் கருத்தாக இருந்தது.

ஆனால் 'நானா' காதலிப்பதாகவும், மணம் புரிவதாகவும் நம்பிக்கையூட்டி ஈரோஸ் பெண் உறுப்பினர்கள் சிலருடனும் உடல் ரீதியாக உறவு வைத்துக்கொண்டார் என்பது ஈரோசின் குற்றச்சாட்டு.

நானாவால் ஏமாற்றப்பட்ட பெண் உறுப்பினர்கள் இருவர் ஈரோஸ் தலைவருக்கு கடிதம் எழுதிவைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டனர்.

மட்டக்களப்பு வர்த்தகர்கள் சிலரிடம் ஈரோசின் பெயரால் பெறப்பட்ட நிதியை நானா கையாடியதாகவும் ஈரோஸ் தலைமைப்பீடம் குற்றம் சாட்டியது.

பெண்களுடன் உள்ள தொடர்பு பற்றி நானாவிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில்: " அது சிகரெட்டுக்கும் உதட்டுக்கும் இடையே உள்ள தொடர்பு போன்றது."

அதேசமயம் இயக்கத் தலைமையுடனும் நானா முரண்படத் தொடங்கினார்.

புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களின் தலைமைகளிடம் ஒரு பழக்கம் இருக்கிறது.

தங்கள் உறுப்பினர் ஒருவர் சமூகத்திற்கு தீங்கிழைப்பவராக, இயக்க கட்டுப்பாடுகளுக்கு முரண்பட்டவராக நடந்தாலும், தலைமையை கைக்குள் போட்டுக்கொண்டால் பிரச்சனை இல்லாமல் இருக்கலாம். பொறுப்புக்கள் கூட தரப்படும். குறிப்பிட்ட நபர்கள் தொடர்பான ஏனைய உறுப்பினர்களின் நியாயமான விமர்சனங்களைக்கூட தலைமை காதில் போட்டுக்கொள்ளாது.

குறிப்பிட்ட உறுப்பினர்கள் தங்களுடனும் முரண்பட்டால்தான் உடனே அவர்களது தவறுகளைக் கிளறுவர். குற்றப்பத்திரிகை வாசிப்பர்.

நானாவுக்கும் அதுதான் நடந்தது. 'நானா' தமக்கும் பிரச்சனையான ஆளாக மாறியதால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தலைமை முற்பட்டது.

நானா, ஈரோசின் புரட்சிகர நிறைவேற்றுக்குழு என அழைக்கப்பட்ட மத்திய கமிட்டி உறுப்பினர்.

உள்ளே ஏற்பட்ட பிரச்சனையால் நானாவும், இன்னொரு மத்திய கமிட்டி உறுப்பினரான கமலியும் தமது ஆதரவாளர்களுடன் பிரிந்து சென்றனர்.

அதன் பின்னர்தான் நானா பற்றிய குற்றச்சாட்டுக்களை ஈரோஸ் தலைமை உரத்துக் கூறத்தொடங்கியது.

1989ல் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்வெட்டி சின்னத்தில் சுயேட்சைக் குழு 2 இன் தலைவராகப் போட்டியிட்டார் நானா.

ஈரோஸ் சுயேட்சைக் குழுவுக்கு எதிராக நானாவின் சுயேட்சைக் குழுவை ஊக்குவித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

இவ்வாறான நடவடிக்கைகளால் நானாவை தீர்த்துக்கட்ட முடிவு செய்தது ஈரோஸ்.

1989 பங்குனி மாதத்தில் ஒருநாள் திருமலையில் வைத்து நானாவை ஈரோஸ் உறுப்பினர்கள் கடத்திச் சென்றனர். ஈரோஸின் மட்டக்களப்பு இராணுவப் பொறுப்பாளராக இருந்த கஜன் தலைமையில் சென்றவர்களே நானாவை கடத்திச் சென்றனர்.

தமது முகாம் ஒன்றில் வைத்து விசாரித்துவிட்டு நானாவை சுட்டுக் கொன்றனர். திருமலை காட்டுப்பகுதி ஒன்றில் நானாவின் சடலம் 1989 மார்ச் 30ம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கொலையை முன்னின்று கண்டித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அதற்கு பதிலடியாக ஈரோஸ் மட்டக்களப்பு இராணுவப்பொறுப்பாளர் கஜன் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார். (தொடர்ந்து வரும்)

---

# தூண்டப்பட்ட குண்டுத் தாக்குதல்

தலதா மாளிகை புலிகளால் தாக்கப்பட்டது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். புலிகளின் தவறான நடவடிக்கைகளை விமர்சிக்கவோ, கண்டிக்கவோ 'முரசு' பின் நிற்பதில்லை.

பௌத்தர்களின் வரலாற்றுச் சின்னமாக கருதப்படுவது தலதா மாளிகை. பௌத்த மக்களின் கலாசார மையங்களில் முக்கியமானது தலதா மாளிகை.

எனவே, தலதாமாளிகை தாக்கப்பட்டமை பௌத்த மக்களின் மனங்களை புண்படுத்தும் ஒரு செயல்தான்.

ஆனால், தலதா மாளிகையை சுதந்திரத்தினப் பொன்விழாவுக்கு தெரிவு செய்தமை சரியா? என்பதும் மிக முக்கியமான கேள்வியாகும்.

இலங்கைத்தீவு பல் தேசிய, பல் மத நாடாகும். ஆயினும் பௌத்த மதத்தை அரச மதமாக்கி இருப்பதால், ஏனைய இன, மத மக்கள் இரண்டாம்தர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அநீதிதான் தமிழ் பேசும் மக்களை ஆயுதம் ஏந்திய போராட்டம்வரை கொண்டு சென்றது. நாடெங்கும் யுத்தத் தீ கொளுந்துவிட்டெரியக் காரணமானது.

இந்நிலையில் இன்றைய ஜனாதிபதி இனப்பிரச்சனை தீர்வு பற்றி இனிக்க இனிக்க பேசிவருகிறார்.

தமிழ் பேசும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்றும், அதன் விளைவே தமிழ்பேசும் மக்களின் போராட்டம் என்றும் கூறிவருகிறார்.

ஒரே தேசம் ஒரே மக்கள் என்றும் ஜனாதிபதி கூறிவந்தார்.

இந்த நாடு சகல இன மக்களுக்கும் சொந்தம் என்று காட்டத்தான் அந்தக் கோஷம் என்றனர்.

எல்லாம் சரி, 50வது சுதந்திர தினத்தை மட்டும் ஏன் தலதா மாளிகைக்கு கொண்டு சென்றனர்? ஏன் கண்டியில் கொண்டாட முடிவு செய்தனர்?

அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் இங்கு காலடி வைக்க முன்னர் இந்த நாட்டில் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தங்களைத் தாங்களே ஆண்டுள்ளனர். தனித் தனி ஆட்சிகளையும், ராசதானிகளையும் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன், வன்னி மன்னன் பண்டாரவன்னியன் ஆகியோர் அந்நியரை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தியும் இருக்கின்றனர்.

அதேபோல சிங்கள மக்களும் அவர்களது மன்னர்களும் அந்நியரை எதிர்த்து போரிட்டுள்ளனர்.

சிங்கள மக்களின் கடைசி ராசதானியாகக் கருதப்படுவதுதான் கண்டி. திராவிட இனத்தைச் சேர்ந்தவனும், நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவனுமான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் தான் கண்டியின் கடைசி மன்னன்.

ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கும் வன்னியில் ஆண்ட தமிழ் மன்னன் பண்டாரவன்னியனுக்கும் இடையே நட்பு இருந்தது. அந்நியரை எதிர்த்துப் போராடுவதில் பரஸ்பர உதவிகள் தொடர்புகளும் இருந்தன.

அந்நியரை எதிர்த்துப் போராடியதில் சிங்கள மன்னர்களோ, தமிழ் மன்னர்களோ சளைத்தவர்களல்ல. தங்களுக்குள் கோடாலிக் காம்புகளாக இருந்த காட்டிக் கொடுப்பாளர்களால்தான் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனும் வீழ்ந்தான். பண்டார வன்னியன், சங்கிலியன் போன்றோரும் வீழ்ந்தனர்.



எனவே, ஒரு இனத்தைச் சேர்ந்தோர் மட்டுமோ, ஒரு மதத்தைச் சேர்ந்தோர் மட்டுமோ பழம் பெருமை பேசுவது முறையல்ல.

சுதந்திரம் நாடு முழுமைக்கும் உரியது என்றால், சகல இன, மத மக்களுக்கும் உரியது என்றால், எந்தவொரு இன, மதப் பெருமைக்கும் முன்னுரிமை கொடுப்பதாக சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெறக் கூடாது.

மூன்று இனத்திற்கும், நான்கு மதத்துக்கும் பொதுவான இடத்தில் 50வது சுதந்திரதினப் பொன்விழா கொண்டாடப்பட்டு இருக்குமானால் அது பொருத்தமாக இருந்திருக்கும்.

ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப இன்றைய ஜனாதிபதி இதய சுத்தியுடன் கருமம் ஆற்றுகிறார் என்று அவரை எண்ணிப் பெருமை கொள்ள முடிந்திருக்கும்.

ஆனால், இனிப்பான பேச்சுக்களுக்கு அப்பால், சுதந்திரப் பொன்விழாவை பௌத்த மத கலாசார மையத்திற்கு கொண்டுசெல்லும் பௌத்த மேலாதிக்க மனப்போக்குத்தான் இன்று மேலோங்கி இருக்கிறது என்பதையே நடப்புக்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இதனைச் சுட்டிக்காட்ட தமிழ், முஸ்லிம் தலைவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் முன்வரவில்லை.

தலதா மாளிகையை சுதந்திர தின கொண்டாட்டம் நடைபெற உள்ள இடமாக மாற்றியது மூலம், அங்கு தாக்குதல் ஒன்றுக்கான தூண்டுகோலை அரசுதான் ஏற்படுத்தியிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருப்பதில் உண்மை இருக்கிறது.

அதுவும், புலிகளின் தளமான வன்னியை ஊடறுத்து தரைப்பாதை ஒன்றை திறந்துவிட்டு சுதந்திரதினத்தை கொண்டாடப் போவதாக சவால் விட்டது அரசாங்கம்.

இப்படியெல்லாம் அரசியல், இராணுவ நலனுடன் சார்ந்த ஒன்றாக சுதந்திர தின விழாவை மாற்றிவிட்டு, புலிகளுக்கு சவால் விட்டுவிட்டு, புலிகள் தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்றும் அரசு நினைத்துக் கொண்டு இருந்திருந்தால் அது யார் தப்பு?

கண்டி தலதா மாளிகை தாக்கப்பட்ட பின்னர் அங்குள்ள தமிழ்க் கடைகள், இந்து ஆலயம், வாகனங்கள் என்பவை தாக்கப்பட்டுள்ளன.

நியாயமான கோபம் என்பதுபோல அதனைச் சித்தரிக்கப் பார்க்கிறார்கள். தலதா மாளிகைத் தாக்குதலை கண்டித்தவர்கள், இந்து ஆலயத் தாக்குதலை மட்டும் கண்டிக்காமல் இருப்பதும் விந்தைதான். சில தமிழ்க் கட்சித் தலைவர்கள்கூட இந்து ஆலயம் தாக்கப்பட்டதை கண்டிக்கவில்லை.

தலதா மாளிகை தாக்கப்பட்டதால்தான் இந்து ஆலயம் தாக்கப்பட்டது என்பது சரியான நியாயமல்ல.

அப்படிப்பார்த்தால், வடக்கு-கிழக்கில் ஏராளமான இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் குண்டுவீச்சுக்களால் தாக்கப்பட்டுள்ளன.

நல்லூரில் கடைசி மன்னன் சங்கிலியனின் சிலை சூரியக்கதிர் நடவடிக்கையின் போது உடைந்து தலைகீழாகத் தொங்கியது. சங்கிலியன் தோப்பின் கட்டட தூண்கள் ட்ரக் வண்டிகளால் கட்டி இழுத்து வீழ்த்தப்பட்டன.

வடக்கு-கிழக்கில் உள்ள எத்தனையோ வரலாற்றுச் சின்னங்களை அரசு பாதுகாக்கவோ, பத்திரப்படுத்தவோ முன்வரவில்லை. அவை தடம் இல்லாமல் அழிந்து வருகின்றன.

எனவே, நீதி, அநீதி பற்றி யார் மீது யாரும் குற்றம்சாட்ட முடியாத நிலைதான் இங்கு இருக்கிறது. நடைபெறுவது யுத்தம்! அதன் பாதிப்புக்கள் சகல இன, மத மக்களையும் புண்படுத்தியுள்ளன.

எனவே, இந்த அனர்த்தங்கள், அழிவுகள், நிம்மதிக் குலைவுகள் என்பவற்றுக்கான அடிப்படைக் காரணத்தை சுத்தமாக அழித்தொழிப்பதே ஒரே ஒரு பரிகாரமாகும்.

அதாவது; வறட்டுக் கௌரவங்களையும், சுயநல அரசியல் வரையறைகளையும் தாண்டி வந்து யுத்தத்தை நிறுத்திவிட்டு, நீதியான தீர்வொன்றுக்கான நிபந்தனையற்ற பேச்சை அரசும், புலிகளும் ஆரம்பிக்க வேண்டும்.

புலிகளுக்கு இராணுவத் தீர்வு இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு என்று பேசுவது அர்த்தமில்லாதது. இனப்பிரச்சனை இல்லாமல் புலிகள் இல்லை. புலிகள் இல்லாமல் இனப்பிரச்சனைக்கு தீர்வும் இல்லை. இது புலிச் சார்பு கருத்தல்ல. நடைமுறையில் மிக துல்லியமாக நிரூபணமாகியுள்ள கருத்து.

# மண்ணாகிவிட்ட வாழ்க்கையும் பொன்விழாக் கொண்டாட்டங்களும்

### அலசுவது- இராஜதந்திரி

ஐம்பதாவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களை கோலாகலமாக நடத்திமுடிப்பதில் ஆட்சியாளர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர்.

நாட்டின் தேசிய தின பொன்விழாவாகக் கூறப்பட்டாலும்கூட, பொதுஜன முன்னணியினர் தங்கள் சாதனைகளில் ஒன்றாக காண்பிக்க முற்படுவதையே அவதானிக்க முடிகிறது.

**இலங்கையின் சுதந்திரதினம் என்பது தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தளவில் முக்கியத்துவம் மிக்க ஒன்றாக எப்போதும் விளங்கியிருக்கவில்லை.**

வாளேந்திய சிங்கக் கொடியை தமிழ் பேசும் மக்கள் தங்கள் தேசியக் கொடியாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை வலியுறுத்தும் மேலாதிக்கச் சின்னமாகவே தேசியக் கொடி விளங்கியிருக்கிறது என்பதே அன்றுமுதல் இன்றுவரையான தமிழ் பேசும் மக்களின் மனோநிலையாக உள்ளது.

**இலங்கையின் தேசியக் கொடி, தேசிய கீதம் என்பவை தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அந்நியமானவையாகவே விளங்கிவருகின்றன.**

அரச விழாக்களிலும், பாடசாலை விழாக்களிலும் ஏற்றப்படுவதாகவும், பாடப்படுவதாகவும் மட்டுமே தேசியக்கொடி தேசியகீதம் என்பவற்றின் பயன்பாடு அமைந்திருக்கிறது.

மனப்பாடம் செய்து தேசிய கீதத்தை பாடும் தமிழ் பேசும் மாணவ மாணவியர்களும் அதனை உணர்வுபூர்வமாக செய்வதில்லை என்பதையும், இன்னொரு நாட்டின் தேசிய கீதத்தை பாடுவதுபோன்றே ஒப்புவிக்கின்றனர்.

**வெறுமனே தேசிய கீதத்தை தமிழில் பாடுவதன் மூலமோ, சுதந்திர தினம் பற்றிய செய்திகளையும், பிரசாரங்களையும் தமிழில் மேற்கொள்வது மூலமோ நாம் அனைவரும் ஒரு நாட்டின் மக்கள் என்ற உணர்வை ஏற்படுத்திவிட முடியாது.**

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் இந்த நாடு சொந்தமானது. நாம் அனைவரும் சகோதரர்கள், சமமானவர்கள் என்ற உணர்வுதான் உண்மையான தேசிய உணர்வாகும்.

தேசிய உணர்வை யாரும் வலுக்கட்டாயமாகவோ, அல்லது உதட்டளவிலான பேச்சுக்கள் ஊடாகவோ தோற்றுவிக்க முடியாது.

**இலங்கையின் சுதந்திரம் இந்தியாவைப் போன்று மாபெரும் போராட்டம் மூலம் பெறப்பட்ட ஒன்றல்ல. எனினும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தாக்கங்கள் இங்கும் சுதந்திரம் பற்றிய கோரிக்கைகள் எழக் காரணமாக அமைந்திருந்தன.**

அதுமட்டுமன்றி இந்தியாவைவிட்டு பிரிட்டிஷ்காரர்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதால்தான், இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது.

**இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சகல இன, மொழி மக்களும் பெருமளவில் பங்குகொண்டனர். சுதந்திரப் பேராட்டம் ஊடாக இந்திய தேசிய உணர்வும் உருப்பெற்றிருந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் சகல மாநில மக்களும் 'நாம் இந்தியர்' என்ற உணர்வுடன் அதனை கொண்டாடி மகிழ்ந்தனர்.**

இந்தியாவிலும் இன, மொழி, மாநில வேறுபாடுகள் இல்லாமல் இல்லை. ஆனாலும் தமக்குள் என்ன பிரச்சனை இருந்தாலும் 'இந்தியர்' என்ற பொது உணர்வுக்கு ஆட்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

ஆனால் இலங்கையில் பிரதானமாக இருப்பதோ மூன்று இனங்கள்தான். அதிலும் தமிழர்களும், முஸ்லிம்களும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். ஆகவே அதிக பேதங்கள் தலைதூக்காத வகையில் அனைவரும் இலங்கையர் என்ற தேசிய உணர்வை சுதந்திரம் கிடைத்த கையோடு கட்டியெழுப்பி இருக்க முடியும்.

சுதந்திரத்துக்காக மூவினங்களும் ஒன்றுபட்டு நின்று பாரியளவான போராட்டங்களை நடத்தும் சூழ்நிலை தோன்றவில்லை. சுதந்திரம் கிடைத்த பின்னர் ஒன்றுபட்ட நாட்டை கட்டியெழுப்பும் போராட்டத்தில் மூன்று இன மக்களையும் ஒன்றுபடுத்தியிருக்க வேண்டும்.

**வெள்ளையர்களிடம் இருந்த ஆட்சி அதிகாரத்தை கைமாற்றிக்கொண்டவர்கள் என்ற ரீதியிலும், பெரும்பான்மை இனத்தினர் என்ற காரணத்தாலும், ஏனைய இரண்டு இனங்களையும் அரவணைத்து தேசிய நீரோட்டத்தில் கலந்துகொள்ள வைத்திருக்க வேண்டிய பெரும் பொறுப்பு சிங்கள மக்களையும், அவர்களின் பிரதான கட்சிகளையுமே சார்ந்ததாக அமைந்திருந்தது.**

தமிழ் பேசும் மக்கள் நாடு சுதந்திரம் பெற்றநாளில் இருந்து, தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ள ஆர்வம் கொண்டவர்களாகவே இருந்தனர்.

தமிழ் பேசும் மக்களின் அன்றைய தலைமைகளும் ஐக்கிய இலங்கைக் கோட்பாட்டை முன்னிறுத்தி, அதன் வரையறைக்குள்ளாக கௌரவமான மக்களாக வாழ்வதையே வலியுறுத்தியும் வந்தன.

**டி.எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, பண்டாரநாயக்கா போன்றோருக்கும், என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, பீட்டர் கெனமன் போன்ற இடதுசாரித் தலைவர்களாகக் கருதப்பட்டோருக்கும் தமிழ் பேசும் மக்களிடையே நன்மதிப்பும், செல்வாக்கும் இருந்தன.**

மேற்கண்ட அனைத்து தலைவர்களுக்கும் மூன்று இனங்களையும் தேசிய நீரோட்டத்தில் அரவணைத்துச் செல்கின்ற அருமையான சந்தர்ப்பத்தை வரலாறு வழங்கியிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தக்கூடிய ஆட்சி அதிகாரமும், அதிகாரம்மிக்க பதவிகளும்கூட அவர்களுக்கு கிடைத்திருந்தது.

அந்த வாய்ப்புக்களை உதறித் தள்ளியதோடு, தங்களை சிங்கள மக்களின் இரட்சகர்களாக நிலை நிறுத்தி, வாக்குகளை கவர்ந்து கொள்வதிலும், பதவி வேட்டையாடுவதிலுமே மேற்கண்ட தென்னிலங்கைத் தலைவர்கள் அனைவரும் தீவிரம் காட்டியிருந்தனர்.

24 மணிநேரத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டுவந்து காட்டுவதாக சவால் விட்டவர் பண்டாரநாயக்கா. ஒரு மொழி மட்டும் ஆட்சி மொழியானால் நாடு இரண்டாகிவிடும் என்று எச்சரித்தவர் கொல்வின் ஆர்.டி. சில்வா.

அதே கொல்வின்களும், பீட்டர் கெனமன்களும், என்.எம். பெரேராக்களும்தான் 1972ல் சிறிமாவோ அம்மையாருடன் இணைந்து புதிய அரசியலமைப்பின் சிருஷ்டிகர்த்தாக்களாக மாறினார்கள்.

**இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்று பிரகடனப்படுத்தி, தமிழ்பேசும் மக்களுக்கு தேசிய நீரோட்டத்தில் இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கைகளையும் இல்லாதொழித்தது சிறிமாவோ தலைமையிலான மக்கள் முன்னணி ஆட்சியாளரேயாவர்.**

தற்போது பொன்விழா காலத்திலும் சிறிமாவோ அம்மையார்தான் பிரதமராக உள்ளார். அவரது சீமந்தப் புத்திரியார் ஜனாதிபதியாக இருக்கிறார்.

இனப்பிரச்சனை வளர்ந்தது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் என்று ஜனாதிபதி தற்போது திரும்பத் திரும்பக் கூறிவருகிறார். தனது குடும்பத்தினரையும், கட்சியையும் பாதுகாக்க அவர் முற்படுவதால் வரலாற்றினை மறக்க வேண்டியவராகிறார்.

இவ்வாறான சில சந்தர்ப்பங்களில் தங்களைத் தமிழ்க் கட்சிகள் என்று கூறிக் கொள்ளும் தலைவர்கள் மௌனமாக இருந்து செவி மடுப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. வரலாற்றுத் திரிபுகளுக்கான மௌன சாட்சிகளாக இவர்கள் மாறிக் கொண்டிருப்பதையே காணக்கூடியதாகவுள்ளது.

**இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பதவியில் இருந்த சகல அரசாங்கங்களும் தமிழ்பேசும் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கவே முயற்சித்து வந்திருக்கின்றனர்.**

சிங்கள மக்களிடம் வாக்குகளை வேட்டையாட மிகச் சுலபமான வழியாக இனவாதக் கோஷங்களை கருதியமையால், தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான உணர்வுகளை ஏற்படுத்த முனைந்தனர்.

'தமிழ் மக்கள் அதிகம் கேட்கிறார்கள், நாம் கொடுக்க மறுக்கிறோம். அதன் மூலம் சிங்கள மக்களின் உரிமைகளை பத்திரப்படுத்துகிறோம்' என்றெல்லாம் சொல்லத் தொடங்கினார்கள்.

நாட்டு மக்களின் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்த்து வைக்கத் தகுந்த திட்டங்கள் இல்லாத கட்சிகளுக்கும் பேரினவாதம் பேசுவது சுலபமான வேலைத்திட்டமாக மாறியிருந்தது.

ஆட்சியில் இருந்து மக்களின் அவசியமான பிரச்சனைகளை தீர்த்துவைக்க வக்கில்லாத ஆட்சியாளர்களுக்கும்



> **சுதந்திரம்**
>
> பட்டு வேட்டி பற்றிய
> கனவில் இருந்தபோது
> கட்டியிருந்த கோவணமும்
> களவாடப்பட்டது.
>
> [வைரமுத்து]

மக்களின் அதிருப்தியைத் தணிக்க பேரினவாதம்தான் துணையாக இருந்தது.

**எனவே, தமிழ் பேசும் மக்களை தேசிய நீரோட்டத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றியவர்களாகவே தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் விளங்கியிருந்தனர்.**

நாட்டின் சுதந்திரம் என்பதை சிங்கள இனத்தின் சுதந்திரமாக கருதியதுடன், நாடெங்கும் தமிழ் பேசும் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக மாற்றுவதற்கான சுதந்திரமாகவும் கருதிக்கொண்டு செயற்பட்டனர்.

**மலையகத் தமிழ் மக்களை நாடற்றவர்களாக்கிய சட்டங்களும், சகல தமிழ் பேசும் மக்களையும் அடிமைப்படுத்தும் விதமாக கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சட்டங்களும், சுதந்திரத்தை சிங்கள இனத்தின் பெருமிதத்தோடு கூடிய ஒன்றாக சித்தரிக்கும் தேசியக் கொடியும், சிறீலங்கா என்ற பெயரும்.. இவ்வாறான முக்கிய நிகழ்வுகள் அனைத்துமே நாட்டை எப்போதோ பல துண்டுகளாகப் பிரித்துவிட்டன.**

சுதந்திரம் கிடைத்த பின்னர் மூன்று பெரிய இனக்கலவரங்களை தமிழ் மக்கள் முகம் கொடுத்தனர்.

1958ல் முதலாவது இனக்கலவரம் பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில்தான் நடைபெற்றது. மிகப் பாரிய இனப்படுகொலை நடவடிக்கையாக அது அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பல பேட்டிகளில் "58ம் ஆண்டு இனக்கலவரமும், அதன் விளைவுகளும்தான் சிறு வயதிலேயே என் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியது" என்று கூறியிருக்கிறார்.

ஆனால் இன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா அவர்கள், ஐ.தே.கட்சி ஆட்சிதான் பிரபாகரன்கள் தோன்றக் காரணம் எனக் கூறிவருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1977, 1983 ஆகிய ஆண்டுகளில் ஏனைய இரண்டு இனக்கலவரங்கள் பாரிய இனப்படுகொலைகளாக தாண்டவமாடியிருந்தன. இன்றைய எதிர்க்கட்சித் தலைவரான ரணிலின் மாமனாரான ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சியில்தான் இரண்டு இனப்படுகொலைகள் கோரமாக அரங்கேறியிருந்தன.

தமிழ்பேசும் மக்களின் மாபெரும் கலாசார விழாவான உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குள் பொலிசார் புகுந்து ஒன்பது பேரை பலிகொண்டது சிறிமாவோ ஆட்சிக்காலத்தில்தான்.

தமிழ் பேசும் மக்களின் மாபெரும் பொக்கிஷமான யாழ் நூல்நிலையத்தை தீயிட்டுப் பொசுக்கப்பட்டது ஐ.தே.கட்சியின் ஆட்சிக்காலத்தில்.

**பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டி யாத்திரை நடத்தியவர்கள் ஐ.தே.கட்சியினர்.**

**இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தும், வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்தும் பலரைப் பலிகொடுத்து போராடியவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர்.**

ஆக, தமிழ்பேசும் மக்களின் இன, மொழி, கலை, கலாசார, பொருளாதார, பிரதேச தனித்துவங்களை இல்லாதொழிப்பதில் தென்னிலங்கையின் பெரும்பான்மை இனக் கட்சிகளுக்கிடையே பொது ஒற்றுமை காணப்பட்டே வந்திருக்கிறது.

அதனால்தான் சுதந்திரம் என்பது தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தைப் பறிக்க பெரும்பான்மை இன ஆட்சியாளர்களுக்கு கிடைத்த சுதந்திரம் என்றாகியது.

அதனை தமிழ் பேசும் மக்களும் ஏற்றுக்கொண்டமையால்தான், சுதந்திர தினத்தன்று கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறும், கரிநாள் அனுஷ்டிக்குமாறும் அன்றைய தமிழ் பேசும் தலைமைகளால் விடுக்கப்பட்ட அழைப்பை தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொண்டனர். கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டனர்.

**இன்று, பகிரங்க அரசியல் களத்தில் உள்ள தமிழ் பேசும் கட்சிகள் சரணடைவுப் பாதையில் செல்வதால், சுதந்திரதினம் குறித்த தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளை அக்கட்சிகளால் வெளிப்படுத்த இயலாமல் போயுள்ளது.**

ஆனாலும், சுதந்திர தினத்தை முன்னிட்டு செய்யப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளும், கெடுபிடிகளும் தமிழ் பேசும் மக்களிடம் சுதந்திரதினம் பற்றிய எதிர்மாறான மனோநிலைகளை மேலும் வளர்த்து வருகின்றன.

**முன்னெப்போதையும்விட இனப்பிரச்சனை பற்றியும், தீர்வையும் பற்றிப் பேசிவரும் இன்றைய ஆட்சியாளர்கள்தான், முன்னெப்போதையும்விட பாரிய இராணுவத் தீர்வொன்றுக்கான முயற்சியை செயலில் காட்டிவருகின்றனர்.**

அதன் விளைவாக தங்கள் சொந்தங்களை பறிகொடுத்தும், வீடு வாசல்களை இழந்தும், பசியோடும், பட்டினியோடும், பட்டினிச் சாவுகளோடும் பல்லாயிரம் தமிழ் பேசும்மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாகி நிற்கின்றனர்.

ஊரடங்கு வாழ்வும், உயிர் உத்தரவாதமற்ற போர்ச்சூழலும், மனித உரிமை மீறல்களும் தலைவிரித்தாடுகின்றன.

இலங்கை யுத்த வரலாற்றில் மிக அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் காணாமல் போயிருப்பதும் இன்றைய ஆட்சிக்காலத்தில்தான்.

**மொத்தத்தில் இந்தப்பொன்விழா ஆண்டில் தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை யுத்தச் சக்கரத்தின் கீழே நசிபட்டு மண்ணோடு மண்ணாகிப் போயிருக்கிறது. புல்டோசர்களும், ஆட்டிலெறிகளும், டாங்கிகளும், வட்டமிடும் விமானங்களும், நாட்டின் ஒரு பகுதியை நிறைத்து நிற்கின்றன.**

இந்நிலையில் சுதந்திரப் பொன்விழா தங்களுக்குரியது என்றோ, தங்களுக்கும் சுதந்திரம் என்றோ தமிழ்பேசும் மக்கள் கருதிக்கொள்வர் என்பது கற்பனையாகவே இருக்கும்.

சுதந்திரதின விழாக்களில் இம்முறை தமிழ்பேசும் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளக்கூடும். நன்றாகச் சோதனையிட்ட பின்னர் அவர்களை மேடையில் அமரவைக்கவும், அவர்களைக் காட்டி, சுதந்திரம் முழு நாட்டு மக்களுக்கும் உரியதாகிவிட்டது என்று ஆட்சியாளர்கள் பிரசாரமும் செய்வர்.

**ஆனால், இவையெல்லாம் தமிழ் பேசும் மக்களின் மனங்களை வெல்லவோ, உளவியல் ரீதியாகவும், இனமொழி, பிரதேச ரீதியாகவும் ஏற்பட்டுவிட்ட பிரிவினையை மறைக்கவோ உதவப்போவதில்லை.**

பொன்விழாவுக்கு முன்னர் தங்கள் குறைந்த பட்ச தீர்வைக் கூட வழங்க முடியாத நிலையில் உள்ள ஆட்சியாளர்கள், தொடர்ந்தும் புண்ணுக்கு புனுகு பூசும் முயற்சிகளில்தான் ஈடுபட்டுவரக் காணப்படுகின்றனர்.

நாடு பற்றி எரிந்து கொண்டிருக்க பிடில் வாசித்த மன்னன் போலவே, இனப்பிரச்சனையும், யுத்தமும் தீவிரம் கொண்டு நிற்கையில், சுதந்திரப் பொன்விழாவை கோலாகலமாகக் கொண்டாடும் ஆட்சியாளர்களின் போக்கும் அமைந்துள்ளது.

யுத்தத்தை நிறுத்திவிட்டு நியாயமான தீர்வொன்றை முன்வைத்துவிட்டு சுதந்திரப் பொன்விழாவை ஆட்சியாளர்கள் கொண்டாடியிருப்பார்களேயானால் வருங்கால சந்ததியும் வாழ்த்தியிருக்கும். ■

# இளவரசர் வருகிறார் பராக்-பராக்

### ~நக்கீரன்~

சுதந்திரப் பொன்விழாவுக்கு பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் வராதுவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? எதிர்க்கட்சியின் இரகசிய ஆசை அதுதான்.

எதிர்க்கட்சிக்கு பொன்விழாவைவிட முக்கியம் எதிர்வரும் தேர்தலில் ஆட்சிபீடம் ஏறக்கூடிய பொன்னான வாய்ப்புத்தான்.

ஆனாலும் சாள்ஸ் வந்தால், விழுந்தும் மீசையில் மண்படாத கதையாக, கொழும்பு மாநகர சபையில் வரவேற்புக் கொடுக்கவும் ஐ.தே.கட்சி தயாராக இருக்கிறது.

இதேவேளை சாள்ஸ் கலந்து கொள்வதை பௌத்த மதகுருமார் சிலர் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

பௌத்த மத குருமார் சிலர்மீது உள்ள கசப்பை வைத்துக்கொண்டு, அவர்களது சாள்ஸ் எதிர்ப்பை நோக்கக்கூடாது.

அவர்களது எதிர்ப்பில் நியாயம் இருக்கிறது. இந்தியாவிற்கு எலிசபெத் மகாராணி சென்றபோதுகூட அங்குள்ள பலர் எதிர்ப்புக் குரல் கொடுத்திருந்தனர்.

இந்தியாவில் ஜாலியன் வாலாபக்கில் பல நூற்றுக்கணக்கான நிராயுதபாணிகளை படுகொலை செய்தது பிரிட்டிஷ் ஆட்சி.

எவ்வகையிலும் நியாயமற்ற படுகொலை அது. தவறை உணர்வதும், தவறை உணர்ந்து மன்னிப்புக் கோருவதும் மனிதப் பண்பு.



சமீபத்தில் இந்தியா சென்ற ராணி எலிசபெத் ஜாலியன் வாலாபக்கிற்கும் சென்றார். அஞ்சலி செய்தார். ஆனால் ஒரு வார்த்தைகூட வருந்திப் பேசவில்லை.

வருந்த அவர் கௌரவம் இடம் கொடுக்கவில்லை. வருந்துவது மூலம், அப்பாவிகளை வேட்டையாடிய தன் நாட்டவரைச் சிறுமைப்படுத்த விரும்பவில்லை.

இதனைத்தான் இந்தியாவில் பல தேசபக்தர்கள் கண்டித்திருந்தனர்.

பிரிட்டிஷ் பிரதமர் மற்றும் பிரிட்டிஷ் தலைவர்களையோ, மக்களையோ வரவேற்பது வேறு விடயம். ஆனால் பிரிட்டிஷ் அரச குடும்பம் ஆதிக்கத்தின் சின்னமாக மிஞ்சியிருப்பது. நாடு பல வென்று அடக்கியாண்ட கீர்த்திதான் அதன் இன்றைய சொகுசு வாழ்க்கைக்கு காரணம்.

பிரிட்டனில்கூட அரச குடும்ப பகட்டை எதிர்த்தும், அக் குடும்பத்தினரை எதிர்த்தும் அதிருப்திகள் எழத் தொடங்கிவிட்டன.

இந்நிலையில் இளவரசர் சாள்ஸ் இலங்கைக்கு வருவதையும், பொன்விழாவில் கலந்து கொள்வதையும் ஏதோ நாட்டுக்கு கிடைத்த பெருமை போல அரசாங்கம் பிரசாரப்படுத்துகிறது.

சமீபத்தில்தான் தென் ஆபிரிக்கா சென்று அங்குள்ள அழகிகளுடன் ஜாலியாக ஆட்டம் போட்டார் சாள்ஸ். பத்திரிகைகளில் அப்படம் பிரசுரமாகியிருந்தது.

ஆனால் சாதாரண மக்களுடன் தன் மனைவி டயானா சகஜமாகப் பழகியதையே சகிக்க மாட்டாத மனிதர் அவர்.

பிரிட்டிஷ் அரசு கொட்டியழும் பணத்தில், சும்மா இருந்து உண்பதும், உண்டது செரிக்க நரி வேட்டை, குதிரையேற்றம் என்று பொழுதைப் போக்குவதும்தான் வேலை.

பொழுது போகாத ஒருவரை பொன்விழாவுக்கு அழைத்தால் வராமல் விடுவாரா? பொன்விழாவுக்கு என்ன, கண்காட்சிக்கு அழைத்தால்கூடத்தான் வருவார்.

முன்னாள் எஜமானர்களின் இந்நாள் வாரிசை வரவேற்க, முன்னாள் அடிமைகளின் இந்நாள் பிரதிநிதிகள் ஏன் முண்டியடிக்கிறார்கள்?

எனவே, எதிர்ப்புத் தெரிவித்த பௌத்த மதகுருமாரின் கருத்தை இந்த விடயத்தில் ஏற்றுக்கொள்ளலாம்.

இப்போது நமது பிரச்சனைக்கு வருவோம். சாள்ஸ் வருவதால், இலங்கை ஜனநாயக பூமி, மனித உரிமை செழிக்கும் நாடு என்றெல்லாம் உலகம் ஏற்றுக் கொண்டுவிட்டதாக அர்த்தமாகாது.

அப்படித்தான் அர்த்தம் என்று அரசாங்கம் பிரசாரம் செய்கிறது.

தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா வருவதாகக் கூறி மறுத்துவிட்டார். மண்டேலாவுடன் எவ்வகையிலும் ஒப்பிட முடியாதவர் சாள்ஸ். அதனால் அவர் வருகை இல்லாமல் போனதுக்கு சாள்ஸ் வருகை ஈடாகாது. ஆனால், ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்று அரசாங்கம் நினைக்கிறதோ தெரியவில்லை.

இலங்கையில் இனப்பிரச்சனை என்ற ஒன்று இருப்பதே சாள்ஸுக்கு தெரியுமோ? தெரியாதோ? உதவியாளர்கள் எழுதிக் கொடுக்கும் உரைகளை, காகிதம் கசங்காமல் வாசிக்கும் இளவரசரிடம், தர்ம நியாயம் பற்றிய கருத்துக்களை எதிர்பார்க்கக்கூடாது. ■

# கொள்ளை ராணி



பூலான்

# பூலான்தேவி

40 தருவது ரசிகன்

**கடந்த வாரம்**

**பூலான் தேவியின் பெயரைக் கெடுப்பதற்காக, அவள் பெயரைக் கூறி கொள்ளைகள் நடத்தும்படி சில கொள்ளையர்களை பொலிசார் தூண்டிவிடுகின்றனர். அத் தகவல் அறிந்த பூலான் கோஷ்டியினர் அந்தக் கொள்ளையர்களை தீர்த்துக்கட்டத் திட்டம் போடுகின்றனர்.**

இனி...

பூலானும், மான் சிங்கும் அவர்கள் ஆட்களும் அந்தக் கிராமத்தில் காத்திருந்தனர். சீருடைகள் அணியாமல், சாதாரண கிராமத்து ஆட்கள் போலவே பூலான் கோஷ்டியினர் மாறியிருந்தனர்.

துப்பாக்கிகளை சாக்குக்குள் போட்டு மறைத்து வைத்திருந்தார்கள். முன்கூட்டியே தகவல் சென்றால் எதிரிகள் உஷாராகிவிடுவர் என்பதால்தான் அத்தனை எச்சரிக்கையாக இருந்தனர்.

பூலான், கிராமத்துப் பெண்ணாக காட்சி தந்தாள். உள்ளே காக்கி சீருடை அணிந்து அதன்மேலே சேலை அணிந்திருந்தாள்.

நள்ளிரவைத் தாண்டியபோது நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. பூலான் கோஷ்டியினர் அனைவருமே தூங்காமல் இருந்தனர்.

நாய்கள் குரைத்த சத்தத்தோடு உஷாராகி தாக்குதலுக்குத் தயாராகினர்.

பூலான் ஆட்கள் வீடொன்றில்தான் பதுங்கி இருந்தனர். அந்த வீடு கிராம எல்லையில் முதல் வீடாக இருந்தது.

கிராமத்தில் கொள்ளையிட வருபவர்கள் முதலில் அந்த வீட்டுக்குத்தான் வருவார்கள் என்று மான் சிங்தான் ஊகித்திருந்தான்.

அந்த வீட்டில் இருந்த குடும்பத்தினர் பயத்தில் உறைந்திருந்தனர்.

"பயப்படவேண்டாம். உங்களுக்கு ஒன்றும் ஆகாது. காரியம் முடிந்ததும் போய் விடுவோம்," என்று பூலான் ஆறுதல் கூறியிருந்தாள்.

முன்னரே போட்டிருந்த திட்டப்படி, வீட்டின் முன்பாக பூலான் தனியாக நின்று தெருவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவர்கள் வந்துவிட்டனர். குறைந்தது பத்துப்பேராவது இருக்கலாம் என்று இருட்டில் கண்களால் துழாவி கணக்குப் போட்டாள் பூலான்.

நள்ளிரவு. தனியான ஒதுக்குப்புற வீடு. அந்த வீட்டின் முன்னால் தனியாக ஒரு இளம் பெண்.

வேட்டைதான்!

எதிர்பாராத விருந்து!

கொள்ளையர்களுக்கு நிலைகொள்ளாத மகிழ்ச்சி.

பூலானை நெருங்கி வந்தார்கள்.

"யார் நீ? உள்ளே யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான் முன்னால் வந்தவன்.

பூலான் அவனை நிமிர்ந்து பார்த்தாள். சற்றும் அச்சம் இல்லாத குரலில், "நீங்கள் யார்? முதலில் அதைச் சொல்லுங்கள்!"

முன்னால் நின்றவன் தன் உதடுகளை நாவால் ஈரப்படுத்திக்கொண்டு, பூலானை மேலும் கீழுமாக தன் பார்வையால் விழுங்கினான். இளித்துக்கொண்டே, "துணிச்சல்காரக் குட்டிதான். நாங்கள் எல்லாம் பூலான் தேவியின் ஆட்கள்!" சொல்லிவிட்டு கடகடவென்று சிரித்தான்.

குப்பென்று சாராய வாசனை முகத்தில் அடித்தது.

கிட்டத்தில் வந்தான். "இந்த நேரத்தில் தனியாக நிற்கிறாயே? துணை தேவையா கண்ணு; வா.." கையைப் பற்றச் சென்றவனின் கன்னத்தில் பூலான் கை விளாசியது.

எதிர்பாராத தாக்குதலில் அவன் நிலை குலைந்து சுதாகரிப்பதற்கு முன்னர், பூலானின் கையில் கைத் துப்பாக்கி முளைத்திருந்தது.

அதேசமயம், ஜன்னல் வழியாக பூலானின் ஆட்களின் துப்பாக்கிகள் சரமாரியாக ரவைகளைத் துப்பின.

பூலானின் கைத்துப்பாக்கி தன் எதிரே நின்றவனின் மார்பில் ரவையால் ஓட்டை போட்டது.

திருப்பித் தாக்கவே அவகாசம் இல்லாமல் அத்தனைபேரும் வெடிபட்டு வீழ்ந்தார்கள்.

பூலானும், மான் சிங்கும் உடல்களை காலால் உதைத்து உயிர் இருக்கிறதா, துடிப்பு இருக்கிறதா? என்று பார்த்தார்கள்.

மொத்தமாக பதினொரு பேர் கொல்லப்பட்டிருந்தனர். யாரும் உயிர் தப்பவில்லை.

அத்தனை உடல்களையும் கிராம எல்லைக்கு இழுத்துக் கொண்டு போனார்கள்.

'பூலான் தேவியின் பெயரைக் கெடுக்க நினைக்கும் எவருக்கும் இதுதான் கதி!' என்று அட்டை ஒன்றில் எழுதிப்போட்டனர்.

இரண்டு நாட்களுக்குள் அந்தச் செய்தி எங்கும் பரவியது. பூலானின் பெயரைப் பயன்படுத்தித் திரிந்த வேறு சில கொள்ளைக் கோஷ்டிகளும் இருந்தன.

பதினொருபேர் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி அறிந்ததும் அந்தக் கோஷ்டிகள் பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டன.

பொலிசாரின் தேடுதல்களும் தொடர்ந்த வண்ணமிருந்தன. அதனால் மறுபடி பூலான் தன் ஆட்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டி இருந்தது.

சிலருக்கு போதிய பணம் கொடுத்து ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்ளும்படி அனுப்பிவைத்தாள். "தேவைப்படும்போது அழைப்பேன். அப்போது வந்தால் போதும்!" என்று கூறியனுப்பினாள்.

மீராவும் பூலானுடன்தான் தங்கியிருந்தாள். அவள் காதலனான பல்வான் சிங் கல்கத்தாவுக்கு சென்றிருந்தான்.

ஒருநாள் நடு இரவில் பூலானுக்கு தூக்கம் கலைந்துவிட்டது. எழுந்து தண்ணீர் குடிக்கச் செல்கையில் அந்த வித்தியாசமான ஓசை கேட்டது.

பூனைபோல நடந்து சென்று ஓசை வந்த பக்கம் கவனித்தாள்.

அங்கே, மீராவும் மணிராமும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டிருந்தனர். மீராவின் கழுத்தையும், கழுத்துக்குக் கீழேயும் மணிராம் தன் கைகளால் வருடிக்கொண்டிருக்க, மீரா தலையை மல்லாத்தி கண்களை மூடிக்கொண்டிருந்தாள். பூலானை அவர்கள் கவனிக்கவில்லை.

மீரா அவனது கழுத்தை வளைத்து தன் கழுத்துக்குக்கீழே அவன் முகத்தை அழுத்த, பூலான் அதற்கு மேல் தாமதியாமல் விலகிப் போனாள்.

அவன் பலாத்காரம் செய்யவில்லை. செய்திருந்தால் அந்த இடத்திலேயே சுட்டுப் போட்டிருப்பாள்.

மீராவும் இணைந்து நடக்கும் தப்பு இது. ஒரே வழி மீராவை பல்வான் சிங் இருக்கும் இடத்திற்கு அனுப்பிவைப்பதுதான் என்று பூலான் முடிவு செய்தாள்.

அதனை பெரிதாக்கினால், பல்வான் சிங் மணிராமை கொல்லத் துடிப்பான். பிரச்சனை தான் மிஞ்சும். அதனால் மான் சிங்கிடம் கூட, தான் கண்ட காட்சியை பூலான் சொல்லவில்லை.

மறுநாளே மீராவை தன் ஆட்களில் ஒருவனுடன் கல்கத்தாவுக்கு அனுப்பிவைத்தாள் பூலான்.

மீராவும், மணிராமும் தங்களுக்குள் இரகசியமாகப் பார்த்துக் கொண்டதையும், அந்தப் பார்வைக்குள் மறைந்திருந்த சோகத்தையும் பூலான் மட்டும் தான் கவனித்தாள்.

மீரா புறப்பட்டுச் சென்ற சில மணி நேரங்களுக்குள் பாபாவின் ஆள் ஒருத்தன் பரபரப்போடு அங்கு வந்து சேர்ந்தான்.



முஸ்லிம்

அவன் மிகக் களைத்திருந்தான்; மிகப் பயந்திருந்தான்; மிக மூச்சிரைத்தான்.

அவனைப் பார்த்ததுமே ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது என்று பூலானுக்கு உள்ளுணர்வு உறுத்தியது.

பூலானைக் கண்டதும் அவன் ஓடிப்போய் அவள் காலில் விழுந்தான். வாய்விட்டு அழத் தொடங்கி விட்டான்.

மான் சிங் உட்பட அனைவரும் கூடி விட்டனர். மான் சிங் அவனை தோளில் தட்டி, "என்ன, என்ன நடந்துவிட்டது. ஏன் இப்படி...?"

"ஐயோ.... இனி என்ன நடக்கவேண்டி இருக்கிறது?" தலையில் அடித்து புலம்பினான்.

எல்லோரும் பொறுமை இழந்துவிட்டனர். மான் சிங் அதட்டலான குரலில், "சொல்லப்பா, என்ன பிரச்சனை?"

அவன் சொன்ன பதிலில் பூலான் உட்பட அனைவருமே உடைந்தனர். உறைந்து போயினர்.

அவன் சொன்ன செய்தியை தாங்கள் தப்பாக விளங்கிக் கொண்டுவிட்டோமோ என்று நினைத்தனர்.

மான் சிங், "நீ என்னடா சொல்கிறாய்?" என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினான்.

அவன் பீறிட்ட அழுகையை அடக்கமுடியாமலும், பதில் சொல்லாமலும் தலையில் அடித்துக்கொண்டே இருந்தான்.

பூலானுக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. தானே அவனிடம் சென்று, "என்ன நடந்தது என்று சொல்லப்பா!" என்றபோது அவளுக்கே அழுகை வந்துவிட்டது.

**"ஐயோ... பாபா... பாபாவை கொ... கொன்று விட்டார்களம்மா!"**

பூலானுக்கு தலை சுழன்றது. தன் உணர்ச்சிகளை மறைக்க மிகக் கஷ்டப்பட்டாள்.

'பாபா, பாபா முஸ்தக்குவீம். கண் நிறைய காட்சிதரும் மனிதர். அவர் எம்மை விட்டுப் போய்விட்டாரா?'

பூலானால் நம்ப முடியவில்லை. விக்கிரம் மல்லா இல்லாமல்போக, பூலானை மறுபடி மனுஷியாக்கி, தலைவியாக்கிய மனிதர் பாபா.

கொள்ளைக் கோஷ்டிகளுக்குள்ளும் நியாயமான கொள்ளைக்காரன், என்று பொலிசாரால் கூட பாராட்டப்பட்டவர் பாபா முஸ்தக்குவீம்.

அவர் ஒரு மல்யுத்த வீரர். பின்னர்தான் படிப்படியாக கொள்ளைக்காரனாக மாறினார். 1979ல் பொலிஸ்காரன் ஒருவனை கொலை செய்த சம்பவத்தில் பாபாவை தீவிரமாகத் தேடினார்கள்.

அதன் பின்னர் பொலிசாருக்கு தண்ணிக் காட்டிக்கொண்டு பெரிய கொள்ளைக் கோஷ்டியை நடத்தத் தொடங்கினார்.

என்னதான் கொள்ளையடித்தாலும் ஏழை எளியவர்களிடம் ஒரு சதம்கூட எடுக்கக்கூடாது என்பது பாபாவின் கண்டிப்பான கட்டளை. பெண்களிடம் வாலாட்டினாலும் கடும் தண்டனைதான். சொன்ன வாக்கை பாபா மீறுவதில்லை என்பது பிரசித்தம்.

மான் சிங் தளர்ந்துபோய் நின்றதை அன்றுதான் பூலான் பார்த்தாள். அப்படியே மடங்கித் தரையில் அமர்ந்துவிட்டான்.

அவன் கண்களில் இருந்து பொலபொலவென்று கண்ணீர் கொட்டியது.

யாரை யார் ஆறுதல் படுத்துவது என்று தெரியவில்லை. அனைவரும் கலங்கிப்போய் நின்றனர்.

விக்கிரம் மல்லாவை இழந்த சோகத்தின் பின்னர், பூலான் கதிகலங்கியது பாபாவின் இழப்பை எண்ணித்தான்.

சோகத்தில் இருந்து மீள சில நாட்கள் தேவைப்பட்டது. பாபாவுக்கு முஸ்லிம் என்றொரு சகோதரன் இருந்தான்.

மல்கான் சிங்கின் குழுவில்தான் முஸ்லிம் இருந்தான். தனது சகோதரன் கொல்லப்பட்டதும் முஸ்லிம் துடித்துப்போனான்.

தாஸ்தாம்பூர் என்ற கிராமத்தில்தான் பாபா கொல்லப்பட்டார். அந்தக் கிராமத்தின்ஊடாக பாபாவும் அவர் குழுவினரும் சென்றபோது தான் பொலிசார் சுற்றிவளைத்து தாக்கினார்கள்.

இறுதிவரை சரணடையாமல் சண்டையிட்ட பாபாவும் அவர் ஆட்கள் ஐந்தாறு பேரும் கொல்லப்பட்டனர். ஏனையோர் பொலிசாரால் கைதுசெய்யப் பட்டனர்.

தாஸ்தாம்பூர் மக்கள்தான் பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர். பாபா குழுவினரைத் தாக்க ஒத்தாசை புரிந்தனர் என்று முஸ்லிம் விபரம் அறிந்தான்.

பழிக்குப் பழிவாங்க மல்கான் சிங்கின் உதவியைக் கேட்டான் முஸ்லிம். அவன் மறுத்து விட்டான்.

அதனால் மல்கான் சிங்கைவிட்டு விலகிய முஸ்லிம், பூலான் கோஷ்டியை தேடிப் பிடித்து சந்தித்தான்.

முஸ்லிம் கூறிய தகவல்களைக் கேட்ட பூலானும், மான் சிங்கும் கொதித்தனர். "தாஸ்தாம்பூர் கிராமத்தை தரைமட்டமாக்க வேண்டும்!" என்று கறுவினாள் பூலான்.

தாஸ்தாம்பூர் கிராமத்துக்கு பாபாவின்கூட்டணிகளால் ஆபத்து ஏற்படலாம் என்பதால் கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

பாபாவைக் கொல்ல உதவியவர்களுக்கு பொலிசார் வெகுமதிகளையும் வழங்கி இருந்தனர்.

பொலிசாரையும் தாக்கி, கிராமத்தையும் தாக்க ஆட்கள் போதாது. அதனால் பொலிஸ் பாதுகாப்பு விலகிக்கொள்ளப்படும்வரை காத்திருப்பது என்று முடிவு செய்தனர்.

அதற்கிடையே கிராமம் ஒன்றில் பணக்காரப் பண்ணையார் ஒருவனது வீட்டை கொள்ளையிட்டனர்.

தானியங்கள் விற்பனை செய்து நாலு இலட்சம் ரூபா ரொக்கமாக வைத்திருந்தான். அப்படியே அள்ளிக் கொண்டுவந்து பூலானிடம் கொடுத்தான் மான் சிங்.

துப்பாக்கிகளுக்கான ரவைகள் வாங்கவும், ஆங்காங்கே அனுப்பப்பட்ட தங்கள் ஆட்களை ஒன்று திரட்டவும் அப்பணத்தைப் பயன்படுத்தினாள் பூலான்.

மூன்று மாதம்வரை பொறுமையாகக் காத்திருந்தனர். அவர்கள் எதிர்பார்த்தபடியே பொலிஸ் பந்தோபஸ்து மெல்ல மெல்ல விலக்கிக்கொள்ளப்பட்டது.

1982 ஜூன் 27ம் திகதி 22 பேர் கொண்ட பூலானின் கோஷ்டி தாஸ்தாம்பூர் கிராமத்துக்குள் புகுந்தது.

அத் தாக்குதலுக்கு தலைமை தாங்கும் பொறுப்பை முஸ்லிமிடம் ஒப்படைத்திருந்தாள் பூலான்.

பொலிசாரிடம் யார் யார் வெகுமதி பெற்றனர் என்று ஒரு பட்டியலே வைத்திருந்தான் முஸ்லிம்.

சிவராம் சிங் யாதவ், கங்காச்சரண் யாதவ் ஆகிய இருவரும்தான் பாபாவைப் பிடிக்க கிராமமக்களைத் திரட்டி பொலிசாருக்கு உதவியவர்கள்.

சிவராம் சிங்கின் மாடி வீட்டுக்குள் புகுந்து சுட்டுத்தள்ளினார்கள்.

சிவராம் சிங்கும் அவன் மனைவி மற்றும் பிள்ளைகளும் சூடுபட்டு இறந்தனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதும் கங்காச் சரணும் அவன் குடும்பமும் தங்கள் வீட்டை விட்டு வெளியேறி ஓடி ஒளிந்து கொண்டனர்.

அவர்களின் வீடு தீயிடப்பட்டது. எங்கும் மரண ஓலங்கள். கிராமத்தினர் உயிர்தப்ப தலைதெறிக்க ஓடினார்கள்.

பாபாவை பிடிக்க உதவியதாக உறுதியாகத் தெரிந்த நான்கு பேரை பூலான் சுட்டுக் கொன்றாள்.

(தொடர்ந்து வரும்)

# "அவருக்காக வாழ்ந்தேன்!"

**தெ**ன் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி வின்னி குமுறியிருக்கிறார்.

இன்னமும் இளமையாகவும், கம்பீரமாகவும் காட்சிதரும் வின்னிக்கு, தென் ஆபிரிக்க இளம் தலைமுறையிடம் செல்வாக்கு இருக்கிறது.



மண்டேலா வின்னியை விவாகரத்துச் செய்தபோதும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவராக இருக்கிறார் வின்னி.

மண்டேலா சிறையில் இருந்தபோது வின்னிக்கும் அவரது உதவியாளரான இளைஞர் ஒருவருக்கும் இடையே அந்தரங்க நட்பு இருந்ததாக செய்திகள் அடிபட்டன. "வின்னிக்கு எதிரானவர்கள் கட்டிவிட்ட கதையை மண்டேலாவும் நம்பிவிட்டார்" என்று குறைகூறினார் வின்னியின் ஆதரவாளர்.

சமீபத்தில் தென் ஆபிரிக்க தினசரி பத்திரிகை ஒன்றுக்கு மனம்திறந்து பேட்டியளித்திருக்கிறார் வின்னி.

"என்னுடைய இளமைக் காலத்தை மண்டேலாவுக்காகவும், நிறவெறிக்கு எதிரான போராட்டத்திற்காகவும் தியாகம் செய்தவள் நான்.

27 வருடம் மண்டேலா சிறையில் இருந்தார். நான் தனிமையில் இருந்தேன்.

1996ம் ஆண்டு மண்டேலாவிடம் இருந்து விவாகரத்து பெற்ற பின்புதான் எனக்கு என்னுடைய சுதந்திரம் மீண்டும் கிடைத்தது.

அதற்கு முன்னர் நெல்சன் மண்டேலாவின் பெயர், புகழ் ஆகியவற்றைக் காப்பாற்றுவதே எனது கடமை என்று நினைத்திருந்தேன்.

ஐக்கிய நாடுகள் சபையில் பல உயர் பதவிகளை ஏற்றுக்கொள்ள என்னை அழைத்தார்கள். ஆனால் மண்டேலாவுக்காக அதனை மறுத்திருந்தேன். எனக்கு கிடைத்த வாய்ப்புக்களையும், சுகத்தையும் ஒதுக்கி வாழ்ந்தேன்!" என்று கூறியிருக்கிறார் வின்னி.

வின்னி தீவிரமான பெண்மணி. நிறவெறியரான வெள்ளையர்களை வெளுத்து வாங்க, தன் ஆதரவாளர்களை உற்சாகப்படுத்தி பெயர் எடுத்தவர். இப்போதும் தீவிரம் குறையவில்லை.

# ஜாலியான ஆசாமிகளா? ஆயுள் கெட்டி

**பி**ரிட்டனில் உள்ள இரண்டு பல்கலைக் கழகங்கள் வாழ்க்கைக்கு மிக மிக மிக அவசியமான ஆய்வை நடத்தி முடித்துள்ளன. அதுவும் ஒருவருடம், இரு வருடமல்ல, பதினைந்து வருடங்களாக ஆராய்ச்சி நடந்திருக்கிறது.

பிரிஸ்டோல் மற்றும் குயின்ஸ் பல்கலைக் கழகங்கள்தான் ஆய்வு நடத்தியுள்ளன. தாம்பத்திய உறவு பற்றித்தான் அத்தனை தீவிரமாக ஆராய்ந்துள்ளனர்.

டேவிட் ஸ்மித், ஸ்டீபன் பிராவல் என்னும் இரண்டு விஞ்ஞானிகள் ஆய்வில் ஈடுபட்டனர்.

மொத்தம் 2512 பேர் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவருமே 45 முதல் 59 வயதுக்கு உட்பட்ட ஆண்கள்.

தாம்பத்ய உறவில் மாதத்தில் எத்தனை தடவை ஈடுபடுகிறார்கள் என்பதை அவர்களிடம் கேட்டறிந்து, தாம்பத்யத்துக்கும் ஆயுட்காலத்துக்கும் இடையே உள்ள உறவு பற்றி பின்வரும் கண்டுபிடிப்புக்களை வெளியிட்டுள்ளனர்.

**ரகம் ஒன்று:** இவர்கள் 45 வயதை தாண்டியதும் மாதத்திற்கு ஒரு தடவை மட்டும் தாம்பத்ய உறவு வைத்துக் கொள்பவர்கள். இவர்களுக்கு 50, 52 வயதுக்கு முன்பே மரணத்தை எட்டிப்பிடிக்கும் வாய்ப்பு இருக்கிறதாம்.

**ரகம் இரண்டு:** மாதத்தில் 4,5 தடவைகள் தாம்பத்ய உறவு கொள்பவர்கள். இவர்கள் 55, 57 வயதை தாண்ட முடியுமாம்.

**ரகம் மூன்று:** இவர்கள் ஜாலியான



ஆசாமிகள். வாரத்தில் இரண்டு தடவையாவது மனைவியுடன் தாம்பத்யம் வைத்துக் கொள்வார்கள்.

இவர்களது ஆயுட்காலம் 65 முதல் 70ஐ தாண்டுகிறதாம். உடற் கோளாறும் இல்லாமல் இருக்கிறார்களாம். குறிப்பாக நெஞ்சு வலியோ, இதயக் கோளாறுகளோ ஏற்படுவதில்லையாம்.

என்ன அதிர்ச்சியாக இருக்கிறதா? அல்லது இன்ப அதிர்ச்சியாக இருக்கிறதா?

# கௌதமியின் கட்சி



**சி**ல காலமாக அரசியல் நூல்களை படிப்பதில் ஆர்வம் காட்டி வந்தார் கௌதமி. அவரது ஆத்மார்த்த நண்பரான கமல் அரசியல் வேண்டாம் என்று புத்தி சொல்லியும் கௌதமி கேட்கவில்லை.

ரஜினி அரசியலில் இறங்கினால் அவரது கட்சியில் சேர ஆவலாக இருந்தவர்களில் கௌதமியும் ஒருவர். கமலைப் போலவே ரஜினியும் கௌதமிக்கு நல்ல நண்பர்.

ரஜினி கட்சி தொடங்கவில்லை என்பதால், அரசியல் ஆசைக்கு டாட்டா காட்டலாமா? அல்லது நல்ல கட்சியாகப் பார்த்து குதிக்கலாமா என்று யோசித்தாராம்.

இதற்கிடையே கௌதமிக்கு எட்டிய கல்யாண வாய்ப்பும் எதிர்பாராத காரணத்தால் கை நழுவிவிட்டது.

இந்நிலையில் ஒரே முடிவாக அரசியலில் இறங்கிவிட்டார். பாரதிய ஜனதா கட்சியில் சங்கமித்திருக்கிறார்.

நடிகைகள் பலரை இழுத்துவைத்துக் கொண்டுள்ளதால், பாரதிய ஜனதா நட்சத்திரக் கட்சியாக மின்னுகிறது. தலைவர்கள் இடையே சபலங்கள் ஏற்படாமல் விட்டால் சரிதான்.

# ஐந்துகோடி ஆசை

**இ**ந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்றுதான் ஆச்சரியப்படுகிறார்கள். அந்தப் பூனையின் பெயர் மோகன் சிங் குலார்.



இந்தியாவைச் சேர்ந்த குலார் சிறுவயதிலேயே பெற்றோருடன் அமெரிக்காவில் குடியேறிவிட்டான்.

அங்கேயே படித்து, அங்கேயே பெரிய வர்த்தகராகி ஆடை வியாபாரத்தில் ஈடுபட்டான்.

இலண்டனில் வாழ்ந்தாலும் இந்தியப் பெண்தான் வேண்டும் என்று பஞ்சாப் பெண் ஒருத்தியைக் கல்யாணம் செய்தான். நான்கு ஆண்டுகள் ஒன்றாக இருந்தனர்.


மனைவியை துன்புறுத்தி இன்பம் காண்பதில் மோகன் சிங் குலார் கில்லாடி. பொறுக்கமாட்டாத மனைவி இந்தியா திரும்பினாள்.

1995ல் மோகன் சிங் குலாரின் மனைவி இறந்துபோனாள். இலண்டனில் தன் மனைவியை காப்புறுதி செய்திருந்தான். மனைவி இறந்துவிட்டதால் காப்புறுதிப் பணம் கிட்டத்தட்ட 5 கோடி அவன் கைக்கு வந்தது.

உடனே ஐந்து ஆறு ஜவுளிக் கடைகள் திறந்து வியாபாரத்தை விரிவாக்கினான். மனைவியின் இழப்புக்காக அடிக்கடி கண்ணீர் வடிப்பானாம். நண்பர்கள் பரிதாபப்படுவார்களாம்.

இரண்டு மாதத்தின் முன்னர் மோகன் சிங் குலாரை பொலிசார் ஒரே அமுக்காக அமுக்கினர். மனைவியை நைசாக கொன்றுவிட்டு இலண்டன் திரும்பியதை கண்டு பிடித்துவிட்டனர்.

வழக்குத் தொடரப்பட்டது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.




## இழுப்பதில் கலக்கல்

← மாடு வண்டியிழுக்கும், குதிரை வண்டியிழுக்கும். பார்த்திருப்பீர்கள். நாய் வண்டியிழுப்பதை அநேகமாக பார்த்திருக்க மாட்டீர்கள். இப்போது பாருங்கள்.

நன்றாக பயிற்சி கொடுத்தால் நாய்களும் சூப்பராக வண்டியிழுத்துக் கலக்குமாம்.

இப் புகைப்படம் 1934ல் எடுக்கப் பட்டது. கனடாவின் கியூபெக் மாநிலம் ஃபிரான்சின் கொலனியாக இருந்தபோது சிறுவர்கள்தான் தபால் விநியோகத்தில் ஈடுபட்டனர்.

நாய் வண்டிகளில் சென்றுதான் தபால் விநியோகம் செய்தார்களாம். (மணியடிப்பதற்கு பதிலாக நாய்கள் குரைத்திருக்குமோ?) அந்த தபால்காரச் சிறுவர்கள் தங்கள் நாய்களுக்கு குளிர்கண்ணாடி போட்டுவிடுவார்களாம்.



## கூண்டுக்கு வெளியே

↗ சிறைச்சாலை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்பார்கள். அமெரிக்கா டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள எல்லிஸ் யூனிட் சிறையில் உள்ள சில கைதிகளுக்கு சிறைச்சாலை செஸ் விளையாட்டு மைதானம்.

சிறைக் கூண்டுக்குள் இருந்தபடியே கைகளை நீட்டி காய்களை நகர்த்துகிறார்கள். இங்கு கூண்டுக்குள் இருந்தபடியே செஸ் போட்டிகளும் நடைபெறுமாம்.

மேலதிகமாக ஒரு தகவலும் சொல்கிறோம்; உலகிலேயே சிறையில் அதிக காலம் இருந்தவர் என்ற உலக சாதனைக்கு உரியவர் சதம் இச்சி சிர ஷவா. ஜப்பான்காரர். ஜப்பானில் சென்டாய் சிறையில் 39வருடம் இருந்து கம்பிகளை எண்ணிவிட்டு தனது 94 வயதில் அங்கேயே மண்டையைப் போட்டுவிட்டார். அவர் பிறந்தது 1893இல். இறந்தது 1987இல்.

## யாருடைய கூடை

↓ கடைத்தெருவில் யாரோ கைவிட்டுப்போன கூடையோ? என்று எண்ணத்தோன்றும்.

சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள், கூடைபோன்ற வடிவத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடம்தான் இது.

கூடை தயாரிப்பதில் கில்லாடியான கம்பனி ஒன்று, புதிதாக கட்டிய அலுவலகத்தை கூடைபோலவே கட்டியிருக்கிறது.



கூடைக் கம்பனிகள் இடையே பலத்த போட்டி. தரமான கூடைகளைத் தயாரிக்க முடியாத ஏனைய கம்பனிகள் இக் கம்பனிமீது கூடை கூடையாக பொறாமையைக் கொட்டுகின்றனவாம்.

இந்த கூடை வடிவ பிரமாண்ட அலுவலகக் கட்டடம் அமெரிக்காவில் இருக்கிறது. வெகு நேர்த்தியாக கட்டி இருக்கிறார்களல்லவா. பொறாமைப்படும் நேரத்தில் ஏனைய கூடைத் தயாரிப்பாளர்களும் புதுமைகள் செய்து பார்க்கலாம்தானே.

## பறப்பதில் அசத்தல்

→ இன்றுவரை உலகில் உள்ள விமானங்களில், அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான SR-71 லொக்ஹீட் ஜெற் விமானம்தான் அதிவேகமாகப் பறக்கும் தன்மை வாய்ந்தது.


இவ்விமானம் 1964 டிசம்பர் 22ம் திகதி முதன் முதலாகப் பறக்கவிடப்பட்டது. அப்போது விண்ணில் 100,000 அடி உயரத்தில் பறந்தது. அது ஆபத்தான வேகம் என்று கருதி, பின்னர் இது பறக்கும் உயரத்தை 24 ஆயிரம் மீட்டருக்கு (79,000 அடி) மட்டுப்படுத்தி 4 ஆயிரத்தி 800 கிலோ மீட்டர் (3,000 மைல்) வேகத்தில் பறக்கவல்லது.

இவ்விமானத்தின் நீளம் 32.73 மீட்டர் (107 அடி 5 அங்குலம்) இறக்கைகள் இரண்டும் மொத்தம் 16.94 மீட்டர் (55 அடி 7 அங்குலம்) விமானம் ஓடு பாதையிலிருந்து கிளம்பும்போது மொத்தம் 77-1 தொன் (170,000 இறாத்தல்) எடைகொண்டதாக இருக்கும்.

எண்ணை நிரப்புவதற்கு தரையில் இறங்காமலே நீண்ட தூரம் ஒரே தடவையில் பயணம் செய்வதற்காக தனியான K-135 எண்ணைத் தாங்கியும் இவ்விமானத்தில் பொருத்தப்பட்டிருக்கும்.

நடுவானில் பறந்து கொண்டிருக்கும் போதே இந்தத் தாங்கியிலிருந்து எண்ணையை எடுத்துக் கொள்ள முடியுமாம்.

கிட்டத்தட்ட 34 வருடங்களாக வேகத்தில் இதன் சாதனையை வெல்ல வேறெந்த விமானமும் தயாராகவில்லை. இனித்தான் உருவாகிவரவேண்டும்.





## சுமப்பதில் சூரன்


→ வித்தியாசமான வடிவத்தில் காணப்படும் இந்த விமானம், பலத்திலும் சளைத்தது இல்லை. உலகிலேயே அதிக எடை கொண்ட பொதிகளை ஒரே பறப்பில் சுமந்து செல்லக் கூடிய விமானம் இதுதான். சூப்பர் போக்குவரத்து விமானம்.

சமீபகாலத்தில் தான் தயாராகியுள்ளது. 'A 300- 600ST பெலுகா' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

அமெரிக்கத் தயாரிப்பு. ஒரே ஒரு விமானம்தான் தயாராகி வெள்ளோட்டம் விடப்பட்டது. மேலும் நாலு விமானங்கள் இதுபோல செய்யப்படவுள்ளன.

பொதிகளை ஏற்ற வசதியாக விரிந்து கொடுக்கும். உள்ளே இட வசதி 1,400 கன மீட்டர். (49 ஆயிரத்தி 441 கன அடி) மொத்தம் 150 தொன் எடை கொண்ட பொதிகளை இந்த பிரமாண்டமான விமானம் சுமந்து பறக்கும்.

இந்த இராட்சத விமானத்தின் நீளம் 184 அடி 3 அங்குலம். இது தான் பொதி சுமப்பதில் புதிய உலக சாதனை படைத்துள்ள விமானம்.





## கறப்பதில் சூப்பர்

↑ ஆத்தா ஆடு வளர்த்திருக்கலாம். பசுமாடு வளர்த்திருக்கலாம். ஆனால் இது மாதிரி ஒரு பசுமாட்டை எந்த நாட்டு ஆத்தாவும் வளர்த்திருக்கமாட்டார்.

சாதாரணமாக பசுமாடு ஒன்று வருடத்திற்கு ஆகக்கூடுதலாக 5 ஆயிரத்தி 570 லீட்டர் பாலைத்தான் கறக்கும். அதாவது நாள் ஒன்றுக்கு ஆகக்கூடியது 15.26 லீட்டர்தான் கறக்கும்.

ஆனால் கென்யா நாட்டில் சிலிஃபி பண்ணையைச் சேர்ந்த இந்த பசுமாடு நாள் ஒன்றுக்கு 17.7 லீட்டர் பாலைத் தருகிறது.

இது அபூர்வமான விஷயம். உடனடியாக உலக சாதனை பதிவாளர்கள் சென்று பரிசோதித்துப் பார்த்தனர். உண்மை என்று உறுதிப்படுத்தியதால் கின்னஸில் பதிவு செய்தும் விட்டனர். சாதனைப் பசுவில் இருந்து பால் கறக்கும் காட்சிதான் படத்தில் உள்ளது.

**தகவல் பெட்டி**

## அழிப்புக்கான பாதை

**1990** நவம்பர் மாதம் அமெரிக்க, ஈராக் போரின் உச்சகட்ட நேரத்தில் கிளிக் செய்யப்பட்ட புகைப்படம். அமெரிக்க விமானப்படைத் தளம் படு பரபரப்பில் இருந்தது. ஏழு நிமிடத்துக்கு ஒரு முறை விமானங்கள் தரையிறங்கி அமெரிக்க வீரர்களை சுமந்து கொண்டு அரேபிய பாலைவனத்தை நோக்கிப் பறந்தன.

அமெரிக்க படைவீரர்கள் நீண்ட வரிசையில் நின்று விமானத்தில் ஏறிக் கொண்டிருக்கும் காட்சிதான் இது. வல்லாதிக்கத்தை நிலைநிறுத்தும் போருக்கு புறப்படுகிறார்கள்.

கொழும்பில் இருந்து யாழ் செல்ல விமான ரிக்கெற் பெறுவதற்கு நம் ஆட்களும் இப்படித்தான் நீண்ட கியூவரிசையில் நிற்கிறார்கள். இது என்ன புதுமை என்கிறீர்களா?



திரையுலக மறுபக்கம் 40

# நம்பியார் வியந்த அழகு எம்.ஜி.ஆர். காட்டிய பண்பு

'நினைத்ததை முடிப்பவன்' படப்பிடிப்பு காஷ்மீரில் நடைபெற்றது. எம்.ஜி.ஆர். கதாநாயகன், நம்பியார் போலீஸ் அதிகாரியாக நடித்தார்.

ஒருநாள் நம்பியாரும் படத் தயாரிப்பாளர்களில் ஒருவரும் படப்பிடிப்பு இடைவேளையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு அழகான பெண்மணி பட்டுச் சேலை உடுத்தி, கூந்தல் காற்றில் பறக்க நடந்து வந்து கொண்டிருந்தார்.

அவரைக் கண்டதும் நம்பியார்; "அதோ அந்தப் பெண்ணைப் பார்த்தீரா..? என்ன அழகு... என்ன அழகு" என்று வியந்தார்.

உடனே அந்தத் தயாரிப்பாளரும் "ஆமாம்! என்ன அழகு! அவளை மனைவியாக அடைந்தவன் பாக்கியசாலி. அவள் கணவனை நான் கண்டால், அவனைப் பாராட்டி அவன் என்ன சொன்னாலும் செய்வேன்" என்றார் உணர்ச்சிவசப்பட்டு.

"என்ன சொன்னாலும் நிச்சயமாகச் செய்வீரா?" என்று கேட்டார் நம்பியார்.

"சத்தியமாக" என்றார் தயாரிப்பாளர்.

"அவள் வேறு யாருமல்ல, என் மனைவிதான்" என்ற நம்பியார் "சரி நீர் சொன்னபடி, ஆடைகளைக் களைந்துவிட்டு, இந்த இடத்தை மூன்று முறை சுற்றிவரும்" என்று நம்பியார் சொன்னதும், சுற்றி இருந்தவர்களெல்லாம் அடக்கமுடியாமல் சிரித்தனர்.

நடிகர் நம்பியார் மனைவியின் கட்டுப்பாட்டில் இருப்பவர். இளமைப் பருவம் முதலே அப்படித்தான். இருந்தும் ஒரு சமயம் எம்.வி.ராஜம்மாவின் நடிப்புக்கு, அழகுக்கு ரசிகன் என்று அவரது படம் ஒன்றை வீட்டிலே மாட்டிவைத்தார்.

அதற்கு மனைவி முறைத்த முறைப்பில் இரசனையை மனதுக்குள்ளேயே பூட்டி வைத்துக் கொள்வதோடு சரி.

ஆனால் படப்பிடிப்பில் செம குறும்பர். ஒரு கால கட்டத்தில் கதாநாயகன், கதாநாயகி யாராக இருந்தாலும் இரட்டை அர்த்தத்தில் பேசி திணறடிப்பார்.

எம்.ஜி.ஆரின் படப்பிடிப்புக்களில் ஏனைய நடிகர்கள் கப்சிப்பாக இருப்பர். நம்பியார் மட்டும் ஜட்டியும் ஷூவும் மட்டும் அணிந்து வந்து பயமுறுத்துவார். எம்.ஜி.ஆர். தலையில் அடித்துக் கொண்டு போய்விடுவார்.

## சிவாஜி வியந்தார்

முதன் முதலில் சிவியா ரசிகர்கள் சங்கம் ஆரம்பித்ததே எம்.ஜி.ஆர். சிவாஜியை முகாந்திரமாகக் கொண்டுதான்.

இரு ரசிகர் சங்கங்களுக்கும் இடையே வெட்டுப்பழி, குத்துப் பழியான போட்டிதான் வெளியூர்களில்.

அப்போது சிவாஜி ரசிகர் சங்கத்தைச் சேர்ந்த சிலர் சிவாஜியைப் பார்க்க சென்னை வந்தனர். அவரது படப்பிடிப்பு வாகினி ஸ்டுடியோவில் இருப்பதாய் அறிந்து அங்கு சென்றனர். எப்படியோ அனுமதி பெற்று உள்ளேயும் நுழைந்துவிட்டனர்.

வழியில் ஸ்டுடியோ தோட்டப் பக்கத்தில் எம்.ஜி.ஆர். ஓய்வாக அமர்ந்து தமது ரசிகர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். வந்து கொண்டிருப்பவர்களும் தமது ரசிகர்கள்தான் என்று தவறாகக் கருதிவிட்ட எம்.ஜி.ஆர்.,

"வாங்க வாங்க... வணக்கம்" என்று உற்சாகமாக வரவேற்றார்.

வந்தவர்களோ முறைப்பாக; "நாங்க உங்களைப் பார்க்க வரவில்லை. எங்க தலைவர் சிவாஜியைப் பார்க்க வந்தோம்" என்றார்கள்.

எம்.ஜி.ஆர். புன்னகை மாறாமல், "அப்படியா? ரொம்ப சந்தோசம். அவர் எந்தப் ப்ளோர்ல இருக்கார்ன்னு எனக்குத் தெரியும். வாங்க, போகலாம்" என்று அவர்கள் பதிலை எதிர்பார்க்காமல் எழுந்து அழைத்துச் சென்றார்.

சிவாஜி நடித்துக் கொண்டிருந்த தளத்துக்கு கூட்டிச்சென்று, சிவாஜியை அழைத்து, "தம்பி, உன்னைப் பார்க்க வெளியூரில் இருந்து வந்திருக்காங்க. நல்லா கவனிச்சு அனுப்பு" என்று கரிசனத்தோடு சொன்னார்.

சிவாஜி புருவம் ஏற்றி மோவாயில் கைவைத்து; "அண்ணே! உங்களை ஒருத்தராலயும் ஒண்ணும் பண்ணிக்க முடியாது" என்றார்.

## தந்திரமான நடிகை

நகைச்சுவைப் பாத்திரங்களில் நடித்துப் புகழ் பெற்றவர் அந்த நடிகர். இன்னும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

சிறந்த நடிப்புத்திறமை உள்ள அந்த நடிகருக்கு இரண்டு பலவீனங்கள், மது, மாது. வழக்கமாக நடிகர்களுக்கு இருக்கக் கூடிய பலவீனம்தான். ஆனால் நடிகரோ அதற்கு அடிமையாகி இருந்தார்.

அதனால் அன்றைய மூன்றெழுத்து திலக நடிகரின் படங்களில் இருந்து நடிகர் ஓரம்கட்டப்பட்டனர்.

நடிகருக்கு நடனத் திறமையும் இருந்தது. அவரது நடனத்திறமையில் மயங்கிய அன்றைய முன்னணி நாயகியான 'தேவி' நடிகை நடிகரின் இழப்புக்களெல்லாம் இசைந்து கொடுத்தார். பின்னர் நடிகரின் வருமானத்தில் கணிசமாக கறந்துகொண்டு குட் பை சொல்லிவிட்டார் நடிகை. அந்த நடிகையின் மகளும் இப்போது நடித்துக் கொண்டிருக்கிறார்.




சூர்யா
படம் சந்திப்போமா

பிரபுதேவா
படம் காதலா காதலா

## எதிரும் புதிரும்

மம்முட்டி, ஜெயராம் நடிக்கும் 'மாஸ்டர்' படத்தின் பெயரை எதிரும் புதிரும் என்று மாற்றியுள்ளனர். கதாநாயகிகளாக சௌந்தர்யா, ரசிகா ஆகியோர் நடிக்கின்றனர். இயக்கம் ரமணி. இசை: வித்யாசாகர்.

## மினி சினி

* 'பிரமிட்' நடராஜன் தயாரிப்பில் பிரபு கதாநாயகனாக நடித்த 'பொன்மனம்' படத்தை இயக்கியிருப்பவர் எஸ்.பி. ராஜ்குமார். இவர் அடுத்து இயக்கும் படத்தையும் 'பிரமிட்' நடராஜனே தயாரிக்கவிருக்கிறார்.
* இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தர் இயக்கித் தயாரிக்கும் படத்தில் சிம்ரான் கதாநாயகியாக நடிக்கவுள்ளார். கதாநாயகனாக நடிப்பவர் யார் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை.
* 'காதலே நிம்மதி' படத்தில் தந்தை தேவாவின் இசையில் பாடல் ஒன்றைப் பாடியுள்ள சங்கீதா, 'காதல் மந்திரிச்சு' என்ற படத்திலும் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார்.
* 'காலமெல்லாம் காதல் வாழ்க' படம் தெலுங்கில் 'நுவ்வே நா பிரேயசி' என்று மொழிமாற்றப்பட்டு வெளியானதைத் தொடர்ந்து, அப்படத்தின் கதாநாயகி கௌசல்யா இரண்டு தெலுங்குப் படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.
* சரவணன்-கவுண்டமணி நடித்து விரைவில் வெளிவரவுள்ள 'சந்தோஷம்' படத்தை இயக்கியவர் புதிய இயக்குநர் கார்த்திக். இவர் இராம. நாராயணனிடம் 10 படங்களில் உதவியாளராக இருந்தவர்.
* சரத்குமார் நடித்த 'மூவேந்தர்' படத்தைத் தயாரித்த கங்கா கௌரி புரடக்சன்ஸ் நிறுவனம், அடுத்து கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது.
* 'பூவே உனக்காக' படம் மூலம் தமிழில் அறிமுகமான அஞ்சு அரவிந்த் இடையிடையே மலையாளப் படங்களிலும் நடித்து வருகிறார். தற்போது இவர் 'சேன பரம்பில் ஆனக்காரியம்' என்ற மலையாளப்படத்தில் நடித்து வருகிறார்.
* கேயார் இயக்கத்தில் 'காதல் ரோஜாவே' படத்தில் வில்லத்தனமான பாத்திரத்தில் நடித்திருக்கும் சுஜித் சாகர், இப்போது எஸ்.ஏ. சந்திரசேகரன் இயக்கும் 'பிரியமுடன்' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிக்கிறார்.
* 'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' ஆகிய வெற்றிப்படங்களின் இயக்குநர் சேரனிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்துள்ளார் நடிகர் முரளியின் சகோதரர் சுரேஷ்.
* 'தொட்டாச்சிணுங்கி' படத்தை இந்தியில் இயக்கி வரும் கே.எஸ். அதியமான் அடுத்து 'சொர்ணமுகி' படத்தையும் இந்தியில் இயக்கவுள்ளார். இந்தி 'சொர்ணமுகி'க்கு 'ஆப்மேரே ஹோசனம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

## கரிஷ்மாவின் காதல்

கரிஷ்மா கபூரும் அமிதாப் பச்சனின் மகன் அபிஷேக்கும் காதலிக்கிறார்கள். உத்தரவாதமான காதலா என்பது தெரியவில்லை.

கரிஷ்மாவும், அபிஷேக்கும் இரவு நேர விருந்துக் கேளிக்கைகளில் ஒன்றாகக் காணப்படுகிறார்களாம். கரிஷ்மாவின் அம்மா பபிதாவுக்கு அபிஷேக்கை மருமகனாக ஏற்கச் சம்மதம். அபிஷேக் வீட்டில்தான் பூகம்பம்.

கவர்ச்சிகாட்டிய கரிஷ்மாவை மருமகளாக ஏற்பது எப்படி? என்று யோசிக்கிறார்களாம். அபிஷேக் உறுதியாக நின்றால் அமிதாப்பச்சன் விட்டுக் கொடுப்பார். அபிஷேக் என்ன செய்யப் போகிறாரோ?

கோலீஸ்வரன் படம் மூலம் தமிழ்ப்பட ரசிகர்களுக்கும் விரைவில் அறிமுகமாகப் போகிறார் கரிஷ்மா கபூர். சந்திக்கத் தயாராகுங்கள்.


ஸ்நேகா

## இன்னொரு வாரிசு

எம்.ஜி.ஆர். படங்களில் சண்டைக் காட்சிகளில் தோன்றி பிரபலமானவர் ஜஸ்டின். எம்.ஜி.ஆரின் பாதுகாவலர்களில் ஒருவராகவும் இருந்திருக்கிறார். ஜஸ்டின் இப்போது உயிருடன் இல்லை.

குடும்பம் கஷ்டத்தில் அல்லாடியது. ஜஸ்டினின் முதல் பெண் பபிதா நடிக்க வந்து கவர்ச்சி நடிகையாக வலம் வந்தார். அதே குடும்பத்தில் இருந்து இன்னொரு கவர்ச்சி நடிகை இங்கே இருக்கிறாரே அவரேதான். பெயர்...

பபிதா சொந்தக் குடும்ப பிரச்சனையில்... குடும்பத்தை காப்பாற்ற ஸ்நேகா சினிமாவில். வெளியே கவர்ச்சி. உள்ளே சோகம்.

## மகேஸ்வரியின் மந்திரவலை

தெலுங்கில் நடிகர் சக்கரவர்த்தி. பின்னர் அஜித்குமாருடன் உல்லாசம். இப்போது பிரபுதேவாமீது மையல். மகேஸ்வரியின் பொழுது போக்கு காதலிப்பது. ஜாலியாகச் சுற்றுவது.

'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் பிரபுதேவாவின் ஜோடிகளில் ஒருவர் மகேஸ்வரி. பிரபுதேவா ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் மகேஸ்வரி துரத்தித் துரத்தி மந்திர வலை வீசினாராம். கடைசிக் கட்டத்தில் நடனப் புயல் வலையில் சிக்கியதாகத்தான் பட்சி சொல்கிறது. கரும்பு தின்னக் கூலியா?

பாடல் காட்சிகளை படமாக்கிய இயக்குநர் சுந்தருக்கு ஏககுஷி. அவர் எதிர்பார்த்ததுக்கு அதிகமாகவே பிரபுதேவாவுடன் ஒட்டிக் கொண்டு நடித்தாராம் மகேஸ்வரி. ரம்பாவுக்கு பாடம் படிப்பிக்க வேண்டும் என்பதற்காக பாடல் காட்சிகளை பிரமாண்டமாக படமாக்கி உள்ளார் சுந்தர். மீனாவையும், மகேஸ்வரியையும் தாராளமாக காட்டியும் இருக்கிறார்.

## ...புவுடன் மீனா

...னாக நடித்துக் கொண்டிருந்தவர் சிவச் ... பின்னர் இயக்குநராக மாறினார். நடிகை ... கணவரான ராசிதான் சிவச்சந்திரனை ...க்கியதாம்.

...யிர் கன்னம்மா', 'இரத்ததானம்' போன்ற ... முன்னர் இயக்கினார். இரண்டிலும் ... கதாநாயகன். பின்னர் நீண்டகால ... இப்போது மீண்டும் சுறுசுறுப்பாக ...க்கிறார்.

... கதாநாயகனாக நடிக்க சிவச்சந்திரன் ...போகும் புதிய படத்தின் பெயர்: 'மனம் ...யுதே உன்னை' பிரபுவின் ஜோடியாக ...மீனா நடிக்கிறார்.

எஸ்.எஸ். சந்திரன், 'ஆஹா' பட நாயகன் ராஜீவ் கிருஷ்ணா, லட்சுமி, மனோரமா ஆகி யோரும் நடிக்கின்ற...னர். இசை இளைய ராஜா.

## சிம்மராசி சரத்

சரத்குமார்-நக்மா இருவருக்கும் இடையே சின்னச் சின்ன ஊடல்கள் ஏற்பட்டன. ஊடல் கூடலில் முடிவது தானே வாடிக்கை.

'சூர்யவம்சம்' வெற்றிப் படத்தை தயாரித்த 'சூப்பர் குட் பிலிம்ஸ்' அடுத்து தயாரிக்கும் படம் 'சிம்மராசி'. இப் படத்தில் சரத்குமார்தான் ஹீரோ. தனது ஜோடியாக நக்மாவைப் போடுமாறு சிபாரிசு செய்தாராம் சரத்குமார். நாயகனின் கட்டளையை மீற முடியுமா? ஜோடி சேர்த்து விட்டனர்.

இசை: எஸ்.ஏ. ராஜ்குமார். இயக்கம்: ஈரோடு சௌந்தர்.

## மோகனுக்கு மூன்று பேர்

வெள்ளிவிழாப்பட நாயகன் என்று ஒரு காலத்தில் பேசப்பட்டவர் மோகன். அவருடன் நடிப்பதற்காக முன்னர் பல நடிகைகள் போட்டி போட்டனர்.

எல்லாம் பழைய கதை. இப்போது மோகனுடன் நடிக்க யாரும் முன்வருகிறார்கள் இல்லை. சொந்தப் படம் தயாரித்து நடிக்க ஜோடி தேடி களைத்துப் போனார்.

மோகனுக்கு எய்ட்ஸ் என்று வதந்தி பரவியதால் நடிகைகள் பிடிகொடுக்காமல் நழுவினார்கள். கடைசியாக மும்பாயில் இருந்தும், பெங்களூரில் இருந்தும் இரண்டு நடிகைகளை பிடித்து வந்திருக்கிறார். அவர்கள் தவிர ரசிகாவும் ஜோடியாக நடிக்க துணிந்து சம்மதித்திருக்கிறார்.

'அன்புள்ள காதலுக்கு' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இசைக்கும், காதலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, மோகனே இயக்கவும் போகிறார். இசை: தேவா. பாடல்கள்: அறிவுமதி.

## காதோடு சொல்லுகிறோம்

**அ**மெரிக்காவுக்கு பறக்கும் எண்ணத்தை தற்காலிகமாக மூட்டை கட்டி வைத்திருக்கிறார் 'கௌ' நடிகை. இதுவரை இருந்த வாடகை வீட்டை விட்டு, சொந்த வீடு வாங்கி சென்னை ஆள்வார் பேட்டையில் குடியேறி உள்ளாராம். வீடு உபயம் சுருக்கமாக மூன்றெழுத்தால் அறியப்படும் நடிகராம். அன்றாள நடிகைக்கு அன்பளிப்பு என்கிறார்கள்.

**'வா**ளி' நடிகையை 'பா' நடிகர் சந்திக்க, நடிகரின் மனைவி கடும் தடை போட்டிருக்கிறார். யாருக்காகவும் தடை தொடர்வதால் நடிகை உக்கிரமாகிவிட்டார். 'பா' நடிகரின் கண்முன்பாகவே இளம் நடிகர் ஒருவருடன் உரசிப் பேசிக் கொண்டு சென்றாராம்.

**மூ**ன்றெழுத்தில் பெயர் கொண்ட அந்த வாரிசு நடிகர் ஒரே படத்தில் நடிக்கும் போது இரண்டு நாயகிகளையும் சரிசமமாக கவனித்துக் கொண்டாராம். 'வள்ளி' நாயகியும் நடிகரைக் கவர்ந்துவிட்டார். இரண்டு நாயகிகளுமே நடிகருக்கு 'பொன்மனம்' என்று கூறுகிறார்களாம்.

**வி**சித்ரமான நடிகை தன் மகனை கல்யாணம் செய்ய முதலில் சம்மதித்தாராம் போலீஸ் அதிகாரியான தாயார். பின்னர் விசித்ரமானவரின் விசித்திரமான தொடர்புகள் பற்றி போலீஸ் அதிகாரிக்கு தகவல்கள் எட்டியதாம். "கல்யாணமும் வேண்டாம், கத்தரிக்காயும் வேண்டாம்" என்று தடைபோட்டுவிட்டார். நடிகையையும் மிரட்டி வைத்திருக்கிறாராம்.

## வில்லி லதா

'எந்த வேடம் இருந்தாலும் கொடுங்கள்' என்று நடிக்க வந்தார் லதா. அம்மா வேடங்கள், வில்லி வேடங்கள் தேடிச் சென்றன.

அரசியலும் லதாவை அழைத்தது. அரசியல் தலைவியாகும் கனவில் பேட்டிகள் கொடுத்து பிழந்து கட்டுகிறார். அதனால் இனிமேல் வில்லி வேடங்களில் நடிக்கமாட்டாராம்.

'மக்களைக் கவருகின்ற பாத்திரமாக இருந்தால் தாருங்கள்' என்று இப்போது கேட்கிறாராம். போட்டி அ.தி.மு.வில் சில பிரமுகர்கள் மிஞ்சி இருப்பதற்கே லதாதான் காரணமாம். எப்படிப் பார்த்தாலும் ஜெயலலிதாவுக்கு லதா வில்லிதான்!



குல்ஷன் குரோவர்

## அப்பாஸ் வேகம்


புதுமாப்பிள்ளையான அப்பாஸ் புது வேகத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறாராம். அவர் நடித்து வெளிவராமல் உள்ள படங்களை விரைவாக வெளியிடவைக்க நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

கமல் சார் மாதிரி சாதிக்கவேண்டும். ரஜினி சார் மாதிரி புகழ் பெற வேண்டும் என்பதுதான் அப்பாசின் ஆசை.

## சிம்ரான் சபதம்

அரைகுறை உடையுடன் கவர்ச்சிப் பிரதேசங்களை எடுப்பாக காண்பித்து வருகிறார் சிம்ரான். அத்தோடு இன்னொரு விஷயத்திலும், படு கவனமாக இருக்கிறார். எல்லோரிடமும் நல்ல பெயர் எடுப்பதுதான் அது.

எல்லோரையும் அனுசரித்து நடக்க வேண்டும். திமிர் கூடாது என்று காலையில் கண்விழித்ததும் சபதம் எடுத்துக் கொள்கிறாராம்.



மாதுரி டிக்ஷித்-ஷாருக்கான்-கரிஷ்மா கபூர் படம் தில் டூ பாகல் ஹை

## அப்படிப்போடு

பாண்டியராஜன் நடிக்கும் படம் ஒன்றுக்கு 'அப்படிப் போடு' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதாநாயகியாக ஈஸ்வரி ராவ் நடிக்கிறார். இவர் பாலுமகேந்திராவின் கண்டுபிடிப்பு. அவரது கட்டுப்பாட்டில் சிலகாலம் இருந்தவர்.

பாலுமகேந்திராவின் பொறுமையை ஈஸ்வரி ராவின் அதிரடி நடவடிக்கைகள் ரிப்பேராக்கியதாம். அதனால் பாலு ஒதுங்கிக் கொண்டார்.

'அப்படிப்போடு' படத்தின் இயக்கம் ராஜகோபால், இசை: தேவா.





...ரகர்-பூஜாகுமார் ...தல் ரோஜாவே

...ததில் ...துள்ளார். ...கா. ...க்கொண்டதால். ... வந்திருக்கிறார்.

## ...துவிட நாயகன்

...திப் படவுலகில் இன்று நம்பர் ஒன் ... இருப்பவர் ஷாருக்கான் என்கிறது ... சஞ்சிகை.

...தி நடிகர்களில் இளம் ரசிகைகளின் ...ர்ந்த இன்றைய இளம் நாயகனும் ...கான்தானாம்.

...ந்தைத்தனமான ஷாருக்கானின் முகம் ...சிகைகளை கண்டியிழுக்கிறதாம். ஷாருக் ... திருமணம் நடந்து, ஆண் குழந்தையும் ...து. மகனின் பெயர் ஆர்யன். மனைவி ...கவுரி.

...ருக்கானின் குழந்தையைக் காண்பதற்கும், ...கொடுப்பதற்கும் ஜூஹி சாவ்லா, சோனாலி ... மாதுரி டிக்ஷித் ஆகிய நடிகைகள் ... போட்டனர்.

...துரி டிக்ஷித் போன்ற நடிகைகள் ஷாருக் ... கைக்குள் வைத்திருக்க விரும்புவது ... இரகசியம்.

...துரி டிக்ஷித்துக்கு வயதாகி வருவதாக ...கள் நினைக்கிறார்கள். ஷாருக்கான் ... இளம் நாயகர்களுடன் ஓடி பாடி ...ாக்தான் மேலும் சிலகாலம் தாக்குப் ...லாம்.

## அசல் வாரிசு

தமிழ்த் திரையுலக மார்க்கண்டேயர் சிவகுமாருக்கு அசல் வாரிசு சூர்யா. பாராட்டுக்குக் காரணம் இல்லாமல் இல்லை. இன்னமும் சிகிச்சை எதிலும் சிக்காமல் கட்டுப்பாடாக இருக்கிறார்.

முதல் படமே சிம்ரானுடன் ஜோடி. அப்படியிருந்தும் கட்டுப்பாடாக இருப்பது என்றால் பயங்கரக் கஷ்டம்தான்.

சூர்யா அப்பா பிள்ளை. அப்பா பேச்சுக்கு மறுபேச்சு கிடையாது. ஏராளமான வாய்ப்புக்கள் தேடி வந்தும், நிதானம், படு நிதானம். "அப்பா அனுபவஸ்தர். அவருக்கு தெரியும் நெளிவு சுளிவெல்லாம்" என்கிறார் சூர்யா.

## அவர் வருவாரா?

இந்திப் படவுலகின் பயங்கரவில்லனை தமிழுக்கு இறக்குமதியாக்க நினைக்கிறார் குஞ்சுமோன். அந்த வில்லன் குல்ஷன் குரோவர்.

நாகார்ஜுனா நடித்து தமிழில் மொழிமாற்றப்பட்ட படம் 'எல்லாமே என் காதலி'. அப்படத்தின் மூலம் தமிழ்ப் பட ரசிகர்களுக்கும் குல்ஷன் குரோவர் வில்லனாக அறிமுகமானார்.

தனது மகன் எபி நடிக்கும் கோமஸ்வரன் படத்தில் குல்ஷன் குரோவரை பிரதான வில்லனாக நடிக்க வைக்க முயற்சிக்கிறார் குஞ்சுமோன்.

ஆனால் குல்ஷன் படு பிஸி. ஹொலிவூட் படம் ஒன்றிலும் அசத்தல் வில்லனாக நடித்துக் கொண்டிருக்கிறார். அப் படத்தில் முத்தக் காட்சிகளுக்கு குறைவில்லை. ஹொலிவூட் நடிகைகளுக்கு முத்தம் முத்தமாக கொடுத்துக் கொண்டிருக்கிறார் குல்ஷன்.

ஹொலிவூட் படப்பிடிப்பு, இந்திப் படப்பிடிப்பு என்று பிஸியாக இருப்பதால், தற்போதைக்கு தமிழ் வேண்டாம் என்று சொல்லியுள்ளார் குல்ஷன். ஆனால் குஞ்சுமோன் விடுவது மாதிரித் தெரியவில்லை.

## முகப்பில்

பிரபுதேவா

அஞ்சு அரவிந்த்

பிரத்தியேகப்படம்

## மரியாதை

'காதலுக்கு மரியாதை' படம் சூப்பர் ஹிட். அதனால் கதாநாயகன் விஜய் மேலும் பல படி உயர்ந்துவிட்டார். விஜய்க்கு இது சுக்கிரதிசை. தொடர்ச்சியாக வெற்றிப்படங்கள்.

15 படங்களில் இதுவரை நடித்துள்ளார் விஜய். ஆனாலும் தொடர் வெற்றிகளின் பின்னர் பயம் பிடித்திருக்கிறது. வெற்றிகளை தக்க வைக்கவேண்டுமல்லவா. அந்தப் பயம்தான். 'காதலுக்கு மரியாதை' படத்தின் வெற்றிக்கு காரணம் அதன் இயக்குநர் பாசில்தான் என்று அடக்கமாகக் கூறுகிறார் விஜய். இயக்குநருக்கு மரியாதை.

# லேடீஸ் ஸ்பெஷல்

## பிரசவத்தின் பின்....

**பிரசவத்திற்குப் பின் பெண்கள் கவனிக்க வேண்டியவை:**

* சாதாரண பிரசவம் என்றால், மறுநாளிலே தாய் எழுந்து நடக்கத் தொடங்கி விடலாம். விரைவாகவே நடக்கத் தொடங்கினால் காலில் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். அதனால் நரம்பில் தேக்க நிலை ஏற்படாது. சாதாரண பிரசவம் என்றால் முதல் நாளிலேயே குளிக்கலாம்.



* சிசேரியன் என்றால் இரண்டாம் நாளிலே குளிக்கலாம். ஆனால் தையல் நிலையைக் கருத்தில் கொண்டு டாக்டரின் ஆலோசனையின் பேரில் குளிப்பதே நல்லது. ஒரு வார ஓய்வு தேவையில்லை. ஓரளவு வேலைகளைச் செய்யத் தொடங்கலாம். இத்தருணத்தில் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீர் அதிகம் குடித்தால் வயிறு பெருத்துவிடும் என்பதும், தையல் விட்டுவிடும் என்பதும் மூடத்தனமான வாதம். தண்ணீர் அதிகம் குடிப்பதால் சிறுநீர்த் தடை நோய் ஏற்படாது. மலச்சிக்கலும் தோன்றாது.
* தாய், பாலூட்டும் போது சரியான முறையில் இருக்காவிட்டால் முதுகுவலி தோன்றும். தாய்மார்களுக்கு ஏற்படும் 90 சதவீத முதுகுவலிக்கு இதுவே காரணம். குழந்தையை மடியில் போட்டு பால் கொடுக்கும்போது தாயார் குனியக்கூடாது. அதனால் மடியில் ஒரு தலையணையைப் போட்டு அதற்கு மேல் குழந்தையை வைத்துப் பால் கொடுக்கலாம். அதிக நேரம் பால் கொடுக்கும் போது முதுகு வலி வந்தால் அதற்குத் தக்கபடி தாயாரும் தன் முதுகுக்கு தலையணை வைத்துக் கொள்ளலாம்.
* பிரசவம் முடிந்தவுடனே தாய்ப்பால் புகட்டினால் தாய்க்கு ஏற்படும் இரத்தப்போக்கு குறையும். எனவே உடனடியாக பால் கொடுக்க முயற்சி செய்யுங்கள். தாய்ப்பால் புகட்டும் தாய் சுத்தமாக இருக்க வேண்டும். தினமும் குளிக்க வேண்டும். சுத்தமான ஆடைகளையும் அணிவது சிறந்தது.

## பிறந்தநாள் பரிசு கொடுக்கப்போகிறீர்களா?

**பிறந்தநாள் பரிசு தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டியது:**

* பிறந்த நாள் பரிசு வாங்கும்போது அதன் கவர்ச்சி, அளவு போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதன் உபயோகத்திற்கு முன்னுரிமை கொடுங்கள்.
* ஒன்று, இரண்டு வயதுக் குழந்தைகளுக்கு துணிகளால் ஆன பொம்மைகளை வாங்கிக் கொடுக்கலாம். நான்கு வயது வரையிலான பருவத்தில் உள்ள குழந்தைகளுக்கு பிளாஸ்டிக், இறப்பர் பொம்மைகளை வாங்கிக்கொடுக்கலாம்.
* நாலு வயது வரையுள்ள குழந்தைகளின் கையில் தனியாக ஒரு போதும் பணத்தைக் கொடுக்க வேண்டாம். அவர்களுக்குப் பணத்தின் மதிப்புத் தெரியாததால் கண்ட இடத்தில் போட்டுத் தொலைத்து விடக்கூடும்.
* 5-10 வயது வரையிலான குழந்தைகளுக்கு பள்ளிக்கூட உபயோகத்திற்கான பேக்குகள், லஞ்ச் பொக்ஸ், ட்ரிங் போத்தல், கலர் பென்சில்கள் போன்றவைகளை வாங்கிக் கொடுக்கலாம். இந்த மாதிரியான பொருட்களை வாங்கிக் கொடுக்க முடியாவிட்டால், பணத்தைக் கொடுக்கலாம்.
* 15 வயதுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு டயரி, சரித்திரப் புத்தகங்கள் கொடுக்கலாம்.
* ஒரு பொருளைக் கொடுக்கும்போது அந்தப் பொருளைவிட மதிப்பு மிக்க புன்சிரிப்பையும் வழங்க மறந்து விடாதீர்கள். கூடவே உங்கள் வாழ்த்துக்களையும் வழங்குங்கள்.
* உங்கள் தகுதிக்கு ஏற்ற பொருட்களை மட்டும் வாங்கிக் கொடுத்தால் போதும். பகட்டுக்காக விலையுயர்ந்த பொருட்களை வாங்கிக் கொடுக்க வேண்டும் என விரும்பாதீர்கள்.

## முரசு-அருள் ஜுவலர்ஸ் தங்கமாலை பரிசுப் போட்டி அதிஷ்டசாலிகள் இவர்கள்


**ஆறுதல் பரிசுபெறும் மேலும் பத்து அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

26. ஹசீனா மக்கீன்,
    127, ஹப்புகஸ்தன்ன,
    மடவளை பஸார், கண்டி.
27. திருமதி க. மனோன்மணி,
    27/3,பஸல்ஸ் ஒழுங்கை,
    கொழும்பு-06.
28. எம்.எ.எஸ்.பஸ்மியா,
    தீன் வீதி, காத்தான்குடி-06.
29. அ.புஸ்பவதி,
    மகாவித்தியாலய வீதி, காரைதீவு-04.
30. சோபனா,
    1ம் ஒழுங்கை, சூசைப்பிள்ளையார் குளம்,
    வவுனியா.
31. கே.ரஜனி,
    03, பொபத்தல வீதி, ஆக்கரபத்தன.
32. திருமதி. ஆர்.ரதிதேவி,
    33/5ஏ, செண்ட் வில்பிரட் லேன்,
    கொழும்பு-15.
33. எம்.எம்.ஜெமீலா,
    52, ஆனமடு வீதி, கல்கமுவ.
34. எம்.யோகேஸ்வரி,
    கரவிட்ட, உடகரவிட்ட,
    இரத்தினபுரி.
35. சமீனா ரஸீட்
    HOUSE NO.36, BLOCK NO-20
    STREET NO.02, CODE NO 73302
    RAWDAH, STATE KUWAIT.

ஆறுதல் பரிசு பெறும் ஏனையோரது பெயர் விபரங்களும் அடுத்த வாரம் வெளியாகும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DC

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-02-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 20

புவனா

இளவரசர் ஆண்ட்ரூவை காதல் பைத்தியமாக்கினாள் சாரா. ஆண்ட்ரூ சாராவை மணக்க முடிவு செய்தார்.

தனது முடிவை அவர் சாராவிடம் தெரிவித்தபோது, சாரா 'பிகு' பண்ணத் தொடங்கினாள்.

"யோசித்துச் சொல்கிறேன்" என்று சில நாட்கள் அவகாசம் எடுத்துக்கொண்டாள்.

அந்த கால அவகாசத்திற்குள் ஆண்ட்ரூ தவித்துப்போனார்.

சாராவை அரச குடும்பத்திற்கு அறிமுகம் செய்துவைத்த டயானாவுக்கே சாராவின் போக்கு பிடிபடவில்லை.

"ஏன் இப்படி ஆண்ட்ரூவை அல்லாடச் செய்கிறாய்?" என்று கேட்டார் டயானா.

"இப்படித்தான் ஆண்களை தவிக்கச் செய்ய வேண்டும். கேட்டதும் சம்மதித்தால், அலைகிறோம் என்று நினைப்பார்கள். மலிவாக எடைபோட்டு விடுவார்கள்!" என்று சாரா விளக்கம் சொன்னார்.

சாள்ஸ்சையும் இப்படி தவிக்க வைக்காமல் விட்டதுதான் தான் செய்த தப்போ என்று நினைத்தார் டயானா.

இழுத்தடித்துவிட்டு சாரா சம்மதித்தாள். ஆண்ட்ரூ-சாரா திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது.



கைகொடுத்து டயானாவை இழுத்துக்கொண்டு ஆடத் தொடங்கினார்.

அனைவரும் வியக்கும் அளவுக்கு டயானா வெயின் ஸிலிப் போடு ஈடு கொடுத்து ஆடினார்.

சார்ள்ஸ்சுக்கு பொறாமையை மீறி வியப்பாக இருந்தது. நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்கள் மெய் மறந்து வேல்ஸ் இளவரசியின் நடனத்தை இரசித்தனர்.

வெள்ளை உடையுடன் பூமிக்கு நழுவிய தேவதை ஒன்று நடன அரங்கில் அசைந்தது போலிருந்தது டயானாவின் நடனம்.

நடனத்தின் இறுதிக் கட்டம் தான் சாள்ஸ்சுக்கு தாளமாட்டாத எரிச்சலை ஏற்படுத்தியது.

சுழன்று வந்த டயானாவை அப் படியே அலக்காகத் தன் கரங்களில் ஏந்தினார் வெயின் ஸிலிப். வண்ணத்திப் பூச்சியாய் கண் இமைகள் படபடக்க புன்னகைத்தாள் இளவரசி.

சாள்ஸ் தன் கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டார்.

## வெள்ளை உடையில் நடன தேவதை

அரண்மனைக்குள் மருமகளாக சாரா வந்தது டயானாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

கொடுமைப்படுத்தும் தனிமையை விரட்ட சாராவின் துணை உதவும் என்று டயானா எண்ணினார்.

இருவரும் இணைந்து குறும்புகள் செய்ய ஆரம்பித்தனர். அரண்மனைப் பணியாட்களை பயமுறுத்துவது, குழந்தைகள் வில்லியம்சுடனும் ஹரியுடனும் விளையாடுவது என்று பொழுதைப் போக்கினர்.

இளவரசர் ஆண்ட்ரூவை பூரண கட்டுப் பாட்டில் வைத்திருந்தாள் சாரா.

"ஆண்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க கட்டிலில் கொஞ்சம் விவேகம் காட்டத் தெரிந்தால் போதும். எந்த ஆணும் சரணடைந்து விடுவான்" என்று சாரா சொன்ன தத்துவம் டயானாவுக்கு முதலில் வியப்பாக இருந்தது.

ஆண்ட்ரூ சாராவின் பின்னால் சுற்றிக் கொண்டு திரிந்ததைக் கண்டபோது 'சாராவின் தத்துவம் பயனளிக்கிறது' என நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொள்வாள் டயானா.

### பெரும் சர்ச்சை

சாராவும், டயானாவும் இணைந்து செய்த குறும்பு ஒன்று பிரிட்டன் பாராளுமன்றம்வரை சென்று சர்ச்சை கிளப்பியது.

இளவரசர் ஆண்ட்ரூ தன் நண்பர்களுக்கு விடுதி ஒன்றில் விருந்து கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்.

ஆண்களுக்கு மட்டுமே அனுமதி என்ற கட்டுப்பாட்டுடன் நடைபெறும் விருந்து அது.

எப்படியாவது அந்த விருந்தில் கலந்து கொண்டு, ஆண்களின் தனி உலகம் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும் என முடிவு செய்தனர் சாராவும், டயானாவும்.

ஆண் பொலிசார் போன்று சீருடை அணிந்தபடி விருந்து நடைபெறும் இடத்திற்குச் சென்றனர்.

காவலுக்கு நின்றவர்களுக்கு விஷயம் தெரிந்துவிட்டது. அதனால் மடக்கிப் பிடித்துவிட்டனர்.

தாங்கள் யார் என்று டயானாவும், சாராவும் கூறியபின்னர்தான் அவர்களை திரும்பிச்செல்ல காவலர்கள் அனுமதித்தனர்.

இந்த விவகாரம் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது. பிரிட்டிஷ் சட்டப்படி பொலிசார் போன்று வேடம் புனைவது குற்றம்.

பாராளுமன்றத்தில் டயானா, சாரா விவகாரம் விவாதத்துக்கு வந்தது.

பாரதூரமான விளைவுகள் எதுவும் ஏற்படவில்லையென்பதாலும், தமாஷாகச் செய்யப்பட்ட காரியம் என்பதாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை நகைச்சுவையோடு எடுத்துக்கொண்டனர். அதனால் விவகாரம் பெரிதாகவில்லை.

### நடன இளவரசி

1985ல் நடன நிகழ்ச்சி ஒன்றுக்கு சாள்ஸ்சும், டயானாவும் சென்றனர். பிரிட்டனின் உயர்பிரமுகர்கள் பலர் நடன நிகழ்ச்சியைக் காண்பதற்கு வந்திருந்தனர்.



வெயின்ஸிலிப்புடன்-துள்ளல்

அனைவரது கண்களும் டயானாமீது அம்புகளாகப் பாய்ந்தன.

வெள்ளை நிறத்தில் உடலோடு ஒட்டிய ஆடையில், சிக்கான உடம்போடு காட்சியளித்தார் டயானா.

வைத்த கண்ணை வாங்கமுடியாமல் தடுமாறினார்கள் பிரமுகர்கள். சாள்ஸ் அதனைக் கவனித்தபோது, பொறாமையால் முகம் மாறியது.

நடனமாதர்கள் பலர் ஆடிக்கொண்டிருந்தனர். பிரபல நடனக்காரரான வெயின் ஸிலிப் ஆடிக் கொண்டிருந்தார்.

பிரிட்டனின் இளம் பெண்கள் பலரை நடனத்தால் கவர்ந்தவர் வெயின் ஸிலிப். டயானாவுக்கும் அவரது நடனம் பிடிக்கும்.

நடனப் பெண்களோடு ஆடிக்கொண்டிருந்த வெயின் ஸ்லிப் போடு போய்ச் சேர்ந்து கொண்டார் டயானா.

வேல்ஸ் இளவரசி ஆட வந்தால், வெயின் ஸிலிப்புக்கு கசக்குமா?

"நன்றாக ஆடினீர்கள்" என்றார்கள் அனைவரும் கோரஸாக.

"ஆம், மிக நன்றாக ஆடினாய்" என்றார் சாள்ஸ். உள்ளூர எழுந்த எரிச்சலை காட்டாமல் நாசூக்காகப் பாராட்டினார்.

அரண்மனைக்குச் சென்ற பின்னர்தான் டயானாவைக் கடிந்துகொண்டார்.

"இப்படியெல்லாம் நடனம் ஆடினால் இளவரசி என்று சொல்லமாட்டார்கள். மதிக்கவும் மாட்டார்கள். நடனக்காரி என்று தான் அழைப்பார்கள்."

"நடனக்காரி என்றால் என்ன குறைச்சல்? தவிர, நானும் நடனக்காரிதானே. அரண்மனையில் உள்ளவர்களும், நீங்களும் ஆட்டுவிப்பதற்கு ஏற்ப ஆடும் நடனக்காரி தானே!"

டயானாவின் குத்தலைக் கேட்டதும், முகத்தை சிடு சிடுப்பாக வைத்துக்கொண்டு சென்றுவிட்டார் சாள்ஸ்.

அரண்மனைக்குள் மூத்த மருமகள் டயானாவைவிட இளைய மருமகள் சாராவுக்கு அதிக செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது.

அரச குடும்பத்தின் சில போலியான சம்பிரதாயங்களுடன் சாரா ஒத்துப்போவதுபோல நடித்தாள். அதனால் மகாராணியின் பாராட்டைப் பெற்றாள்.

தனியாக டயானாவுடன் பேசும்போது, அரச குடும்ப மரபுகளை கிழிகிழியென்று கிழித்து விடுவாள் சாரா.

சாராவின் போக்கு டயானாவுக்கு சிரிப்பாகவும் இருந்தது. வியப்பாகவும் இருந்தது.

எல்லோரும் நிர்வாணமாக இருக்கும் ஊரில் ஆடையுடன் இருப்பவன் முட்டாளாகக் கருதப்படுவான்.

தனது காதுபடவே மகாராணி சாராவை பாராட்டுவதைக் கேட்க டயானாவுக்கு பொறாமை ஏற்படவில்லை. மகாராணி ஏமாறுகிறாரே என்ற அனுதாபம்தான் ஏற்படும்.

தன் குழந்தைகளுடன் அதிக நேரத்தை செலவிடவும் டயானா விரும்பினார். சாள்ஸ்சால் ஏற்பட்ட இழப்புக்களை போக்கவும் குழந்தைகளுடன் பொழுதைக் கழிப்பது இதமாக இருந்தது.

தன்னுடைய தோற்றத்திலும் படிப்படியாக கவனம் செலுத்தினார்.

முடியைக் கட்டையாக வெட்டிக்கொண்டார். உடைகளின் அமைப்பில் தனிக் கவனம் செலுத்தினார்.

டயானாவின் முடி வெட்டும், உடைத் தேர்வும் இங்கிலாந்துப் பெண்களின் ஃபாஷனாகியது.

"டயானா ஸ்ரைல்" என்று தனிப் பாணியே உருவாகத் தொடங்கிவிட்டது.

ஆரம்பத்தில் டயானாவுக்கு சங்கடமாக இருந்தாலும் போகப் போக சந்தோசமாக இருந்தது.

புகழையும், பாராட்டையும் இரசிக்கக் கற்றுக்கொண்டார்.

இதுபற்றி டயானா பின்வருமாறு கூறினார்:

"நான் எவ்வளவோ முயன்று எனது சுபாவங்களை மாற்றிக் கொண்டேன். பலரும் மெச்சும்படி வாழத் தலைப்பட்டேன். ஆனால் என் கணவருக்கு என் நடவடிக்கைகள் அத்தனையும் வெறுப்பை ஊட்டியது."

இக்காலத்தில் துயர நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது.

(அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**வி. பானுமதி,**
அலஸ் தோட்டம், சாம்பல்தீவு,
சிவாகடை, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பழைய பாடல்

எழுதியவர்: **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**
ஆண்டு: **1957**
திரைப்படம்: **புதையல்.**



உனக்காக எல்லாம் உனக்காக- இந்த
உடலும் உயிரும் ஒட்டியிருப்பதும் உனக்காக
எதுக்காக கண்ணே எதுக்காக?- நீ
எப்பவும் இப்படி எட்டியிருப்பது எதுக்காக?

கண்ணுக்குள்ளே வந்து
கலகம் செய்வதும் எதுக்காக?- மெள்ளக்
காதுக்குள்ளே உந்தன்
கருத்தைச் சொல்லிவிடு முடிவாக
(உனக்)

பள்ளியிலே இன்னுமொருதரம் படிக்கணுமா?- இல்லே
பயித்தியமாய்ப் பாடி யாடி நடிக்கணுமா?
துள்ளிவரும் காவேரியில் குதிக்கணுமா?- சொல்லு
சோறுதண்ணி வேறு ஏதுமே இல்லாமெ கெடக்கணுமா?
(உனக்)

இலங்கை நகரத்திலே இன்பவல்லி நீயிருந்தால்
இந்துமகா சமுத்திரத்தை இங்கிருந்தே தாண்டிடுவேன்;
மேகம்போலே வானவீதியிலே நின்று மிதந்திடுவேன்-இடி
மின்னல் மழை புயலானாலும் துணிஞ்சு இறங்கிடுவேன்.
(உனக்)

# உலகப் புகழ்பெற்ற படம்



1964 சைப்ரஸ் உள்நாட்டுக் கலகத்தில் தன் கணவன் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேட்டவுடன் சோகத்தின் பிடியில் உள்ள மனைவி. அவரை அழுது கொண்டே சமாதானப்படுத்தும் மகன். இந்தச் சோகக்காட்சியை தன் கமராவுக்குள் பதிவு செய்தவர், உலகப் புகழ் பெற்ற புகைப்பட நிபுணர் டொனால்ட் மெக்யூலன். புலிட்சர் பரிசு பெற்ற புகைப்படம் இது.

# இன்னுமொரு...!

அன்றொருநாள்
மாசிமாதம்
நாலாம் திங்கள்
புதிர் ஒன்று
பிறந்தது
பூமியில்
குறைப்பிரசவமாக!

இன்னமும்
தவள்கின்றது
தடுக்குப் பாய்
குழந்தையாக!

முகவரி
தொலைந்தவர்களின்
முனகல் ஒலி
தாலாட்டாகியது!

தேசியத்தை
தொலைத்துவிட்டு
கொடிகள்
மாத்திரம்
மாறிக்கொண்டது!

அப்புகாமியும்,
அலிபாபாவும்,
சுப்பையாண்ணையும்,
கை கோர்த்துக்
கொண்டார்கள்-
பாடப் புத்தகங்களில்!

வாக்குறுதி
வாக்குரிமையை
காதலித்துக்
கொண்டது-
பள்ளிக்கூட
காதலாக.

பத்திரிகையும்,
சஞ்சிகையும்
சன நாயகத்தை
காப்பாற்றியது-
பட்டினிச்
சாவில் இருந்து!

ஆண்ட
பரம்பரைகள்
ஆர்ப்பரித்துக்
கொண்டது-
மேடைகளில்
மீண்டும் ஒரு
குளிர்காய்வதற்கு!

அதுவரை
ஒன்றுபட்டு
இருந்த
வர்க்கங்கள்
யாசிக்கத்தொடங்கியது
இன்னொரு
சுதந்திரத்தை!

கனவுகளையும்
இலட்சியங்களையும்
சுமக்க வேண்டியவர்
கைகளில்-
சீருடையும்
ஆயுதமும்!

தெயிலைக்கும்
இறப்பருக்கும் பதில்
இளைஞர்களும்
யுவதிகளும்
ஏறிக்கொண்டார்கள்-
விமானங்களில்,
ஏற்றுமதியாக!

சும்மா
கிடைத்ததாலோ
என்னவோ
சுமையாகிப்போனது
ஒவ்வொருவர்

உதிரன்-இணுவில்

# தேன் கிண்ணம்


பூக்கள்
கீ... கீ....
என கத்தி
சூரியனை வரவேற்க
ஆயத்தம் செய்தன!
o–o
பறவைகள்
தமது இதழ்களை விரித்து
சுகந்தமான வாசனை
பரப்பி
சந்தோசம் கொண்டாடின!
o–o
தென்றல் காற்றிற்கு
மரத்தின் வேர்கள்
மெல்ல அசைந்து
வரவேற்பு கொடுத்தன!
o–o
சூரியனின்
வரவை அறிவிக்க
கோழி கூவியது–அதிர்ச்சியில்
சேவல் முட்டையிட்டது!
o–o
'மழை
வானத்தில் இருந்து
பூமியை நோக்கி
பெய்யும்'
என்ற உண்மையை
நீண்ட காலத்தின்பின்
'செய்திகள்' சொன்னது!
o–o
சூரியன் மெல்ல
மெ....ல்...ல
எ...ழுந்தது.
மேற்கில்!
o–o
இலங்கையில்
பிறந்து விட்டதாமே...
சமாதானம்!
o–o

சுபா வரன்- கண்டி.

# மனசு

கொப்பியின்
தாள்களைப் போல்,
இடையிடையே
கோடுகளாய்-
தழும்புகளும்,
வெறுமையும்....
சௌஜன்யா.

# பேனா நண்பர்கள்



பெயர்: எல். ஜெயசீலன்,
வயது: 26
முகவரி: 42, ஆனந்தராம வீதி, மேல்பே, மொரட்டுவ.
பொழுது போக்கு: தொலைக்காட்சி.



பெயர்: எஸ். செல்வராணி,
வயது: 16
முகவரி: 39/ஏ, பிரதான வீதி, கஹவத்த
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.



பெயர்: எம். நௌபர்,
வயது: 22
முகவரி: பதுறியா வீதி, வாழைச்சேனை-5.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: வி. டயானா,
வயது: 12
முகவரி: 59, இருதயபுரம் கிழக்கு, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை.

# காதல்

தீக்குச்சி இல்லாமல் தானாகப் பற்றி
எண்ணெய் இல்லாமல் சுடர் விட்டு
எரியும்!
o–o
ஒட்சிசனைப் போல்
அனுமதியில்லாமல்,
உட்சென்று ஒய்யாரமாய்
உட்கார்ந்து கொள்ளும்!
o–o
இரவுகளை இடைவிடாது அழைத்து,
இமைக்குள் மெதுவாக நுழைந்து,
கனவுக்குள் கனவு காணும்!
o–o
கட்டளைக்கு அடங்காமல்
இரத்த அணுக்களை போராட விட்டு,
வேடிக்கை பார்க்கும்!
o–o
இன மத பேதம் பார்க்காமல்,
தன் விருப்பப்படி தன் நேசத்தைப்
பற்றிக் கொள்ளும்!
o–o
பிரிவை வெறுத்து, நேசத்தை
நேசித்து மௌனமாக இருந்து,
தேவைக் கேற்ப தென்றலைத்
தூது விடும்!
o–o
வெளிச்சம் கொடுத்து
விளையாட
வைக்கும்; அதுபோல் வெப்பம்
கொடுத்து கருகவும் வைக்கும்!
o–o
மரணத்திலும் மரணிக்காமல்
அழியாத காவியமாக
சரித்திரம் படைக்கும்!
o–o

எஸ். நிவாசன்-மட்/மகிழடித்தீவு.

# இந்த வாரம் உங்கள் பலன்

(01.02.1998 தொடக்கம் 07.02.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், செவ்வாய், வெள்ளி. |
| கும்பம் | - வியாழன், கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |
| தனு | - சுக்கிரன் (வக்கரகம்) |

சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 1 மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| **புதன்**- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | மு.ப. 10 மணி |
| **சனி**- வீண் முயற்சி, தொழில் நஷ்டம். | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- செலவு மிகுதி, வெளியிட வாழ்க்கை. | பகல் 11 மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| **புதன்**- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் 11 மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | பகல் 12 மணி |
| **திங்கள்**- தொழிலில் பிரச்சனை, பணவரவு குன்றும். | பகல் 11 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, கௌரவ மிகுதி. | மு.ப. 10 மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், தேகசுக நன்மை. | பகல் 11 மணி |
| **வியாழன்**- உயர்ந்த நிலை, பணவரவு. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- உறவினர் பகை, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| **சனி**- தொழில் மந்தம், பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- கடன் சுமை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **புதன்**- சுபகாரிய மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- தொழில் கஷ்டம், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- தொழில் கஷ்டம், அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| **புதன்**- புதிய முயற்சி, பண வரவு. | பகல் 11 மணி |
| **வியாழன்**- கௌரவ மிகுதி, உறவினர் பகை. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பகல் 11 மணி |
| **சனி**- வீண் முயற்சி, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- மனக் கலக்கம், பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- வீண் மனஸ்தாபம், மனக் கிலேசம். | பி.ப. 1 மணி |
| **புதன்**- கடன் தொல்லை, பெரியோர் உதவி. | பகல் 11 மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், கௌரவ மிகுதி. | மு.ப. 10 மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, செய்தொழில் விருத்தி. | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், வீண் மனஸ்தாபம். | பகல் 11 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- பலவித பேறு, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| **புதன்** - இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் 11 மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, பண வரவு. | பி.ப. 1 மணி |

**அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் 11 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| **புதன்**- இனசன நன்மை, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, பலவித பேறு. | பி.ப. 2 மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| **புதன்**- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- வெளியிடப்பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- மனக்குறை நீங்கும், பண வரவு. | பகல் 12 மணி |
| **சனி**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் சகாயம், உறவினர் உதவி. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- மனக்கிலேசம், வீண் விரயம். | பகல் 11 மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| **புதன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- தொழில் நஷ்டம், பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| **வெள்ளி**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **சனி**- கௌரவ மிகுதி, காரியானுகூலம். | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், பணச் சிக்கல். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| **புதன்**- பயனுள்ள செயல், கௌரவமிகுதி. | பகல் 12 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3**


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, பொருள் பேறு. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| **புதன்**- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், காரியானுகூலம். | பகல் 11 மணி |
| **சனி**- பணவரவு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**





நண்ணி வரு மணி யோசையும், பின்னங்கு
நாய்கள் குரைப்பதுவும்
எண்ணு முன்னே 'அன்னக் காவடிப் பிச்சை'யென்
றேங்கிடு வான்குரலும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# அதிகம் பின்பற்றப்படுவது எது?

ஒரு சமயம் சக்கரவர்த்தி அக்பர், தன் சபையில், "உலகிலேயே அதிகம் பேர் பின்பற்றக்கூடிய தொழில் எது?" என்று கேட்டார்.

உடனே சபையில் இருந்தவர்கள் எல்லாரும் ஆளாளுக்கு ஒவ்வொன்றாக விவசாயம், தச்சுத் தொழில், மட்பாண்டத் தொழில் என்று சொன்னார்கள்.

ஆனால் அங்கே அமர்ந்திருந்த பீர்பால் எதுவும் பேசவில்லை. இதைக் கண்ட அக்பர் பீர்பாலிடம்,

"நீ என்ன நினைக்கிறீர்?" என்று கேட்டார்.

"உலகிலேயே அதிகம் பேர் பின்பற்றக்கூடிய தொழில் வைத்தியம்தான் என எண்ணுகிறேன்," என்று சொன்னான் பீர்பால்.

இதைக் கேட்ட சபையோர் பீர்பாலின் கருத்தை எதிர்த்தனர்.

"வைத்தியத் தொழில் முறைப்படி பயின்று பல வருடங்கள் கற்றுக் கொண்டு செய்ய வேண்டிய தொழில். அதை அதிகம் பேரால் பின்பற்ற முடிவதில்லை. பீர்பால் சொல்வது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது," என்றார்கள்.

அக்பருக்கும் இந்தப் பதில் வியப்பை அளித்தது. எனினும் சபையைக் கலைத்து, அந்த விவாதத்தை முடித்து வைத்தார்.

மறுநாள் சபை கூடியது.

பீர்பால் மிகவும் தாமதமாக அரச சபைக்கு வந்தான். ஒரு பெரிய போர்வையால் தலையில் இருந்து கால்வரை போர்த்திக் கொண்டிருந்த அவனைப் பலரும் கவலையுடன் விசாரித்தார்கள்.

"ஒன்றுமில்லை. எனக்குத் தாங்க முடியாத தடிமனாக இருக்கிறது," என்றான் பீர்பால்.

"வெந்நீரில் மூலிகை இலையை அவித்து, அந்த நீரால் முகத்தைக் கழுவும்; சரியாகிவிடும்!" என்றார் சபையில் இருந்த ஒருவர்.

"தலை முதல் கால்வரை இழுத்துப் போர்த்திக்கொண்டு ஓய்வு எடும் சரியாகி விடும்," என்றார் இன்னொருவர்.

"மஞ்சளை நெருப்பில் சுட்டு முகர்ந்தால் தடிமன் போய்விடும்," என்று சொன்னார் சபையில் இருந்த மற்றொருவர்.

இப்படிப் பலரும் ஆளுக்கொரு யோசனையைச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

பீர்பால் தனது போர்வையைக் களைந்து விட்டு,

"ஒரு சாதாரண தடிமனுக்கு நிவாரணமளிக்க இவ்வளவு வைத்தியர்கள் முன் வந்துள்ளீர்கள். எனவே உலகிலேயே வைத்தியம் தான் அதிகம் பேரால் பின்பற்றப்படும் தொழில் என்பதில் சந்தேகமே இல்லை," என்று கூறினான்.

இதைக் கேட்ட சபையினர் வாயடைத்துப் போனார்கள்.



# அதிசயம் - ஆனால் உண்மை!



### புனிதப் பயணி:

→ பாரசீகத் தத்துவமேதை அபுல் காஸிம் ஜொனித் 30 முறை மக்காவுக்குப் புனிதப் பயணம் சென்றார். இவர் முதல் முறை மக்காவுக்குப் போகும் போது முழந்தாளில் ஊர்ந்து சென்றார். இவர் முழந்தாளில் ஊர்ந்து சென்ற தூரம் 1400 மைல்.



### நேரம் தவறாத வானவில்:

↑ ஒஸ்ரியாவில் உள்ள டோவன் என்ற மலையில் உள்ள நேடன் நீர்வீழ்ச்சி தினமும் மாலை 3.30க்கு வானவில்லைப் பிரதிபலிக்கும்.



### தொப்பிக் காளான்:

← மெக்ஸிக்கோ நாட்டிலுள்ள காளான்கள் விளிம்பு கொண்ட தொப்பிகள் போன்று காணப்படும்.



### இரட்டைவாய் மீன்:

← அமெரிக்காவில் உள்ள பெண்டிக்டன் என்ற ஊரைச் சேர்ந்த ரொபேட் டி ட்விஸ் பிடித்த மீன் ஒன்றுக்கு இரண்டு வாய்கள் இருந்தனவாம்.

# வாரம் ஒரு நாடு

## ஐக்கிய அரபுக் குடியரசு

தலைநகர்- அபுதாபி
பரப்பு - 82,800 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 19 இலட்சம்
மொழி - அரபி
எழுத்தறிவு - 68%
சமயம் - இஸ்லாம்
நாணயம் - திர்ஹாம்
தனி நபர் வருமானம் - 22,220 டொலர்.

**அமைவிடம்:**

பாரசீக வளைகுடாவில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

அபுதாபி, டுபாய், ஷார்ஜா, உம் அல் குவாய்ன், அஜ்மன், ஃபுஜாய்ரா, சாஸ் அல்கைமா ஆகிய ஏழு குடியரசுகள் இணைந்ததுதான் ஐக்கிய அரபுக்குடியரசு. இதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அலுவல்களை 1971 வரை இங்கிலாந்து அரசே கவனித்து வந்தது.


தற்போது இந்த ஏழு குடியரசுகளின் ஆட்சியாளர்களின் கூட்டான 'சுப்ரீம் கவுன்சில்' என்பதே ஆட்சி பீடம். இந்த 'சுப்ரீம் கவுன்சிலே' நாட்டின் ஜனாதிபதியைத் தெரிவு செய்கிறது.



**பொருளாதாரம்:**

விவசாய விளைபொருட்கள் மிக மிகக் குறைவு. பேரீச்சம்பழம் அதிகமாகக் கிடைக்கின்றது. சீமெந்து, உரம், அலுமீனியப் பொருட்கள் உற்பத்தி முன்னேற்றமடைந்து வருகிறது. பெற்றோலியம் முக்கிய வருமான மூலம் ஆகும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.02.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 230
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 228

**பரிசுக்குரியவர்:**
ஜெயரெத்தினம் அஜெந்திரன்
மட்/களுதாவளை மகா.வித், களுவாஞ்சிகுடி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே. ஸ.ஃப்ரீன் மொஹமட், மஹவெலமுல்ல, முஸ்லிம் வித். வெள்ளவாய. | பா. சசிகுமார், நு/கொட்டகலை த.ம.வி. கொட்டகலை. |
| ம. அருட்கலாநிதி, புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார். | கே. தர்ஷனி கிருஸ்ணசாமி, நு/சென்ஜோசப் தமிழ் மகா வித்., மஸ்கெலியா |
| மே. லக்ஷ்மி பிரதா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | அ. ஷபானா, பாத்திமா பாலிகா மகா வித்., புத்தளம். |
| நிழஸ்டா புவிராஜசிங்கம், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை. | இ. வாசுகி, கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. |
| ஹிஜாஷான் ஹில்மி, ஜும்மா பள்ளி வீதி, பெரியமுல்லை, நீர்கொழும்பு. | வே. கோபிகா, கொ/தமிழ் மகா வித்தியாலயம், தெஹிவளை. |


# தொலைநோக்கி கண்டுபிடிப்பு

தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் யார் என்று கேட்டால், உடனே எல்லோரும் கலிலியோ என்றுதான் கூறுவார்கள். இது ஓரளவு சரி. கலிலியோ தொலைநோக்கியை 1609ல் கண்டுபிடித்தார்.

ஆனால் 1608ம் ஆண்டு மூக்குக் கண்ணாடி தயாரிக்கும் டச்சுக்காரரான ஹேன்ஸ் லிப்பர்ஷே என்பவர் தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார். இருப்பினும் அரசாங்கம் இக்கண்டுபிடிப்புக்கான காப்புரிமையை அவருக்கு வழங்கவில்லை.

எனவேதான் இத்தாலியைச் சேர்ந்த வானியல் வல்லுநர் கலிலியோ முதன் முதலாக தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

கலிலியோ கண்டுபிடித்த முதல் தொலைநோக்கி ஒருபொருளை 33 மடங்காக பெரிதாக்கிக் காட்டும் திறனுடையதாக இருந்தது. இதன் உதவியால் வான் கோளின் ஒரு பகுதியை மட்டுமே பார்க்க முடிந்தது.



இதைத் தொடர்ந்து மேலும் பல ஆய்வுகள் செய்து, சிறந்த தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார் கலிலியோ. இந்தத் தொலைநோக்கிதான் இவர் கோள்களைப் பற்றிப்பல ஆராய்ச்சிகள் நடத்த உதவியது.

# முதலாம் உலகப்போர்



உலக வரலாற்றை எடுத்துக்கொண்டால் பல போர்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் முக்கியமானது முதலாம் உலகப்போர். இது 1914ம் ஆண்டு முதல் 1918ம் ஆண்டுவரை நடந்தது.

ஃபிரான்ஸ் மற்றும் ஜெர்மனி நீண்ட நாட்களாக பகை நாடுகளாக இருந்தன. மேலும் ஒஸ்ரியா, ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய நாடுகள் வல்லரசுகளாக மாற நினைத்தன. இதன் காரணமாகத்தான் முதலாம் உலகப்போர் நடந்தது.

இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா, செர்பியா, இத்தாலி, ருமேனியா கிரேக்கம் ஆகிய நாடுகள் ஓரணியாகவும், ஜெர்மனி, ஒஸ்ரியா, ஹங்கேரி, பல்கேரியா' ஆகிய நாடுகள் ஓரணியாகவும் நின்று போரிட்டன.

போரில் ஜெர்மனியும் அதன் கூட்டு நாடுகளும் தோற்கடிக்கப்பட்டன. இதன் விளைவாக ரஷ்யாவும், அமெரிக்காவும் வல்லரசு நாடுகளாக மாறின.

# கினியா கிளிகள்

பப்புவா நியூ கினியா நாட்டில் 'பாரடைஸ் பரட்ஸ்' எனப்படும் கிளிகள் காணப்படுகின்றன. நம் நாட்டில் குயில் தன் முட்டைகளை இட காகங்களின் கூட்டைத் தேடிப்பிடிப்பது போல, இந்தக் கிளிகள் தம் முட்டைகளை இட கறையான் புற்றுக்களைத் தேடிப் பிடிக்கின்றன.

உயரமாக இருக்கும் கறையான் புற்றுக்களில் இந்தக் கிளிகள் துவாரங்களை உண்டாக்கி, உள்ளே புகுந்து கூடு அமைத்து



முட்டைகள் இடுகின்றன. அவை அங்கு அடைகாத்து குஞ்சு பொரிக்கின்றன.

இந்தக் கிளிகள் அங்கே வளரும் கறையான்களுக்கு எவ்வித தொல்லையும் கொடுப்பதில்லை. கறையான்களும் இக்கிளிகளுக்கு தீங்குசெய்வதில்லை.

# நீண்ட வார்த்தை

ஆங்கிலத்திலேயே மிக நீளமான வார்த்தை எது? ' ரண்டம் ஹவுஸ் டிக்ஷனரி' (Random House Dictionary) என்ற ஆங்கில அகராதியில் காணப்படும் வார்த்தை. இதோ அந்த நீளமான வார்த்தை.

**pneumonoultramicroscopicsilic-ovolcanoconiosis**

மொத்தம் 45 எழுத்துக்கள் கொண்ட இந்த வார்த்தை, நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்பவர்களைத் தாக்கும் ஒரு நோயின் மருத்துவப் பெயராகும்.

# வேலை நிறுத்தம்

இன்று உலகில் எதற்கெடுத்தாலும் வேலை நிறுத்தம் தான் ஒரே வழி என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் 70 ஆண்டுகளாக பொது வேலை நிறுத்தமே இல்லாத ஒரு நாடு உள்ளது. அது எது தெரியுமா? சுவிற்ஸர்லாந்து.

# 'இஸ்தான் புல்'

துருக்கியின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்று 'இஸ்தான் புல்'. மிகப் பழமையான நகரங்களில் இதுவும் ஒன்று. இந்த நகரத்திற்கு வேறொரு சிறப்பும் உண்டு. உலகிலேயே இரண்டு கண்டங்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் நகரம் 'இஸ்தான் புல்' மட்டுமே.



துருக்கியின் முந்தைய தலை நகரமான 'இஸ்தான் புல்'லின் ஒரு பகுதி ஐரோப்பாக் கண்டத்திலும், மற்றொரு பகுதி ஆசியாக் கண்டத்திலும் அமைந்துள்ளது. ஏழு குன்றுகளின் மேல் கட்டப்பட்டுள்ள 'இஸ்தான் புல்' முதலில் 'பைசாண்டியம்' எனவும் பின்னர் 'கொன்ஸ்டாண்டி நோப்பிள்' எனவும் அழைக்கப்பட்டது.

## புதிய தொடர் 8

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி 'சஸ்பென்ஸ்' கலந்து எழுதிய விறு விறு நாவல்.

# இனி என் முறை

எழுத்துச் சித்தர் பாலகுமாரன்



"அமுதா என்கிட்ட சொல்றதா வேணாமான்னு யோசிக்கிறியா?" அவன் அருகே உட்கார்ந்து குரல் தாழ்த்திக் கேட்டான்.

"சொன்னா புரியுமான்னு யோசிக்கிறேன்."

"ஏன்?"

"விசித்திரமா ஒன்னு நடந்து போச்சு."

"என்னன்னு சொல்லேன்."

"பையனை ஸ்விம்மிங் கூட்டிட்டுப் போனேன். பையன் தண்ணீல இறங்கி ஸ்விம் பண்ண ஆரம்பிச்சான். அங்க ஸ்விம் மாஸ்டர் இல்லை. ஏன்னு விசாரிச்சேன். உடம்பு சரியில்லை, ஹோட்டல் ரூம்லதான் படுத்திருக்காருன்னாங்க. சரி போய் பார்க்கலாமேன்னு உள்ள போனேன்."

"பேர் என்ன?"

"வாசுதேவன்."

"வயசு?"

"இருபத்தியாறு, இருபத்தி ஏழு இருக்கும்."

"ம்ம்."

"உள்ள படுத்துக்கிட்டு இருந்தான். ஃபுட் பாய்ஸன் போல இருக்கு. வாந்தி, பேதி, வயத்து வலி. விசாரிச்சுட்டு... ஒரு நிமிஷம்தான்.. விசாரிச்சுட்டு கிளம்பறப்ப இரண்டு பேர் உள்ள வந்தாங்க. என்னை புடிச்சு தள்ளிட்டு கதவை சாத்திட்டு துப்பாக்கிய காட்டி மிரட்டினான். என் மோதிரம் வளையல் தாலிக் கொடி எல்லாம் கழட்டச் சொன்னான். கழட்டினேன்."

"கொள்ளையா....?"

"முதல்ல நானும் அப்படித்தான் நினைச்சேன். புடவைல கை வச்சு உருவினான்."

"அமுதா...!"

"சுட்டுருவேன்னு சொல்லி அவுத்தான். ஜாக்கெட், பெட்டிக்கோட், ப்ரா

"சுட்டுருவேன்னு சைலன்ஸர் பிஸ்டல் காட்டினானே!"

"ரகஸ்யமா காலிங் பெல் அழுத்த முடியலையா?"

"அழுத்தி.....?"

"யாராவது வரமாட்டாங்களா?"

"ஹோட்டல் மொத்தமும் என்னைப் பார்க்கவா?"

"அடிச்சாங்களா?"

"இல்லை. தாலிக்கொடி அவுக்க மாட்டேன்னதுக்கு அறைஞ்சான்."

"அமுதா, திடீர்னு ஏன் அந்த ரூமுக்கு போனே..? பையன் எங்க இருந்தான்?"

"பையன் ஸ்விம்மிங் பூல்ல இருந்தான். நான் என்ன உடம்புன்னு விசாரிக்கப் போனேன்."

"யார் அந்த கோச். அவன் தொட்டானா?"

"இல்லை."

"பொய் சொல்லாத அமுதா."

"சத்தியமா இல்லை. அவருக்கு ரொம்பவும் முடியவலை."

எல்லாம் மிரட்டி மிரட்டியே அவுக்கச் சொன்னான்."

"எங்க இதெல்லாம்...?"

"ஹோட்டல் ரூம்ல."

"அந்த கோச் என்ன செய்துக்கிட்டிருந்தான்?"

"அவரால முடியலை."

"தடுக்க அட்டெம்ப்ட்டே பண்ணலையா?"

"செய்தாரு. கைல கெடைச்ச புஸ்தகத்தை துப்பாக்கி மேல வீசினாரு. அவன் காலடில தான் விழுந்தது. அவரையும் மிரட்டி அவரு லுங்கியையும் அவுத்துட்டாங்க. எங்க ரெண்டு பேரையும்- பக்கத்து பக்கத்துல படுக்க வச்சு ஃபோட்டோ எடுத்தாங்க. ரெண்டு பேர் கண்ல, வாய்ல ப்ளாஸ்டர் போட்டுட்டு காலையும் கட்டிட்டுப் போயிட்டாங்க."

"யார்... யார்... அமுதா?"

"தாடிக்காரங்க."

"அடையாளம் காட்டுவியா? விவரமா சொல், அவன் உருவம் பத்தி."

முடியும் என்றாள். விவரித்தாள்.

"பாஸ்டர்ட்ஸ். நீ கத்தவேயில்லையா?"

"எவருக்கு?"

"கோச்சுக்கு."

"என்ன முடியலை?"

"லூஸ் மோஷன். எட்டு தடவைக்கு மேல போயி அவரால எழுந்து நிக்கக்கூட முடியலை."

"பொய் துப்பாக்கியா இருந்திருக்கும் அமுதா. கத்தியிருக்கலாமே?"

"இல்லீங்க. ஒரு தடவை சுட்டான். வாசுதேவன் புஸ்தகம் எறிஞ்சதும், வாசு பக்கத்துல இருந்த தலகாணில பாஞ்சுது."

"வாசுதேவன் எங்க?"

"பயத்துல சுருண்டு படுத்துட்டாரு"

"மாதர் சோத்"- வேகமாய் டெலிபோனுக்குப் போனான். அமுதா தடுத்தாள்.

"ஒரு நிமிஷம்! என்ன செய்யப் போறீங்க?"

"எங்க ஆபீஸுக்கு போன் பண்ணி..."

"பண்ணி..."

"ஏன் அமுதா?"

"அவங்க வாசுதேவனுக்காக வரலை. எனக்காகவும் வரலை. உங்களை பழி தீர்த்துக்கறதுக்கு வந்திருக்காங்க."

"கந்தசாமி ஆளுங்களா? அவர் பேரைச் சொன்னாங்களா?"

"யார் பேரும் சொல்லலை."

"நான் நேரே ஹொட்டலுக்குப் போறேன். எங்க டிபார்ட்மெண்ட் மொத்த ஆளங்களைக் கூட்டிக்கிட்டு நாலுமணி நேரத்துல கண்டு பிடிக்கிறேன்."

"உங்க டிபார்ட்டுமெண்ட்ல என்ன சொல்வீங்க? பொண்டாட்டிய மடக்கி நிர்வாணமா ஃபோட்டோ எடுத்தாங்கன்னா?"

"சொன்னா என்ன...?"

"உங்களுக்கு சம்மதம்னா சொல்லுங்க."

"அவனுங்களை விட்டுரச் சொல்றியா?"

"இல்லை. ரெண்டு பேர் பட்டப்பகல்ல வந்து என்னை மடக்கி படம் எடுத்துட்டுப் போயிட்டாங்க. ஃபிலிம் அவன்கிட்ட இருக்கு. உங்க டிபார்ட்மெண்ட் மொத்தமும் கூட்டி அவனைத் தேடறதுக்குள்ள ஊர் முழுக்க என் ஃபோட்டோ சிரிக்கும். உங்க டிபார்ட்மெண்ட்டும் சிரிக்கும்."

'நிச்சயமா இத வச்சு என்னை மிரட்டறதுக்குதான். டிபார்ட்மெண்ட் இல்லாம என்ன பண்ணலாம்.. ம்...' செல்வா தனக்குள் பேசிக் கொண்டான்.

"நீங்க மட்டும் போறாதா? வேற யார்க்கும் தெரியாம அவங்களை மடக்க முடியாதா?"

"அந்த கோச்சுக்கு தெரிஞ்சு போச்சே. அவன் இத்தனை நேரம் யார் யார் கிட்ட சொல்லியிருப்பானோ?"

"யார் கிட்டவும் சொல்ல மாட்டான்."

"எப்படி சொல்ற?"

"சொல்ல மாட்டார்னுதான் தோணுது."

"ஏன், அவன் உன்னை லவ் பண்றானா?"

"பத்து நிமிஷம் முன்னாடியே இந்தக் கேள்விய எதிர்பார்த்தேன்."

"ஸாரி."

"பரவாயில்லை. ஏண்டி அவன் முன்னாடி புடவை அவிழ்த்தன்னு அடிக்காம வுட்டீங்களே!"

"நோ. நோ. நான் மிருகம் இல்லை. எனக்கு உன்னைப்பத்தி நல்லா தெரியும். அமுதா."

"எனக்குத் தெரியும்."

"நீ அவுத்தது கெட்டிக்காரத்தனம். முரண்டு பண்ணியிருந்தா சுட்டிருப்பான். பயங்கரமா காயப்படுத்தியிருப்பான். எப்படியும் சித்திரவதை பண்ணி அவுக்க வச்சிருப்பான். அந்த கோச் யாருன்னு தெரியணும்."

"அசடு. இன்னொஸன்ட். கோழை."

"நீ அவனை லவ் பண்றியா?"

"இல்லை."

"உடம்பு சரியில்லைன்னா விட வேண்டியது தானே? ஏன் ஹொட்டலுக்குள்ள தனியாபோனே?"

"அக்கறையா என் புள்ளைக்கு ஸ்விம்மிங் சொல்லித்தர ஆளுன்னுதான் போனேன்."

"நெருங்கிப் பழகியிருக்கியா?"

"ச்சே... ச்சே... பேசியிருக்கேன்."

"என்ன?"

"சும்மா. பேரு, ஊரு, தொழில்."

"ஏன் இதெல்லாம் கேட்டே?"

"பையன் ஸ்விம் பண்ணும்போது வேடிக்கைதான் பார்த்துக்கிட்டிருப்பேன். அவரும் கரையில் உட்கார்ந்திருக்கும் போது ஏதாவது பேசணுமேன்னு கேட்டது தான்!"

"பெரிய வம்புல மாட்டியிருக்க அமுதா, அடக்கமில்லாம போய் பேசி.... எனக்கு அந்த தேவடியா பையன் கோச் மேலேயே சந்தேகம்."

"இல்லீங்க. அந்த ஆள் நிஜமாவே பயந்தாங்கொள்ளி."

"நீ பயப்படலியா?"

"இன்னும் என்ன செய்யப் போறாங்களோன்னுதான் பயமா இருக்கு."

"அமுதா! நிச்சயமா உன்னை ரேப் பண்ணலையே? பயப்படாத சொல்லு."

அமுதா முகத்தை கைகளால் பொத்திக் கொண்டாள்.

"சொல்லு அமுதா! அந்த கோச் ஒண்ணும் பண்ணலியே? இருந்தா சொல்லு அமுதா?"

"இல்லீங்க. இத்தனை சொல்லும் போது அதுமட்டும் ஏன் மறைக்கப் போறேன்? அழாம பேசறேன்னுதானே கேட்கறீங்க? என் பையன் இந்தக் கண்றாவியெல்லாம் பார்க்கலியேன்னு நிம்மதியா இருக்கேன். வெறும அழுது புலம்பறதவிட உங்களுக்குப் புரியும் படியா- நிதானமா சொல்லி நீங்க மட்டும் தனியா அதை கண்டு பிடிக்கணும்னு நினைக்கிறேன். எனக்கும் அவமானமா இருக்கு. மலத்துல விழுந்த மாதிரி அருவருப்பா இருக்கு- வேதனையா இருக்கு. ஆத்திரம் இருக்கு. யார்கிட்ட போய் இத நான் சொல்ல முடியும்? உங்ககிட்டதான்... உங்ககிட்டதான்." உதடு கோணி அமுதா அவன் மீது சரிந்து அழுதாள்.

"லீவ் இட் டு மீ. வீட்ல இரு. அமைதியா இரு. நான் இருக்கேன். என் குரல் கேட்காம கதவு திறக்காத. அது எனக்கு வந்த அம்பு. உன்னை அடிச்சு சாச்சுடுச்சு. பார்த்துடுவோம். ஐ.பி.எஸ். பாஸ் பண்ணி பதினேழு வருஷம் ஆச்சு அமுதா. லெட் மீ மீட் த சேலஞ்ஜ்."

"எம் மேல வெறுப்பு வராதே?"

"மனசு கெட்டுப் போயிருந்தா வெறுப்பு வந்திருக்கும். என்கிட்ட என்ன குறைன்னு குமைச்சல் வந்திருக்கும். இது உடம்பு. போய் குளி. சாப்பிடு. தூங்கு."

வெளியே இறங்கினான். கார் திருப்பினான். அமுதா பையனை உள்ளே கூப்பிட்டாள். கதவு மூடினாள்.

வீட்டு வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் நின்றது. மூடின கதவு பார்த்து ஒரு அடிக்கு ஒரு அடி அளவுள்ள பிளாஸ்டிக் கவர் எறிந்தது.

□□□

**செ**ல்வா ஓட்டல் ரிஸப்ஷனுக்குப் போனான். பைக்குள் கைவிட்டு அட்டையைப் பிரித்து காட்டினான். பயந்தார்கள்.

"ஒரு ஆளைத் தேடுகிறேன். அமைதியாக இருங்கள். பேச வேண்டாம்!" எச்சரித்துவிட்டு நீச்சல் குளம் போனான். நின்று ஓட்டலைப் பார்த்தான். எல்லா அறையின் திரைச்சீலைகளும் மூடப்பட்டிருந்தன. மேற்குப் பக்க வெளிச்சம் கருதி இழுக்கப்பட்டிருந்தனபோலும். மூன்றாவது மாடி. நான்காவது ரூம். நான்காவது மாடி எட்டாவது ரூம். மாடி கடைசி ரூம். திரைச்சீலைகள் திறந்திருந்தன.

'ஆக, இம் மூன்றிலிருந்துதான் கவனிக்கப்பட்டிருக்க வேண்டும்.' விசாரித்தான். "முதல்மாடி அக்கௌண்டென்ட் ரூம். அதற்கு திரைச்சீலை கிடையாது."

"யார் வருவார்கள்?"

"குமாஸ்தாக்கள் தவிர யாரும் வரமாட்டார்கள்."

"மூன்றாவது மாடி யார்?"

"யாருமில்லை."

"எப்போது கடைசியாய் தங்கினார்கள்?"

"பெங்களூர் கடிகாரக் கம்பனி. பெயர் ஸ்ரீ கௌடப்பா, பசவப்பா. நான் காவது மாடி புதுமண ஜோடி.. ஹனிமூன் கப்பிள்."

"எங்கே?"

"வெளியே போயிருக்கிறார்கள்."

"கதவு திற." திறக்கப்பட்டது. இது நல்ல உயரம். ஆள் உச்சந்தலை தெரியும். அடையாளம் சட்டென்று தெரியாது. மேலும் ஜன்னல் அருகே நகர்த்தப்பட்டிருந்தது. கார்பெட்டில் தடங்கள் இல்லை. துணிகள் இறைந்து கிடந்தன. மூன்றாவது மாடி நான்காவது ரூம்.

"திற."

"அங்கே யாருமில்லை."

"திற" திறக்கப்பட்டது. சுத்தமாக இருந்தது.

"எப்போது சுத்தம் செய்தீர்கள்?" அரைமணி முன்பு.

"எங்கே அந்தக் குப்பை?"

"ஓட்டல் குப்பைத் தொட்டியில்."

"குப்பைத் தொட்டி எங்கே?"

செல்வா மண்டி போட்டு முகத்தில் கர்ச்சீப் சுற்றி குப்பைத் தொட்டியை மெல்லக் கிளறினான். ஒரு காக்கி கவர்- பிரித்தான். ஒரு காகிதம் கசக்கப்பட்டிருந்தது. நோட்டுப் புத்தகக் காகிதம். சுருட்டப்பட்டுக் கிடந்தது. மெல்லப் பிரித்தான்.

(தொடர்ந்து வரும்)

அனுபவம் புதுமை

# ஆண்டவன் கட்டளையும்-அரச கட்டளையும்

கவிஞர் வாலி

'பராசக்தி' காலத்திலிருந்தே சிவாஜியின் நடிப்பில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த நான், எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றக் கூட்டங்களில், சிவாஜியை விமர்சித்துப் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானதுண்டு.

இது குறித்து சிவாஜிக்கு மனத்தளவில் என்பால் ஒரு கசப்புணர்வு மெல்லியதாய் பரவியிருந்த பொழுதும், அவர் படங்களுக்கு நான் பாடல் எழுதக்கூடாது என்றெல்லாம் தடை விதிக்கக்கூடிய குறுகிய கண்ணோட்டம் அவரிடம் இருந்ததில்லை.

தனிப்பட்ட முறையில் சிவாஜியும், எம்.ஜி.ஆரும் ஆரத்தழுவி அன்பு பாராட்டும் நண்பர்களாக இருந்தபோதும், தொழில் ரீதியாக அவர்களுக்கிடையே ஒரு போட்டி மனப்பான்மை இருந்தது முக்காலும் உண்மை.

சிவாஜி நடிக்கும் 'அன்புக்கரங்கள்' படத்திற்கு நான் பாடல்கள் எழுதுவதாக, என் பெயரைத் தாங்கிய முழுப்பக்க விளம்பரம் நாளேடுகளில் வெளியான அன்று-

'தாழம்பூ' படப்பிடிப்பில், நான் எம்.ஜி. ஆரைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது.

என்னைப் பார்த்தவுடன் "உங்க அன்புக் கரங்கள் எப்ப ரிலீஸ்?" என்று எம்.ஜி.ஆர். புன்னகைத்தவாறு என்னிடம் கேட்டார்.

"உங்க அன்புக்கரங்களில் இருந்து, என்றைக்குமே எனக்கு ரிலீஸ் கிடையாது" என்று நான் சொன்னதும் எம்.ஜி.ஆர். நெகிழ்ந்து போனார்.

'பிள்ளையோ பிள்ளை' படத்தின் இயக்குநர்கள் திரு.கிருஷ்ணன்- பஞ்சு. திரு.பஞ்சு மூலம், கலைஞர் தன் மகன் முத்துவை வாழ்த்தி நான் பாட்டெழுத வேண்டுமென்று சொல்லி யனுப்பியிருந்தார்.

அதன் காரணமாகப் படத்தின் கதாநாயகி, கதாநாயகனைப் பார்த்து-

**'மூன்று தமிழ் தோன்றியதும்**
**உன்னிடமோ!-நீ**
**மூவேந்தர் வழிவந்த மன்னவனோ!'**

என்று பாடுவதாக நான் பாடலைப் புனைந்தேன்.

திரு.எம்.எஸ்.வி.யும், சாருகேசி ராகத்தில் அந்தப் பாடலுக்கு அற்புதமாக இசையமைத்திருந்தார்.

இதைப் படத்தில் பார்த்துவிட்டு எம்.ஜி.ஆர். என்னிடம் "மூன்று தமிழ் தோன்றியது மு.க. முத்து கிட்டதானா?" என்று என்னைக் கேட்டார்.

எம்.ஜி.ஆரிடம் நான் சொன்னேன்:

"அண்ணே! மு.க.முத்து வளர வேண்டிய இளங்கலைஞன். ஆகவே நான் வாழ்த்தி எழுதும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன். என்னுடைய தமிழ் எல்லாரையும் வாழ்த்துவதாக இருக்க வேணும்னு நீங்களே பல வாட்டி சொல்லியிருக்கீங்க... அதனாலதான் அப்படி எழுதினேன்" என்று நான் சொன்ன விளக்கத்தை எம்.ஜி.ஆர்.நியாயமென்று ஏற்றுக் கொண்டாலும், அவர் மனம் முழுமையாக அதை ஒப்பவில்லை என்பதை அவர் முகம் காட்டிற்று.

மேற்கண்ட பாடல் தன்னுடைய படத்தில் எழுதப்பட்டிருந்தால், அது இன்னும் அதிக அளவு பிரபல்யம் அடைந்திருக்கக்கூடும் என்பதை, எனக்கு அவர் சொல்லாமலேயே சொன்னார் என்று நான் புரிந்து கொண்டேன்.

எம்.ஜி.ஆரின் சகோதரர் திரு.எம்.ஜி. சக்ரபாணி அவர்கள் 'அரச கட்டளை' என்ற தலைப்பில் ஒரு படத்தைத் தயாரித்தார்.

அந்தப் படத்தில் கதாநாயகன், ஆட்சியாளர்களின் ஆணவப் போக்கை எதிர்த்து, ஊர்மக்களைத் தன் பாடலாலேயே, ஒன்று திரட்டி- அவர்கள் நாடி நரம்பில் சூடேற்றி தெருச்சந்தியில் நின்று கொண்டு விடுதலை முழக்கம் செய்வதாக ஒரு காட்சி.

கதாநாயகனாக நடித்த எம்.ஜி.ஆர்., படத்தில் ஒரு தமிழ்க் கவிஞன்.

அவலங்கள் நிறைந்த மக்களிடையே, அரச கட்டளையைக் காட்டிலும் உயர்ந்தது இறைவன் கட்டளை என்று கூறி- அரசாட்சியில் இருக்கும் ஆணவக்காரர்களின் கட்டளைகளை, மக்கள் துணிந்து மீற வேண்டும் என்று ஆவேசமும் ஆக்ரோஷமும் கொண்டு உரத்த குரலில் பாடுகிறான் அந்தக் கவிஞன்.

இதற்கான பாடலை எழுதும்படி எம்.ஜி. ஆர்.என்னிடம் சொன்னதும், மறுநாள் சத்யா ஸ்டுடியோவில் அவரை சந்தித்து- அந்தக் காட்சிக்கான பாடலை திரு.எம்.ஜி.ஆரிடம் பாடிக் காண்பித்தேன்.

பல்லவியை நான் பாடி முடித்தவுடனேயே, எம்.ஜி.ஆர். முகம் சிவந்து போயிற்று.

அதைக் கவனித்த நான், பல்லவியோடு என் பாடலை நிறுத்திக் கொண்டேன்.

எம்.ஜி.ஆர். கோபமாக என்னைப் பார்த்து சொன்னார்:

"என்னை அவமானப்படுத்த வேண்டுமென்று உங்களுக்கு ஆசையாக இருந்திருந்தால், அதை நேரிடையாகவே செய்யலாமே.. இப்படி ஒரு பாட்டை எழுதி என்னிடமே பாடிக் காண்பித்து, என் கௌரவத்தைக் குலைத்திருக்க வேண்டாமே!"

இப்படி எம்.ஜி.ஆர். சொன்னதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"உங்களை அவமானப்படுத்தும்படியாக இந்தப் பாடலில் எதையுமே நான் எழுதவில்லையே... நீங்க என்னண்ணே சொல்றீங்க?" என்று நான் தாழ்மையாக அவரிடம்



எடுத்துச் சொன்னேன்.

"நீங்கள் எழுதியிருக்கிற பல்லவியைப் படித்துப் பாருங்கள். என் கோபத்திற்குக் காரணம் உங்களுக்கே புரியும்...." என்றார் எம்.ஜி.ஆர். அப்போதும் அவர் முகம் சினத்தில் சிவந்தேயிருந்தது.

அவர் கோபப்படும்படியாக, அந்தப் பல்லவி அமைந்திருந்ததை நான் உணர்ந்து கொண்டதும் அது, வேண்டுமென்றே செய்த காரியமல்ல-இயல்பாக எழுதப்பட்டதுதான் என்பதை அவருக்குப் புரிய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

ஆண்டவன் ஆணைக்கு முன்னே அரசனின் ஆணை எம்மாத்திரம்?' என்ற பொருளில், தான் பாடும் பாடல் அமைந்திருந்தால் நலம் என்று எம்.ஜி.ஆர். என்னிடம் சொல்லியிருந்தார். அந்தப் பொருளில்தான் நானும் பாடலை எழுதி அவரிடம் காண்பித்தேன். ஆயினும், அது அவர்க்கு என்பால் சினத்தை ஏன் ஏற்படுத்தியது என்பதை நான் சற்று தாமதமாகத் தான் புரிந்து கொண்டேன்.

பாட்டின் பல்லவி இதுதான்:

**'ஆண்டவன் கட்டளை**
**முன்னலே-உன்**
**அரச கட்டளை என்னாகும்?'**

அரச கட்டளை- எம்.ஜி.ஆர். நடிக்கும் படம்; ஆண்டவன் கட்டளை-சிவாஜி நடித்த படம்.

மேற்கண்ட விஷயம் எம்.ஜி.ஆர். கவனத்திற்கு வந்தவுடன், சிவாஜி படத்தோடு அவர் படத்தை ஒப்பிட்டு, அந்தப் பல்லவியை எழுதி, நான் அவரை அவமானப்படுத்திவிட்டதாக என்மேல் குற்றம் சாட்டிவிட்டார்.

"அண்ணே! இப்படி ஒரு அர்த்தம் இந்தப் பல்லவில தொனிக்கும்னு நான் கனவுல கூட எண்ணல்லே... என்னுடைய நாவும், பேனாவும் எந்தக் காலத்துலயும் உங்க கௌரவத்தத் தாழ்த்திப் பேசாது; எழுதாது. படத்தின் பெயர் 'அரச கட்டளை'ன்னு எழுதினேன். தெய்வத்தின் கட்டளைன்னு போட்டா. பாட்டுக்கு அழகிருக்காதுன்னுதான் அப்படிப் போட்டேன். சத்தியமா, 'ஆண்டவன் கட்டளை' சிவாஜி நடிச்ச படம்னு என் நெனப்புக்குவல்லே."

இப்படி ஒரு நீண்ட சமாதானத்திற்குப் பிறகு எம்.ஜி.ஆர். அமைதியானார். ○

# மேக்கப் புன்னகை



15

"என்ன சொன்னே? கம் எகெய்ன்!" என்றான் சந்திரசேகர்.

"ஒரு தாலி வாங்கிட்டு வாங்கன்னு சொன்னேன் சந்துரு," என்றாள் மதுமிதா! எதிர்முனையில்.

"புரியலைம்மா-எதுக்கு?"

"தாலி எதுக்கு? என் கழுத்துல நீங்க கட்றதுக்குத்தான்?"

"என்ன உளறல் இது?"

"நீங்க வாங்கிட்டு வந்துடுங்க. நேர்ல விபரம் சொல்றேன்!"

"நான் முதல்ல நேர்ல வர்றேன். லெட் அஸ் டிஸ்கஸ். ரொம்ப குழம்பிப் போயிருக்கேன்னு புரியுது. டென்ஷன் இல்லாம இரு மது. மீட் பண்ணலாம். பேசலாம்."

ஃபோனை பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். நெற்றியைத் தடவியபடி சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இன்டர்காமில், "சாரி சார், கொஞ்சம் வாங்க!" என்றான்.

நெற்றியில் திரிசூரணமிட்ட, பாக்கெட்டில் மூன்று பேனாக்கள் செருகின, ஷெல் பிரேமில் கண்ணாடி அணிந்த தேசிகாச்சாரி உள்ளே வந்தார்.

"உட்காருங்க... சாரி சார்"

"என்ன தம்பி?" என்று அமர்ந்தார்.

"ட்ரையல் பேலன்ஸ் எடுத்துட்டீங்களா?"

> 'நம் தென்னிந்திய நடிகைகளில் கடிதம் போட்டால் பதில் எழுதுபவர்கள் யார், யார்?'
>
> 'நூற்றில் எழுபத்தைந்து பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இருபத்தைந்தில், பத்து பேருக்கு மற்றவர்கள் எழுதிக் கொடுக்கும் தங்கள் பெயர் கையெழுத்தைப் பார்த்து, கோலம் போடத் தெரியும். மீதி ஐந்து பேருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும். ஆனால் அவர்கள் பிஸியாக இருப்பார்கள்.'
>
> –ஒரு கேள்வியும் பதிலும், 'கலை' இதழில்... (ஜூன், 1949)–



"இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு தம்பி. ஏழு வவுச்சர்ஸ் டேலி ஆக மாட்டேங்குது."

"தொகை எவ்வளவு?"

"நாலே முக்கால் லட்சம்!"

"விளையாடறீங்களா?"

"நிஜமாத்தான் தம்பி சொல்றேன்."

"கம்ப்யூட்டரைத் தூக்கி காயலான் கடைக்குப் போட்டுடலாமா?"

"அது என்ன தப்பு பண்ணிச்சு? நாம எதை உள்ளே போடுறோமோ அதை வெச்சுக்கிட்டுத்தானே அது கணக்கு சொல்லும். இன் ஃபாக்ட் டேலி ஆகலைன்னு நமக்குத் தகவல் சொன்னதே கம்பியூட்டர்தானே!"

"டேலி ஆகாததுக்கு என்ன காரணம்?"

"ஒவ்வொரு ரிசிப்டா, ஒவ்வொரு வவுச்சரா செக் பண்ணிட்டு இருக்கேன் தம்பி. கவனக் குறைவா சில எண்ட்ரீஸ் விட்டுப் போயிருக்கலாம்."

"சரி, ரௌஸாரியோ நேத்து ஃபோன்ல என்ன சொன்னார்?"

"அதான் குறிப்பு எழுதி வைச்சிருந்தேனே!"

"கதைச் சுருக்கம் மாதிரி ரெண்டு வரிதானே எழுதி வெச்சிருந்தீங்க? விபரமாச் சொல்லுங்க... சாரி சார்"

"ஸ்வீடன்ல பிசினஸ் ரொம்ப டல்லாம். ஏகப்பட்ட நஷ்டமாம். இந்த அக்கவுண்டிங் இன்றோட அங்கே பிராஞ்சை குளோஸ் பண்றாராம்."

"பண்ணிட்டு...."

"மெக்ஸிகோவில பிளான் பண்றாராம். இன்னைக்கு ராத்திரி உங்களை ஃபோன் பேசச் சொன்னாரு."

"இந்தியா வர்ற மாதிரி ஏதாச்சும் பிளான் இருக்காமா? நீங்க கேட்டீங்களா?"

"வரணும்னு சொன்னார். தேதி எதுவும் சொல்லலை. அப்படி எதுவும் பிளான் பண்ணியிருந்தாக்கூட என்கிட்டயா சொல்லுவாரு?"

சந்திரசேகர் மௌனமானான். அவன் அனுமதித்த பிறகுதான் ஸீட்டுக்குப் போக

## பட்டுக்கோட்டை பிரபாகர்

வேண்டி சாரி காத்திருந்தார்.

அவரை உற்றுப் பார்த்தான் சந்திரசேகர்.

"என்ன தம்பி அப்படி பார்க்கறீங்க?"

"சாரி சார்! நீங்க இங்கே எத்தனை வருஷமா இருக்கீங்க?"

"இருபத்து நாலு வருஷமா!"

"என்னை எத்தனை வருஷமாத் தெரியும்?"

"பத்து பன்னிரெண்டு வருஷமா!"

"கொஞ்சம் பர்சனலா உங்ககிட்டே பேசலாமா?"

"தாராளமா."

"நான் கல்யாணம் பண்ணிக்கட்டுமா?"

"இதை நாலு வருஷமா சொல்லிக்கிட்டிருக்கேன். உங்கப்பா இருந்திருந்தா அதட்டி, மிரட்டி மனையில உட்கார வைச்சிருப்பார். நான் சொல்லத்தானே முடியும்?"

"சினிமா உலகம் பத்தி உங்க கருத்து என்ன?"

"முக்கால்வாசிப் பேரு ஃபிராடு! ஏதோ சில பேர்தான் அங்க நல்லவங்களா இருக்காங்க. இது என் அபிப்பிராயம்."

"எல்லாத் துறையிலயுமே இப்ப அப்படித்தானே இருக்காங்க?"

"அங்க கொஞ்சம் அதிகம். எக்கச்சக்கமா பணம் புழங்கற இடத்திலதான் எக்கச்சக்கமா பிரச்சனைகளும் புழங்கும்!"

"நீங்க சினிமா பார்க்கறதுண்டா... சாரி சார்"

"ஓ! மாசத்துக்கு ஒரு படம்தான் போவேன். போறதுக்கு முன்னாடி பத்திரிகை விமர்சனங்களைப் படிச்சிட்டு, மத்தவங்களை விசாரிச்சுட்டு நல்ல படமா செலக்ட் செஞ்சி பார்ப்பேன்."

"அப்போ உங்களுக்கு நடிகை மதுமிதாவைத் தெரியும் இல்லையா?"

"மதுமிதாவைத் தெரியாதவங்க இருக்காங்களா தம்பி? படம் பார்க்காதவனுக்கும் தெரியுமே! பேப்பர், போஸ்டர், டி.வி.ன்னு எங்கயும் அவதானே கண்ல படறா?"

"மதுமிதா பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"நல்ல நடிகை! பொதுவா கவர்ச்சியான உடலமைப்பு இருக்கிற நடிகைகளுக்கு நடிப்பு சுமாராத்தான் வரும். பிரமாதமா நடிக்கிற பொண்ணுங்களுக்கு நல்ல உடற்கட்டு அமையாது. இது ஒரு சாபக்கேடு. ஆனா, மதுமிதா இதுல விதி விலக்கு. கவர்ச்சியாவும் இருக்கா. நல்லாவும் நடிக்கிறா."

சந்திரசேகர் சிகரெட் எடுத்து அவருக்கும் ஒன்றை நீட்ட, மறுக்காமல் பெற்றுக் கொண்ட சாரி, "அப்புறமா பிடிச்சுக்கறேன்," என்று சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

"மதுமிதாவை தனிப்பட்ட முறையில் தெரியுமா?. அதாவது நேர்ல சந்திச்சிருக்கீங்களா? பேசிப் பழகியிருக்கீங்களா?"

"என் வயசுக்கு இப்படி ஒரு கேள்வியை நீங்க கேக்கிறது நல்லா இருக்கா தம்பி?"

"சேச்சே! நான் தப்பா கேக்கலை. ஏதாச்சும் ஒரு வகையில அறிமுகம் உண்டான்னு கேட்டேன்."

"இல்லை தம்பி."

"எனக்கு உண்டு சாரி சார். ஒரு நட்சத்திர ஹோட்டல் டிஸ்கோ ஹால்ல லேசா ஆரம்பிச்ச அறிமுகம்; ஒரு வருஷமா நாங்க நெருக்கமா பழகிட்டிருக்கோம்."

"அப்படியா?"

"அவமனசு பூராவும் எக்கச்சக்கமான சோகம் இருக்குன்னு நான் சொன்னா நீங்க நம்புவீங்களா சார்?"

"ம்கூம்... நான் நம்ப மாட்டேன்."

"ஏன் நடிகைக்கு சோகம் இருக்காதா?"

"இருக்கும். அது மிகைப்படுத்தப்பட்ட சோகமாத்தான் இருக்கும். இடுப்பில சதை வந்துடுச்சி. எந்த நேரம் இன்கம் டாக்ஸ்காரன் வந்து எல்லாத்தையும் அள்ளிக்கிட்டுப் போவானோன்னு ஒரு கவலை இருக்கலாம். ஏர்க் கண்டிஷனர் ரிப்பேராயிடுச்சே, நீச்சல் குளத்தோடு உள்ள ஒரு பங்களா வாங்கணுமே... இப்படி எல்லாமே லக்ஷுரி கவலையாத்தான் இருக்கும்."

"அப்படியா?"

"உலகத்துல மனுஷனுக்கு வர்ற பிரச்சனைகள்ல தொண்ணூறு சத விகிதப் பிரச்சனைகளை பணத்தால சரி பண்ணிடலாம் தம்பி. மிச்ச அஞ்சி சத விகித பிரச்சனைகள் பணத்தால வர்ற பிரச்சனைகளாத்தான் இருக்கும்."

"அப்படியில்லை சாரி சார். இதையெல்லாம் விட மனப் பிரச்சனைன்னு ஒண்ணு இருக்கே; அது பணம் இருக்கிறவனுக்கும் வரும். இல்லாதவனுக்கும் வரும்."

"சரி... இருந்துட்டுப் போகுது விடுங்க... எதுக்கு என்னை உக்கார வெச்சி ஒரு நடிகையைப் பத்தி பேசிட்டிருக்கீங்க? முதல்ல அதைச் சொல்லுங்க!"

சந்திரசேகர் சற்றே யோசித்து விட்டு.... "சாரி சார், நான் மதுமிதாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்!" என்றான் நிதானமாக.

தேசிகாச்சாரியின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது அதிர்ச்சி.

"தம்பி முடிவே பண்ணிட்டீங்களா?"

"ஆமாம் ஏதாச்சும் சொல்லணுமா?"

"முடிவு செஞ்சதுக்கப்புறம் சொல்றதுக்கு என்ன இருக்கு?"

"இன்னும் செயல்படுத்திடலையே... தீர்மானம்தானே! என்ன நினைக்கிறீர்களோ சொல்லுங்க!"

"எனக்கு உங்க மேல அக்கறை உண்டுன்னு நம்புறீங்களா தம்பி?"

"நம்புறதாலதான் உங்ககிட்டே இந்த பர்சனல் மேட்டரை டிஸ்கஸ் பண்ணிட்டு இருக்கேன்."

"நீங்க எனக்கு புள்ளை மாதிரி! வேணாம் தம்பி. இந்த யோசனையை விட்டுடுங்க. ஏதோ ஒரு கவர்ச்சில அவ மேல ஆசை வெச்சிட்டீங்க போலிருக்கு! சிலது தூரத்தில இருந்தாத்தான் அழகு. பக்கத்தில வந்தா அசிங்கம்! ஜாலியா பழகின வரைக்கும் சரி. விட்டுடுங்க! அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா உங்க எதிர்காலம் பாழாப்போயிடும். கொஞ்சநாள் சந்தோஷமா இருப்பீங்க. அப்புறம் உங்க நிம்மதியே போயிடும்."

சந்திரசேகரின் முகம் சிறுத்துப் போனது.

(தொடரும்)

## யார் இவர்கள்?



இங்கே சிறுமிகளாக அழகியதோற்றம் தருபவர்கள் பின்னாளில் பிரபல நடிகைகளாகப் பிரகாசித்தவர்கள். முதலாவதாக இருப்பவர் ஜி. சகுந்தலா. இரண்டாவதாக இருப்பவரை நீங்கள் கண்டுபிடியுங்கள். நாட்டியத்தில் வல்லவர் இவர். விடை உதவி– 18ம் பக்கம்.

# ரதியும் முனிவனும்

## கவியரசு கண்ணதாசன்

மன்மதனுக்கும், ரதிக்கும் கடுமையான வாக்கு வாதம் நடந்தது.

ஆரண்யத்தில் கடுந்தவம் புரிந்து கொண்டிருந்த ஒரு முனிவனைக் காமுகனாக மாற்ற முடியுமா, என்பதே இருவருக்கும் நடந்த விவாதம்.

"முடியும்!" என்றாள் ரதி.

"முடியாது!" என்றான் மன்மதன்.

"புலன்– உணர்ச்சிகளைக் கல்லாக்கிய பிறகே ஒருவன் முனிவனாகிறான். அதிலே ஈரம் உள்ளவரைதான் அதில் காமக்குழம்பு கொதிக்கிறது. துறப்பு என்பது உடல், உள்ளம் அனைத்தையும் துறப்பதே. அப்படிப்பட்டவன் அந்த முனிவன். அவனைக் காமுகனாக்க உன்னால் முடியுமானால் சிவஞான தத்துவம் செத்துவிட்டதாக அர்த்தம்!" என்றான் மன்மதன்.

"பஞ்சபாணா! இவ்வளவு பழகியும் என்னை நீ அறியவில்லை. எனது அங்கங்களின் ரஸவாதத்தில் அகிலமே சுருண்டு கிடக்கிறது. காமதேவியின் மைய மண்டபத்தில்தான் விசுவாமித்திரன் மதியிழந்தான்; ராஜ்யங்கள் மூழ்கின. சரித்திரத்தின் பெரும்பகுதியே இதுதான்; இதிலே மயங்காத ஒருவன் இன்னும் பிறக்கவில்லை!" என்றாள் ரதி.

"முடியுமானால் அந்த முனிவனை முயன்று பார்!" என்று அவளுக்கு அனுமதி தந்தான் மாரன்.

ரதி தன்னை அலங்கரித்துக்கொண்டாள். மார்பகங்கள் விம்மி நிற்குமாறு கச்சையைக் கட்டிக் கொண்டாள். ஆடும் போது கால்கள் முழுமையும் தெரியும்படி ஆடை அணிந்து கொண்டாள். ஞான முனிவன் தவம் செய்யும் இடத்தை நோக்கி விரைந்தாள்.

"நமோ நாராயணா! நமோ நாராயணா!"

காட்டு மிருகங்களையே துரத்தி அடிக்கும் அளவுக்கு இந்தக் கோஷம் முனிவனின் வாயிலிருந்து வந்துகொண்டிருந்தது.

ரதி, கால் சலங்கைகளால் ஒலி எழுப்பினாள்.

முனிவன் கண் திறக்கவில்லை.

கைவளையோசை பிறந்தது.

முனிவன் அப்படியே இருந்தான்.

இசையும், ஸ்வரங்களும், சுதியும் தோற்று விடும்படி அவள் சிரித்தாள்.

முனிவன் கண் திறக்கவில்லை.

ரதி பாடிக்கொண்டே ஆடத் தொடங்கினாள்.

"என் அன்பே! சிறியதொரு கோபுரத்தின் சிங்காரக் கலசங்களைப் பார். இந்தக் கோயிலின் வாசலில் பரமனே பல தடவை மயங்கி விழுந்திருக்கிறான். இதனை நீ ஒரு முறை பார்த்துவிட்டால் மூச்சுத் திணறும்; பேச்சுத் தடுமாறும்; மறு உலகம் பற்றிய சிந்தனை மரத்துப் போகும்; சிருங்கார லயமே சுகம், சுகம் என்று ஓசையிடும்; காலங்கள் மறந்து போகும். கவலைகள் பறந்து போகும், வலிமைகளைச் சேகரித்து வைத்திருக்கும் உனது உடலை, இளமையைச் சேகரித்து வைத்திருக்கும் என்னிடம் கொடுத்துப்பார்; பிறகு தவம் உனக்கு கசந்து போகும்!"



ஆனால், முனிவரிடமிருந்து 'நமோ நாராயணா!' என்ற குரலன்றி வேறொன்றும் இல்லை. எனினும் உரத்து நின்ற அந்தக் குரல் தாழ்ந்து கொண்டே வந்தது.

"நமோ நாராயணா! நமோ நாராயணா!"– ஏழு ஆண்டுகளுக்கு முன்னே மூடிய முனிவனின் கண்கள், மெதுவாகத் திறந்தன. அவ்வை கோவைப் பழம்போல் சிவந்திருந்தன.

ரதியின் மேனியை அவன் உற்றுப் பார்த்தான். பார்த்தான், பார்தான்... பார்த்துக் கொண்டேயிருந்தான்.

"நமோ நாராயணா" என்ற குரல் கீழ் ஸ்தாயிக்கு வந்துவிட்டது.

ரதி அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

அவன் கன்னங்களை வருடினாள். ஆள் காட்டி விரலினால் உதடுகளைத் தடவினாள். மார்பினில் சாய்ந்தாள். அவனை மார்போடு அணைத்தாள்.

"நமோ நாராயணா!"

முனிவன் குரல் மெதுவாக மேலெழுந்தது. ஏதோ ஒரு வகை உணர்ச்சி அவனை உந்தித் தள்ளியது.

"நமோ நாராயணா!"

கூடைக்குள்ளிருந்து தலை தூக்கும் பாம்பு போல் அவன் மார்பிலிருந்து மெதுவாக விலகினாள் ரதி.

இப்போது அவள் அவனையே உற்றுப் பார்த்தாள்.

அவள் கண்கள் சிவந்தன. அவை மெதுவாக மூடின.

"நமோ நாராயணா!"– இப்போது அவள் அதை உச்சரிக்கத் தொடங்கினாள்.

சுதியும், லயமும் கூடிக்கொண்டே போயின.

முனிவன்னக் காமத்துக்கு அழைக்க வந்த ரதி, தான் ஞானத்துக்குள் நுழைந்துவிட்டாள்.

முனிவன் சிரித்தான்.

மன்மதன் அலறினான்.

"தவத்தைக் கலைக்கப்போன என் அருமை ரதியே, நீயுமா தவம் செய்யத் தொடங்கிவிட்டாய்?"

திடீரென்று ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது; இறைவன் பிரத்தியட்சமானான். அவன் சொன்னான்:

"பலவீனமான ஆத்மாக்கள் மற்றவர்களாலே மாற்றப்படுகின்றன. ஆன்ம பலம் உள்ளவர்கள் மற்றவர்களை மாற்றிவிடுகிறார்கள்."

# அவசரகாலம்

**அந்தச் சமயம் பார்த்து போலி அடையாள அட்டை விழுந்துவிட்டது.**

**கை**திகளைச் சுமந்து வந்த பொலிஸ் வண்டி மாவட்ட நீதிமன்றின் முன் வந்து நின்றது. அங்கு கூடி நின்ற கைதிகளின் உறவினர்கள் எல்லோரும் அவ்வண்டியைச் சூழ்ந்துகொண்டனர். கைகளில் விலங்கு மாட்டப்பட்டு ஒருவருடன் ஒருவர் பிணைக்கப்பட்ட கைதிகள் கீழே இறக்கப்பட்டனர்.

கைதிகளில் ஒருத்தனாக கையில் விலங்குடன் இறங்கிய நரேந்திரனின் கண்கள் அவனது தாய், தந்தையைத் தேடி நீண்ட நேரம் அலையவில்லை. கலங்கிய கண்களுடன் நின்றிருந்த அம்மாவையும், அப்பாவையும் கண்டுவிட்டான்.

நரேந்திரனின் கண்களும் கண்ணீரைச் சிந்தத் தொடங்கிவிட்டிருந்தன.



அம்மா, அப்பாவைக் கட்டியணைத்து அழவேண்டும் போல நரேந்திரனுக்கு இருந்தது. அதற்குத் தடையாக பொலிசார் கைதிகளுக்கும் உறவினர்களுக்குமிடையில் இருந்தனர். உறவினர் அருகில் இருந்தும் கதைக்கமுடியாது விழுந்த தடையால், பார்வைகளால் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

நீதிமன்றில் பார்வையாளர் பக்கத்தில் கைதிகள் இருத்தப்பட்டனர். சிறையில் சீரான உணவு, உறக்கம் இன்மையால் வாடிப் போயிருந்த மகனைப் பார்க்க முடியாத நரேனின் அம்மாவால் அழுகையை அடக்க முடியவில்லை.

மகனைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாதவள் நீதிமன்றின் வெளியே வந்து சத்தமாக அழத் தொடங்கிவிட்டாள்.

"ஏன் மங்களம் அழுகிறாய்? நீ பயப்படுகிறமாதிரி ஒன்றுமே நடவாது. கண்ணைத் துடை; எல்லாரும் உன்னைத்தான் பார்க்கினம். வீணான கற்பனையை செய்து அழாமல் இரு மங்களம்!" என கணவன் முருகேசு மனைவியைத் தேற்றினார்.

"நீங்க ஒண்டும் சொல்ல வேண்டாம். என்ரை பிள்ளை இண்டைக்குச் சிறைக்குப் போக நீங்கதானே காரணம்! பிள்ளையைப் பார்க்கவே என்னாலை முடியாம இருக்குது. எப்பிடி இருந்தவன் இண்டைக்கு வாடிச் சோர்ந்துபோய் இருக்கிறான்," என்றவளின் கண்களிலிருந்து நீர் தடையின்றி ஓடிக்கொண்டிருந்தது.

"யாருக்குத் தெரியும் மங்களம் இப்படியெல்லாம் நடக்கப்போகுதென்று?' இது பெரிய குற்றமில்லையெண்டு புறொக்டர் உனக்கு முன்னாலை தானே சொன்னவர் அதுக்குப் பிறகும் ஏன் அழுகிறாய்?'

உள்ளை வா! நரேன்ரை வழக்கை எப்ப கூப்பிடுவாங்களோ தெரியாது. உள்ளேபோய் இருப்பம்! முதல்லை அழுகையை நிறுத்து!" என்ற கணவன் உள்ளே வர, சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு மங்களமும் உள்ளே வந்து அமர்ந்தாள்.

வழக்கு விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. மகனின் வழக்கு விவாதம் வரும் வரை பதற்றத்துடன் பெற்றோர் இருந்தனர்.

அழுது வீங்கிப்போயிருந்த தாயின் முகத்தைப் பார்க்க முடியாத நரேன், நிலத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

**மு**ருகேசுவுக்கும் மங்களத்துக்கும் பிறந்த இளைய மகன்தான் நரேந்திரன். உயர்த்தர வர்த்தக பிரிவில் கல்வி பயின்று சித்தியடைந்த அவன் பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

முருகேசு அரச நிறுவனம் ஒன்றில் தலைமை எழுதுவினைஞராக கடமையாற்றுபவர். அவரது நிறுவனத் தலைவரது மகன் அந்த வருடம் கல்விப்பொதுத் தராதர

**யாழ்- மு. கலை**

சாதாரண தரப்பரீட்சை எழுதவேண்டியிருந்தான். ஆனால் தலைவரது மகன் கணித பாடத்தில் சித்திபெற ஆற்றலற்றவனாக இருந்தான்.

மகனுக்காக வேறுயாரையாவது பரீட்சை எழுத திட்டமிட்டிருந்தார் தலைவர்.

அந்த ஆலோசனையை முருகேசுவிடம் தெரிவித்தபோதுதான் நரேந்திரனை அவர் மகனுக்காக பரீட்சையில் 'குதிரை ஓட' முருகேசுவிடம் கேட்டார். முருகேசுவும் தலைமை அதிகாரியிடம் மறுப்புத் தெரிவிக்க முடியாத காரணத்தால் சம்மதித்துவிட்டார்.

தேசிய அடையாள அட்டையில் நிறுவனத் தலைவரின் மகனின் புகைப்படத்திற்குப் பதிலாக நரேந்திரனின் புகைப்படம் மாற்றப்பட்டு நான்கு பாடங்களை எழுதிவிட்டிருந்தான்.

பரீட்சை மண்டபத்தில் ஆள் மாறாட்டம் செய்வதை பரீட்சை மேற்பார்வையாளர்களால் கண்டுபிடிக்க முடியாத காரணத்தால் வெற்றிகரமாக நான்காவது பாடத்தையும் எழுதிவிட்டு, நரேன் வீதிப்பரிசோதனைச் சாவடி ஒன்றில் சைக்கிளிலிருந்து இறங்கி உருட்டிக்கொண்டு வந்தான்.

பொதிகளையும், அடையாள அட்டைகளையும் பரிசோதித்துக் கொண்டிருந்த காவலரிடம் தனது அடையாள அட்டையை காட்டுவதற்கு எடுத்தபோது, போலி அடையாள அட்டையும் சேர்ந்தே வந்துவிட்டது.

தனது அடையாள அட்டையை காவலரிடம் கொடுத்துவிட்டு, போலியை மறைப்பதற்காக மீண்டும் காற்சட்டைப் பையில் இட்டதைக் கண்ட காவலரர், அதை வெளியே எடுக்கச் சொல்லி வாங்கிப் பார்த்தார்.

ஒரு நபரின் புகைப்படம்- இரண்டு பெயர்களில் இரண்டு அடையாள அட்டைகள்.

காவலரின் முகத்தில் கோபத்தின் கீறல்கள். நரேந்திரனை எரித்துவிடுபவர் போலப் பார்த்தவர், "சைக்கிளுடன் உள்ளே வா!" எனக் கட்டளை இட்டார்.

"பரீட்சை எழுதுவதற்காகத்தான் இப்படி ஆள் மாறாட்டமே தவிர வேறு எக்காரணங்களுக்காகவும் இல்லை," என கெஞ்சிப் பார்த்தான் நரேன். பலிக்கவில்லை.

இன்று குற்றவாளியாக கூண்டில் ஏற்றப்பட்டுவிட்டான். புகைப்படத்துடன் இரு பெயர்களில் இரண்டு அடையாள அட்டைகள் இருந்தமையினால் நரேன் குற்றமற்றவன் என்பதை நரேன் சார்பில் வாதாடிய வக்கீலால் நிரூபிக்க முடியாமல் போய்விட்டது.

இருந்தபோதிலும் "நரேன் சாதாரண தரப்பரீட்சை எழுதுவதற்காகவே அந்த போலி அடையாள அட்டையை வைத்திருந்தானே தவிர வேறு எக் காரணங்களுக்காகவும் அல்ல!" என வாதிட்டு நரேன் குற்றத்தை ஒப்புக்கொள்வதாகவும் அவனுக்குக் குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறும் வாதாடினார்.

பொலிஸ் தரப்பில் வாதாடிய அரசாங்க வக்கீல் குறுக்கிட்டு வாதாடினார். "பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும்போது இரண்டு அடையாள அட்டைகளை வைத்திருந்து பிடிக்கப்பட்டிருந்தால், பரீட்சைக்காகவே இவர் ஆள்மாறாட்டம் செய்துள்ளார் எனக் கருதமுடியும். ஆனால் இவர் வீதியில் இரண்டு அடையாள அட்டைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அவசரகால சட்டத்தின்கீழ் இந்த ஆள் மாறாட்டமானது பெரிய குற்றமாகும்."

அரசாங்க வக்கீலின் வாதம் நரேனின் பெற்றோரைக் கலங்க வைத்துவிட்டது.

நீதிபதியின் தீர்ப்புக்காக எல்லோரும் அமைதியாக இருந்தனர். நரேனின் பெற்றோரது இதயம் நிமிடத்துக்கு பல்லாயிரம் தடவைகள் அடித்துக்கொண்டிருந்தன.....

நீதிபதி தீர்ப்பு எழுதிக் கொண்டிருந்தார்.

"ஆள்மாறாட்ட நடவடிக்கை ஒரு பயங்கரவாதச் செயலாகக் கருதப்பட்டு ஐந்துவருட கடுங்காவல் சிறைத்தண்டனை அளிக்கப்படுகிறது!"

தீர்ப்பு வாசிக்கப்பட்டது!

மங்களத்திற்கு உலகமே இருண்டு வர அருகிலிருந்த கணவனின் மடியில் சரிந்தாள்...

---

# திடம்

**கனகசபை தேவகடாட்சம்**



**அ**ந்த ஓலைக் குடிசையின் நடு முகட்டு வளையை நோக்கியவாறு கிடத்தியிருந்த தனது தாயினதும், தந்தையினதும் பிரேதங்களை விறைத்துப் பார்த்த வண்ணம் வாசல் மூலையில் அமர்ந்திருந்தான் முருகதாஸ்.!

அவனின் இட, வல புறமாக அவனது தம்பியும் தங்கையும் கேவிக் கேவி அழுது கொண்டிருந்தனர். கூடவே பாடசாலை தோழர்களும் சூழ்ந்திருந்தனர். முருகதாசுக்கு அவன் அப்பா முகத்தைப் பார்க்கப் பார்க்க 'வெறுப்பு' தீச்சுவாலையாக கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. பிணமாகக் கிடக்கையிலும்கூட, அந்த நேற்றைய சம்பவம்- அவன் நெஞ்சில் எள்ளளவேனும் ஈரத்தை உண்டாக்க நியாயமில்லைதான்.

எட்டுமணியைத் தாண்டிய இரவில் நாய்கள் குரைக்கின்றதென்றால் அது ஒன்று படையினருக்காக இருக்கும். அல்லது மணியத்தின் மது வெறிக் குரலுக்காக இருக்கும். மனிதனைவிட நாய்களுக்கு இவைகளின் பேதம் நன்கு புரியும். அக் கிராமத்து மக்கள் நாய்களின் குரைப்பிற்கு ஏற்றவாறு இசைவாக்கம் அடைந்து பாதுகாப்புத் தேடிக்கொள்வார்கள்.

"போனால் போகட்டும் போடா..." என்று பாடி வந்த மணியத்தின் குரலுக்கு நாய்கள் பக்கவாத்தியம் இசைத்துக் கொண்டிருந்தன.

கமக்கட்டிற்குள் இருந்த அரைப் போத்தல் சாராயத்துடன் வீட்டிற்குள் நுழைந்தான் மணியம்.

மனைவி பூரணத்தின் பேச்சின் சீற்றம் வெடியாய்ப் பாய்ந்தது.

"இஞ்சேர்! உனக்கு வெக்கமெண்டதே இல்லையா? எண்ட வாழ்க்கைதான் கண்ணீரில போகுதெண்டாலும், நம்மட வளர்ந்த பிள்ளைகளுக்கும் இந்த நிலைய அந்த கண்கெட்ட ஆண்டவன் தந்திட்டான்! அதுகள் எப்பிடி படிப்பில கெட்டித்தனமாய் இருந்தென்ன? பள்ளியில வெக்கம் தாங்காம ஒவ்வொரு நாளும் சொல்லி அழுதுகள். இதெல்லாம் குடிகாரன் ஒனக்கு எங்க வெளங்கப் போகுது!"

"பொத்துடி வாயை! கொஞ்சம் விட வாய் நீண்டுதான் போகுது!" நாக்கு புரள முடியாமல் கத்தினான் மணியம்- இடைவேளை விடாமல்! "என்னடி பெரிய படிப்பு படிக்கிறானுகள்! படிச்சு உத்தியோகம் பார்த்தாலும் என்ன, நான் மேசன் தொழில்ல ஒழைக்கிறத ஒழைப்பானுகளாடி ஒன் புள்ளைகள்? அப்பிடியான என்னை குடிகாறன் எண்டாடி சொல்லுற நாயே!"

இப்படியே முற்றிய வாதம், கை கலப்பு வரை நீடித்தது.

இவற்றை எல்லாம் கேட்டுக் கொண்டு படுத்திருந்த மகன் முருகதாஸ், அதைப் பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை. இது வழமையானது தானே!

இப்போது மணியம் தம்பதியிடையே வெண்புறா சிறகடிக்கத் தொடங்கியது. அந்த சமாதானத்தின் உரையாடலிலே, மணியம் ஓர் உபாயத்தைக் கையாளத் தொடங்கினான்- தொடர்ந்து தான் நிம்மதியாகக் குடிக்க வேண்டுமென்பதற்காக!

"இஞ்சபார் பூரணம்! இன்டையோட சத்தியமாக குடியை விட்டிடுவன். எனக்காக- எண்ட அன்புக்காக... இதில ஒரு சொட்டு குடி. அது ஒடம்புக்கும் நல்லது." மெதுவாக அணைத்தபடி, அதுவும் பலாத்காரமும் அன்பும் பாதி பாதியாக இணைந்தபடி மனைவிக்கு அவன் கொண்டு வந்த சாராயத்தில் ஒரு பகுதியை பருக்கிவிட்டு மிகுதியை தானும் பருகிவிட்டு இரவுச் சாப்பாட்டின் பின் படுத்தவர்கள்- படுத்தவர்கள்தான்!

**எட்டுமணியைத் தாண்டி நாய்கள் குரைப்பது என்றால் அது படையினருக்காக இருக்கும். அல்லது மணியத்தின் மது வெறிக்குரலுக்காக இருக்கும்**

எழும்பவே இல்லை.

இப்போது மணியம்- பூரணத்தின் பிரேதங்கள் மயானத்தை நோக்கி பயணிக்க ஆரம்பமானது.

அக் கிராமத்தை சுற்றிவர இந்த அகோர மரணங்கள், பல நடந்திருந்தன! மதுவில் கலந்திருந்த கலப்படம் ஊரை சுடுகாடாக மாற்றியிருந்தது.

சகோதரங்கள் இருவரின் விம்மல், மேலும் முருகதாசுக்கு அவன் தந்தைமீது ஆத்திரத்தை அதிகரிக்க வைத்தவண்ணம் இருந்தது. தன் தாயைக் கொன்ற கொலைகாரனாகவே தந்தையை எண்ணிக் கொண்டிருந்தவனின் நினைவுகள் அழுகையாக பீறிட்டுப் பாய்ந்தது. அவனையறியாது அவன் கரங்கள் தன் சகோதரங்களை அணைத்துக் கொண்டன. "தம்பி! அழுது என்ன பலன்? நடக்கிறது நடந்துதான் ஆகும்!" அனுபவத்தில் முதிர்ந்த ஒருவர்.

"சாராயத்தில கலப்படம் செய்தவர்களை புடிச்சாச்சாமே?" அதனைத் தொடர்ந்தார் இன்னொருவர்.

முருகதாஸ் பொறுமை இழந்ததை அவன் பேச்சு காட்டிக் கொடுத்தது.

"இந்த கலப்படம் செய்தவனுகளப் பிடிச்சு என்ன செய்யப் போறானுகள்! அவனுகள் காசுக்காரனுகள், அரசியல் செல்வாக்குக் காரனுகள்! தப்பிடுவானுகள். ஏன் அரசாங்கம்கூட அவனுகளுக்கு பயம். இதுக்கெல்லாம் உடனுடனே தண்டனை கொடுக்கணும். அதுக்கு அரசாங்கம் சரிவராது. அதுக்கு.... அதுதான் ஐயா! அந்தத் தண்டனைதான் மத்தவங்களுக்கும் பாடமாயிருக்கும். அப்பதான் எங்களப் போல ஏழைகளும் காப்பாத்தப்படுவம்!" முருகதாசின் இந்தக் குமுறலுக்குப் பின் தோன்றிய அமைதி, இரு பிரேதங்களும் மயானம் வரும்வரை நீடித்தது.

இறுதியாக மூன்று பிடி மண்ணைப் போட்டு விட்டு நிமிர்ந்த முருகதாசின் கண்களில் நீர் இருக்கவில்லை- தெளிவு இருந்தது.

நாளையில் இருந்து தன்னுடன் மூன்று மனித ஜீவன்களின் 'பசிபோக்கும் பணி' தன்னில் சுமத்தப்பட்டிருப்பதை மூத்தவனான அவன் உணர்ந்துகொண்டான்.

படிப்பை விட பசிதான் முக்கியம்! புதிய தடம் அவனுக்குப் புலப்பட்டது! இப்போ அவன் சிந்தனையெல்லாம், நாளையில் இருந்து அவன் செய்யப் போகும் கூலி வேலையைப் பற்றித்தான்!

---

# கண்ணீரில் கரைந்தது

**"வாங்கி வச்சியிருக்கிற அஞ்சி சட்டையுமே விலை உயர்ந்ததுதான் விரும்புறதை போட்டுக்கோ"**

**இ**ரவு பிறை கீற்று வானை முத்தமிட்டதால் இன்று நோன்பின் முடிவுரையாய் 'ஷவ்வால்' பெருநாள் கொண்டாடப்படுகிறது. காலைநேர சேவல் கூவியெழுப்ப அதிகாலை சுபஹ் தொழுகையை முடித்துவிட்டு குளித்து முடித்து, வாங்கி வைத்த புத்தாடைகளை அணிவதில் மக்கள் பூரித்துப் போயிருந்தனர்.

"வாப்பா எந்தச் சட்டையை நான் போட்டுக்கொள்ள?" மகன் கேட்க,

"வாங்கி வச்சியிருக்கிற அஞ்சி சட்டையுமே விலையுயர்ந்த அழகானதுகள்தான். அதனால் நீயெதை விரும்புறியோ அதை போட்டுக்கோ!" என்றார் லாஹிர் நானா. அதைக் கேட்ட மகன், "சரிங்க வாப்பா!" என்றவாறே மேனியை ஆடையினால் அலங்கரிக்கத் தொடங்கினான்.

லாஹிர் நானாவும் தனக்கு இந்த வருஷத்தில் மிக நவீன முறையில் தயாரிக்கப்பட்ட விலைகூடிய ஆடைகளையே எடுத்திருந்தார். காரணம் அவர் வசதி அப்படி. அந்த உயர் ஆடைகளை அணிந்துகொண்டு, கண்ணாடி முன் அணிவகுப்பு செய்தார். எடுப்பாயிருந்த ஆடை அவரின் ஐந்து வயதைக் குறைத்தே காட்டியது. லாச்சியை திறந்து செண்டை எடுத்தார். பஞ்சை நனைத்து மேனியில் தடவ, பூச்சோலை உடலில் பரவியதாய் வாசம் வீசத் தொடங்கியது.

"மகன் கரேஜ் சாவியை எடுத்திட்டு வா. காரையெடுத்து வெளியில போட்டோமென்றால் சாப்புட்டுட்டு மஸ்ஜிதுக்கு போயிடலாம்!" என்றார் லாஹிர் நானா.

முஸ்லிம்கள் பெருநாள் தினத்தில் காலை மஸ்ஜிதுக்கு சென்று ஒன்றாய்க் கூடி தொழுவது வழக்கமாயிற்றே.

★★★

**சு**பைதா ராத்தாவின் குடும்பம் வறிய குடும்பம். கணவனை இழந்து விதவைப் பட்டம் சுமக்கும் அவளின் குடும்ப வண்டியை நகர்த்தி செல்ல துணை செய்வது கடையப்பம் செய்யும் வழக்கம்தான். மூன்று பிள்ளைகள்- மூத்தது இரண்டும் பெண்கள். கடைசி மகன் வயது பதினைந்தை எட்டிப்பிடித்திருந்தது. பெயர் ராபி!

மகன் ராபியின் வயது ஆசை கொள்ளும் இளம் வயது. எல்லோர் மேனியும் புத்தாடைக்குள் புகுந்திருக்க, அவன் மேனிமட்டும் உள்ள பழைய சட்டையில் நல்லதையும், கிடந்த கந்தல் சாரங்களில் கந்தல் குறைந்த சாரத்தையும் தாங்கியிருந்தது. இருந்தாலும் அவன் மனம் அதற்காய் கவலைப்படவில்லை. ஐந்து வருடமாய் அனுபவித்து வரும் இந்நிலை அவனைப் பழக்கப்படுத்திவிட்டிருந்தது. உள்ளதை உடுத்திய அந்த ஏழைமகனும் பெருநாள் தொழுகையினை நிறைவேற்ற மஸ்ஜிது நோக்கிப் புறப்பட்டான்.

செண்ட் வாசனை வீச, புத்தாடை பூண்ட லாஹிர் நானாவும் அவர் மகனும் ஏசிக்காரில் மஸ்ஜித் நோக்கி வந்துக்கொண்டிருந்தனர்.



ராபி வந்த பாதை ஒழுங்கைப் பாதை. அந்த பாதை முடிய பிரதான பாதை வரும். அதற்கு வலப் பக்கமாய் திரும்பி பத்தெட்டு வைத்தால் மஸ்ஜிதின் முன் வாசல் வரும். லாஹிர் நானா வந்துக் கொண்டிருந்ததோ பிரதான பாதை.

ராபி பிரதான பாதையை எட்டிப்பிடிக்கவும் லாஹிர் நானா அவனை அண்மிக்கவும் சரியாக இருந்தது. ராபிக்குக்கும் காருக்குமுள்ள தூரம் பத்தடி மட்டுமே. அதைக் கண்டு அதிர்ச்சியுற்ற லாஹிர் நானா அக்ஸலேட்டரை விட்டு விட்டு கிலஜ்ஜை கூட பிடிக்காது பிரேக் அடித்தார். ஆனாலும் வந்த வேகத்தில் பிரேக்கிடப்பட்டதால் கார் சக்கரம் பாதையினை தேய்த்துக் கொண்டு போய் ராபியை மோதி நின்றது.

ராபி மயங்கி விழ, சம்பவத்தை கண்ணுற்ற மக்கள் கூடிவிட்டனர். பதற்றமடைந்த லாஹிர் நானா அவனைத் தூக்கி காரில் கிடத்திவிட்டு அண்மையிலிருக்கும் மஜீத் டாக்டர் வீடு நோக்கி விரைந்தார்.

டாக்டர் வீட்டை நெருங்கியவர், காரை நிறுத்திவிட்டு மணியை அழுத்தினார். மஸ்ஜித் செல்ல ஆயத்தமாயிருந்த டாக்டர் மஜீத் உடனேயே கதவினை திறந்தார்.

"டாக்டர் மஜீத்! வார வழியில ஒரு பையன் அக்சிடனாயிட்டான். சீக்கிரமா பாருங்களேன்!"

என்றவர் கார்பக்கம் விரைய பின்னே மஜீத் டாக்டரும் விரைந்தார். இருவருமாய் தூக்கிக்கொண்டு சென்று கட்டிலில் கிடத்த

**புத்தளம் எம்.ஸாலிஹ் அஸீம்**

சோதனை பண்ணிய டாக்டர்,

"மிஸ்டர் லாஹிர் பையனுக்கு அடியெல்லாம் பலமா விழயில்லை. அதிர்ச்சியில் மயங்கிட்டான். இப்ப எழும்பிடுவான்," என்றவர் ஊசி ஏற்ற ஆயத்தப்படுத்தினார்.

பழைய ஆடை; வாடிய முகம் அப்பாவித் தோற்றம் பையனைப் பார்த்த லாஹிர் நானாவுக்கு கடந்த வாழ்க்கை நினைவில் நடந்து வந்தது.

**அ**வருக்கு ஆறுவயதிலேயே தந்தை இறந்து போனார். ஒரு வருடத்தில் தாயும் மௌத்தாக, அவரும் அவர் நானாவும் அனாதைகளானார்கள். நானாவுக்கு அப்போது பத்து வயதிருக்கும் லாஹிர் நானாவை வளர்க்க நானா கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில்தான்- பிள்ளை பாக்கியமில்லாத தம்பதி இவரை தத்தெடுக்க ஆசைப்பட்டனர். ஆரம்பத்தில் மறுத்த நானா தம்பியின் எதிர்காலத்துக்காய் சம்மதித்தார்.

அதன்பின் நானாவை காணவேயில்லை. தன்னை தத்தெடுத்த தம்பதியர் காலமானபின் சொத்தெல்லாம் இவருக்கு என்றாயிற்று. இருந்தாலும் நானாவை மறந்தே போனார் அவர் தோற்றத்தில் மயங்கிக் கிடந்த ராபியை பார்க்க அந்த ஞாபகம் இந்தவேளை வந்தது.

"ஆ... பையன் விழிச்சிட்டான்." என்ற டாக்டரின் வார்த்தை லாஹிர் நானாவை சுயநினைவுக்குக் கொண்டு வந்தது.

மயக்கம் தெளிந்த ராபி நடந்தது புரியாமல் விழிக்க, "மகன் உன்னோட வாப்பா யாருப்பா?"

"அவரு பேரு இல்ஹாம். அஞ்சி வருஷத்துக்கு முன்னாடி மௌத்தாயிட்டார்."

"அப்படினா வாப்பாவோட காக்கா, தம்பிங்க இல்லையாப்பா?"

"இருந்தாங்களாம். ஒரு தம்பி லாஹிருன்னு பேரு, அவரு...." குரல் தழுதழுத்தது.

"என்ன? அப்படின்னா என்னோட நானா இல்ஹாம்தான்!" அதிர்ச்சியானார் லாஹிர் நானா.

"என் நானா மௌத்தாயிட்டாரா?" கேட்டபடியே ராபியை மார்போடு அணைத்துக் கொண்டார் லாஹிர் நானா. ஆனந்தக் கண்ணீரும் வேதனை கண்ணீரும் ஒன்றாய் வர, அதில் கரைந்தது சுபைதா ராத்தா வீட்டு வறுமை.

# இலக்கிய நயம்

## தீராத சந்தேகம்

### தருவது ரசிகன்



"உயிருக்கு
உருவம் உண்டு.
அந்த உயிரையும்
நான் கண்டதுண்டு!"

மலர்விழி சொல்ல
தோழி நகைத்தாள்.

"என் உயிர்
அவர்தானடி!-நான்
கண்களால் தீண்டும்
உயிர் அவர்தானடி!"

தோழிக்கு
விடயம் வெளித்தது.

"கைகளால்
தீண்டும் இன்பம்
உடலில்!
கண்களால்
தீண்டும் இன்பம்
உயிரில்!"

மலர்விழி
பாடம் போதித்தாள்!

"கற்றுக்கொண்டதை
கற்றுத்தர
கிடைத்தது நான்தானா?"
தோழி வினாக்குறி
போட்டாள்.

"வேண்டாம் என்றால்
போடி"

காதல் கதை கேட்க
ஆவல் இல்லாமல் போகுமா?

"பாவமடி நீ
உனக்கும் பேச்சுத் துணை
வேண்டாமோ
சரி எடுத்துவிடு!"
என்றாள் தோழி.

"காதலுக்கு
தேவை என்ன சொல்லு?"

"சாதலுக்கு தேவை
உயிரை வெளிவிடுதல்!
காதலுக்கு தேவை
உயிரை உள்வாங்கல்!"

தோழி சொன்ன பதில்
சுவையாக இருந்தது!

"ஒத்துக் கொள்கிறேன்
அத்தோடு இன்னொன்றையும்
சேர்த்துக் கொள்ளடி.
காதலுக்கு
பொறுமையும் தேவை!"
என்றாள் மலர்விழி.

"ஓடுமீன் ஓடி உறுமீன்
வருமளவும் வாடியிருக்க
காதல் என்ன கொக்கோ?"
இடக்காக எழுந்தது கேள்வி.
"கொக்குத்தானடி கொக்குத்தான்
கண்டதும் காதல்
கதைகளில்தான்!
அந்தக் காதல் விரைவாக
வென்றதும்கூட
கதைகளில்தான்!"

மலர்விழி சொன்னதும்
தோழி குறும்பினாள்.

"ஒற்றைக்காலில்
நில்லடி கண்ணு.
வெற்றிக் குமரன்
வருகின்ற வரைக்கும்!"

மலர்விழி
அசைந்தாளில்லை!

"கடற்கரை மணலில்
கொக்கு நிற்கும்!
காதலின் வீதியில்
நான் நிற்பேன்!"

"பொறுத்தார் அரசாள்வார்
என்பது தெரியும்
காத்திருந்தார்
காதலில் கரை சேர்வார்
என்பது தெரியாது!"

மறுபடி தோழியின்
இடக்குப் பேச்சு
மடக்கும் வீச்சு!

"காதலின் சுகம்
எதிலே தெரியுமா?"

"எதிலே?"

"காதல் கைப்படுமா
என்ற தவிப்பிலே!"

"ஒஹோ"

"காதலின் சக்தி
எதிலே தெரியுமா?"

"தெரியாதம்மா தெரியாது!"

"எண்ணிக்கொண்டே
இருக்கும்போது
எண்ணியவர் எதிரே
வந்து நிற்கும் வியப்பிலே!"

"அடடே..
மனது தபால் அனுப்பி
தகவல் கொடுக்கிறதோ?"

"நினைவுகளே தந்திகள்
நினைவுகளே தபால்கள்
நினைவுகளே புறாக்கள்
காற்றில் பறந்துசென்று
காதல் தூது சென்று
கை பிடித்து இழுத்து வருகின்றன!"

"அழைத்துவந்த பின்னர்
களைத்து வந்தவரை
எப்படிக் கவனிப்பாய்?"
தோழி கண்சிமிட்டினாள்.

"நெஞ்சுக் கூட்டுக்குள்
இழுத்தணைத்து
பூட்டிக் கொள்வேன்!
கொஞ்சும் இதழினாள்
கொவ்வைப் பழம்
கொடுப்பேன்!

யானைப் பலம் கொண்ட
காளை என் முன்னால்
பூனைபோல் பதுங்கும்!
உள்ளம் துடி துடிக்க
கள்ளம் சிறகடிக்கும்!
இன்ப வெள்ளம் மேல்விழுந்த
தோணி நாமாவோம்!
காதல் துடுப்பாலே
இன்ப கரை நாம் சேர்வோம்!

கைகள் தாளமிட
கால்கள் கலந்தாட
தோள்கள் சுதி சேர
பாலும் பழமாகி
தேனும் சுவையுமாகி
தேகம் சதிர் ஆடும்!

குதிரையில் பறந்துவந்த
குறுவாள் மீசைக்காரன்
இன்பக் குதிரையில்
எனை அழைத்து
போகும் உலா
சொர்க்கம் என்பேன்!

போதும் என்பேன்
மோதும் யானை!
அஞ்சிய பூனை
கொஞ்சிய பின் யானை!

மலர்விழி
சொல்லச் சொல்ல
கள்வெறி கொண்டாள்
தோழி!

கள் வெறி கொண்ட
தோழிக்கு
தன் காதலன் நினைவு
இடறியது!

கண்கள்
கிறக்கத்தில் செருகியது!

"என்னடி தோழி
மயக்கமா?
கள் வெறிக் காம
கலக்கமா?"

தோழியைக் கேட்டாள்
மலர்விழி.

"எனக்கொரு சந்தேகம்
என்றும் தீராத சந்தேகம்"

"என்னடி தோழி
சந்தேகம்?"

"உள்ளே போனால்தானே
மது வெறிக்கும்!
உண்டால்தானே
மது மயக்கும்!
ஆனால்-நினைக்கவே
வெறிக்கிறதே
இது என்ன மயக்கம்?"

தோழியின் வினாவுக்கு
சுருக்கமாய் சொன்னாள்
திருக்குறள் ஒன்றை;

"இதன் பெயர்தான்
இன்ப மயக்கம்.
நினைத்ததும் இனிக்கும்
காம மயக்கம்.
உண்ணும் கள்ளும்
ஈடாகாத இன்ப மயக்கம்"

"உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது"

அதிகாரம்:121-குறள்: 1201

---

## ஸ்போர்ட்ஸ்

## பாகிஸ்தான் அணி சுற்றுப்பயணம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இந்தச் சுற்றுப் பயணத்திற்கான பாகிஸ்தான் அணி விபரம் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வாசிம் அக்ரமின் பெயர் இடம் பெறவில்லை.

"கப்டன் பதவியை இனி ஏற்க மாட்டேன்" என்று அவர் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியொன்றில் கூறியிருந்தார். அத்துடன் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையையும் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்நிலையில் அவர் நீக்கப்பட்டது பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பங்களாதேஷ் சுதந்திரக் கிண்ண போட்டிக்குத் தலைமை தாங்கிய ரஷித் லத்தீப் தொடர்ந்து கப்டனாக நீடிப்பார். வக்கார் யூனுஸ் மற்றும் மொய்ன் கான் ஆகியோர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவுடன் 5 டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தான் விளையாடுகிறது. இது முடிவடைந்ததும் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் கலந்து கொள்ளும் முத்தரப்பு ஒரு நாள் போட்டித்தொடர் நடைபெறுகிறது.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் டெஸ்ட், முத்தரப்புப் போட்டித் தொடர் பற்றிய கால அட்டவணை இதோ:

**டெஸ்ட்**

1வது டெஸ்ட் பெப்ரவரி 13-17
2வது டெஸ்ட் பெப் 26-மார்ச் 02
3வது டெஸ்ட் மார்ச் 06-10
4வது டெஸ்ட் மார்ச் 19-23
5வது டெஸ்ட் மார்ச் 27-31

**முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடர்**

ஏப்ரல் 03 - தெ.ஆபிரிக்கா எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 05 - தெ.ஆபிரிக்கா எதிர் இலங்கை
ஏப்ரல் 07 - இலங்கை எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 09 - இலங்கை எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 11 - தெ.ஆபிரிக்கா எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 13 - தெ.ஆபிரிக்கா எதிர் இலங்கை
ஏப்ரல் 15 - இலங்கை எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 17 - தெ.ஆபிரிக்கா எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 19 - தெ.ஆபிரிக்கா எதிர் இலங்கை
ஏப்ரல் 22 - இறுதிப் போட்டி
(ஏப்ரல் 22ல் இறுதிப் போட்டி தடைப்படின் ஏப்ரல் 23ல் மாற்றுப் போட்டி நடைபெறும்)

## குறையில்லாத வீச்சு



இந்திய சுழற்பந்து வீச்சாளரான ராஜேஷ் செளகானின் பந்து வீச்சு முறையானதாக இல்லாமல் எறிவதைப் போல இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இலங்கை-இந்திய அணிகளுக்கிடையே நடந்த டெஸ்ட் போட்டியின் போது நடுவராக இருந்த பொப் சிம்ப்சன், செளகான் பந்தை எறிகிறார் என்று கூறினார். இதனால் செளகான் இந்திய அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இதற்கிடையே இந்த முறைப்பாடு குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவினரும் விசாரணை நடத்தினார்கள். செளகானின் பந்து வீச்சை வீடியோவில் பார்த்தனர். அப்போது அவரது பந்துவீச்சில் எந்தக் குறையும் இல்லை என்று முடிவு செய்தனர்.

## இவர்தான் அவர்



பத்மினி

## ஆயிரம் குவித்தவர்கள்

சென்ற வருடம் ஒருநாள் போட்டிகளில் ஆயிரம் ஓட்டங்களைக் குவித்தவர்கள் 6 பேர். இந்த அறுவரும் ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த வீரர்கள். ஆயிரம் ஓட்டங்களைக் குவித்தவர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

| வீரர் | போட்டிகள் | ஓட்டங்கள் |
|---|---|---|
| 1. செளரவ் கங்குலி (இந்தியா) | 38 | 1338 |
| 2. அரவிந்த டி சில்வா (இலங்கை) | 28 | 1212 |
| 3. சனத் ஜயசூரிய (இலங்கை) | 26 | 1178 |
| 4. இஜாஸ் அஹமட் (பாகிஸ்தான்) | 31 | 1106 |
| 5. முகமட் அஸாருதீன் (இந்தியா) | 36 | 1104 |
| 6. சச்சின் டெண்டுல்கார் (இந்தியா) | 39 | 1011 |

---

★ புலிகள் இயக்கத் தடையால் எத்தகைய பாதிப்பு ஏற்படும்.

சி.அன்பரசன், கொழும்பு-6.

'பேச்சுவார்த்தைக் கதவு திறந்தே இருக்கிறது' என்ற பல்லவியை சில காலத்திற்காவது கேட்க முடியாமல்போகும்.

★ டியர் சிந்தியா! காணாமல் போனோர் (யாழ்ப்பாணத்தில்) தொடர்பான விசாரணைக் கமிஷன் நியமிக்கப்போவதாக அறிவித்தார்களே, காணோமே?

பா.உதயகுமார், சாவகச்சேரி.

இன்னொரு வாக்குறுதி! ஆனால் வாக்கு உறுதியல்ல!

★ தலதா மாளிகை குண்டுவெடிப்பை அடுத்து ரணில் விடுத்த பதவி விலகல் கோரிக்கை பற்றி என்ன கூறுகிறீர்?

ஜெ.எட்வின், வத்தளை.

'எரியிற வீட்டில் பிடுங்குவது இலாபம்' என்பதுதான் அரசியல்!

★ புங்குடுதீவில் ஈ.பி.டி.பி முகாம் புலிகளால் தாக்கப்பட்டுள்ளதே! இதுவும் சகோதரப் படுகொலைதானே?

எஸ்.கவிதா, வவுனியா.

புலிகளுக்கு எதிரான தேர்தல் என்று அரசாங்கம் கூறுவதை எந்தவொரு கட்சியும் எதிர்க்கவில்லையே! ஆகவே புலிகளின் தாக்குதலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்! புலிகளை தங்கள் சகோதரர்கள் என்று ஏனைய கட்சிகளும் கருதுவதாகத் தெரியவில்லை. ஆகவே அந்த சொற்பதங்கள் இனிப் பொருந்தாது என்று நினைக்கிறேன்.

★ யாழ் நூலக புதிய கட்டட வேலைகள் ஆரம்பமாகுமா?

பி.ஜெயராமன், ஊரெழு.

பிரசாரத் தேவையானால் தொடங்கும்.

★ சிந்தியா! குறும்பில் சிறந்தவர்கள் யார் ஆண்களா? பெண்களா?

இ.சிவகுமார், ஹட்டன்.

பெண்களிடம் ஆண்களும், ஆண்களிடம் பெண்களும்!

★ அமெரிக்க அதிபர்மீது 'செக்ஸ்' குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளனவே?

எம்.பஷீர், நீர்கொழும்பு.

கிளின்ரனை கிளீன் போல்டாக்க அவரது எதிரிகள் செய்யும் பிரசாரம் போலத்தான் தெரிகிறது. யார் என்ன கூறினாலும் கிலாரி தன் கணவரை சந்தேகிக்கவில்லைப் பார்த்தீர்களா? கிளின்ரன் கிளீன் கணவர் என்கிறாராம் கிலாரி.

★ யாழ் தேர்தலில் கூட்டணியை விமர்சிக்கும் இயக்கங்களை 'முரசு' சாடியது ஏன்? ஏன் திடீர் பாசம்?

ஆர்.தயாளன், மட்டக்களப்பு.

உண்மையைச் சொன்னால்தான் இந்தக் காலத்தில் ஆபத்து. ஏன் உண்மையைச் சொல்கிறார்கள் என்று தலையைப் பிய்க்கவும் ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் பாசம் என்பர்; வேசம் என்பர். நீங்களுமா? கூட்டணி ஏன் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டது, என்று கேலி செய்ய தமிழ்க் கட்சிகளுக்கு உரிமை இல்லை என்பதைத்தான் முரசு சுட்டிக்காட்டியது. அதில் என்ன பாசம்?!

★ சீதனத்திற்காக மட்டும் திருமணம் செய்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

செல்வி எல்.புவனலட்சுமி, இரத்தினபுரி.

ஒருத்தன் ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிட்டான். அப்ப ஒருவர் அவனிடம், "ஏம்பா அந்தப் பெண்ணின் தாத்தா சொத்து எழுதித் தந்ததால்தானே நீ அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்?" என்று கேட்டான்.

அதற்கு அவன் சொன்னான்:

"கிடையவே கிடையாது. யார் சொத்து எழுதித் தந்திருந்தாலும் நான் இவளை திருமணம் செய்திருப்பேன்!"

★ டியர் சிந்தியா! எனக்கு அதிஷ்டம் கைகொடுக்கவில்லையே, என்ன செய்யலாம்?

சா.கணேசநாதன், திருமலை.

சிந்தனையாளர் மாக்யவெல்லி கூறுவதைக் கேளுங்கள்:

"மனிதர்களுக்கு வெவ்வேறு விதமான முகங்களைக் கொடுத்தது போலவே, இயற்கை அவர்களுக்கு வெவ்வேறு விதமான மனதையும் குணத்தையும் கொடுத்திருக்கிறது. மனிதர்கள் தங்கள் குண இயல்புப்படியும், மனப்போக்கின் படியும் செயலாற்றுகிறார்கள். ஆனால், இன்னொரு புறத்தில் காலமும்,சூழ்நிலையும் மாறிக்கொண்டே இருக்கிறது.



தன் போக்கின்படி மனிதன் ஆற்றும் செயல்கள், காலத்துக்கும், சூழ்நிலைக்கும் பொருந்திவிடுகிறபோது, அவன் வெற்றி அடைகிறான். அதிஷ்டசாலி என்று கொண்டாடப்படுகிறான். பொறுக்க முடியாத சிலரால் தூற்றவும் படுகிறான். அவன் செயல்கள் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் பொருந்தாத போது அவன் தோல்வி அடைகிறான். அது துரதிஷ்டமாகக் கருதப்படுகிறது."

★ பணம் வாழ்க்கைக்கு முக்கியமா?

ஏ.குகபாலன், வவுனியா.

முக்கியம்தான்! ஆனால் பணம் மட்டும் வாழ்க்கையல்ல! "பணம் எங்களுக்கு முக்கியமில்லை, மற்றவர்களுக்குத்தான் பணத்தாசை" என்று சொல்லும் ஆசாமிகள் இருக்கிறார்கள் பாருங்கள்; அவர்களிடம்தான் பணத்தாசை அதிகம் இருக்கும்! பணம் தொடர்பான ஒரு அனுபவப் பழமொழி: "பணத்தின் மதிப்பு தெரிய வேண்டுமானால், அதைக் கொஞ்சம் கடனாகக் கேட்டுப்பார்!"

★ சமீபத்திய படங்களில் வெற்றிப் படமாக அமைந்திருப்பது எந்தப்படம்? -

பூ.ராஜன், ஜாஎல.

'காதலுக்கு மரியாதை'

★ நோகாமல் அடிப்பது என்றால் என்ன?

எஸ்.கே.பரமேஸ்வரன், பண்டாரவளை.

சமீபத்தில் படித்த ஒரு சம்பவம்:

மகாத்மா காந்தியும், ராஜாஜியும் ஆங்கிலத்தில் கடிதம் எழுதிக்கொள்வர். ஒருநாள் காந்தியிடம் இருந்து இந்தியில் கடிதம் வந்தது. அதில் ஏனைய விஷயங்களை எழுதிவிட்டு, 'கடைசியில், இனிமேல் எல்லாக் கடிதங்களையும் இந்தியில் எழுதப்போவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு ராஜாஜி தமிழில் பதில் எழுதியிருந்தார். அதன்பின்னர் காந்தி திரும்பவும் ஆங்கிலத்தில் எழுதினார்.

## சிந்தியா பதில்கள்

★ 'நான்' என்ற அகந்தையைப் போக்குவது கடினம் என்கிறேன். நீர் என்ன சொல்கிறீர்!

இ.லலிதா, மட்டுநகர்.

உண்மைதான்.

ஒரு குருவைத் தேடி சீடன் வந்தான். "மனிதனைக் கெடுக்கும் மோசமான குணம் எது?" என்று கேட்டான்.

குரு சொன்னார்: "அகந்தை. அதாவது நான் எதை எதையோ சாதித்துவிட்டதாக ஏற்படும் கர்வம்!"

"அதைப் போக்க முடியுமா?"

குரு விளக்கினார்:

"ஒரு வழி உண்டு. அதை நான் கடைப்பிடிக்கிறேன். பத்மாசனம் போட்டு அமர்ந்து கொண்டு, எனக்குள் நானே, "நான் இன்னார் இல்லை. எல்லா நூல்களையும் கற்றறிந்த பல்கலைச் சங்கத்தின் தலைவன் நான் இல்லை. உலகில் உள்ள தத்துவ நூல்களையெல்லாம் கற்றறிந்த ஞானி நான் இல்லை, என்றெல்லாம் சொல்லிக் கொள்வேன்!" என்றார்.

உடனே சீடன் என்ன சொன்னான் தெரியுமா?

"நீங்கள் தினம் மனதுக்குள் நினைப்பது மூலம் உங்கள் சாதனைகளைப் பலமுறை ஞாபகப்படுத்திக் கொள்கிறீர்கள்!" என்று விட்டு போயேவிட்டான்.

★ 'பொற்கால'த்தில் யார் சூப்பர்? சங்கவியா, மீனாவா?

சி.சிறீதரன், கொழும்பு-09.

தனியாக ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. கூட்டாச்சிதான்! ■

# இராமாயணம் அங்கம் 119

இராமபிரான் அயோத்தி நகரப் பெரியார்களுக்கு, தன்னுடன் தெற்கிலிருந்து வந்தவர்களை அறிமுகப்படுத்தினார். அப்போது ஆஞ்சநேயரை வாஞ்சையோடு அணைத்துக் கொண்டார். எப்போதும் தன் உள்ளத்தில் நிறைந்து சிரஞ்சீவியாக இருப்பார் என்று கூறினார். இத்தகைய அரும்பேறு அனுமனுக்கு மட்டும் கிடைப்பதற்கான காரணம்தான் என்ன என்பதை

தனது ஓரங்கமான திருமகளை சீதாப் பிராட்டியாராக அவதாரம் எடுக்கப்பணித்தார். இராமாவதாரம் எடுத்ததைத் தொடர்ந்து தேவர்கள் பலரும், தத்தமது அம்சங்களாக பூமியில் பிறப்பித்து இராமபிரானின் கடமை நிறைவேற ஒத்துழைக்குமாறு செய்தனர்.

இதன் பிரகாரம் வாயுதேவன் தனது அம்சமாக ஆஞ்சநேயர் அவதரிக்க அருளினார். கதிரவன் சுக்கிரீவனையும் இந்திரன் வாலியையும் படைத்தருளினர். இவர்கள் தெய்வீக அருளினால் அவதாரம் எடுத்த

மான உருத்திரனின் பதினோராவது அவதாரம் என்றும் சில நூல்களில் காணப்படுகிறது. இதனால் ஆஞ்சநேயரை எவரும் வெல்ல முடியாது என்றும் பிரகடனப்படுத்தப் பட்டது.

### சூரியனைப் பிடிக்க...

ஒருநாள் குழந்தை ஆஞ்சநேயரை தொட்டிலில் கிடத்திவிட்டு வேறு ஓர் அலுவலுக்காகச் சென்றுவிட்டாள் தாய் அஞ்சனாதேவி. கண்விழித்ததும் தாயாரைக்

## ஆஞ்சநேயரின் கதை

இக்கட்டத்தில் அறிவது பொருந்தும்.

இராமகாதையின் தோற்றுவாய்க்கு வித்திட்டவன் இராவணேசன். படைத்தற் கடவுளான பிரம்மதேவனிடத்தில் அரிய வரங்களைப் பெற்ற இராவணன், தனக்கு தேவர்கள், யட்சர், கந்தர்வர் மற்றும் இராட்சதர்களால் அழிவு ஏற்படக்கூடாது என்று வரம் கேட்டான். பிரம்மதேவனும், நீண்ட

போதும் பூமியில் மானிடராகப் பிறந்தமையால், உலக வழக்குப்படி தமது முன் நிலமைகளை முற்றும் மறந்துவிட்டனர். சாதாரண பூலோகவாசிகள் போன்றே நடமாடினர். மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் பூவுலகில் படும் இன்ப- துன்பங்கள் ஆகியவற்றை அனுபவிக்க நேர்ந்ததும் பூமியில் பிறந்த காரணத்தினாலேயாகும்.

காணாமல் குழந்தை அழுதது. அப்போது வானில் சூரியன் பவனி வருவதைக் கண்டு, அதனை ஒரு விளையாட்டுப் பொருளாகக் கருதி, சூரியனைப் பிடிப்பதற்கு குழந்தை வானிலே தாவிச் சென்றது. அன்று அமாவாசை- சூரியனை ராகு எனும் கிரகம் பற்றும் கிரகணம் நிகழவேண்டிய காலம். ராகு சூரியனைத் துரத்திக்கொண்டு வேகமாகச் சென்று கொண்டிருந்தபோது, தனக்கு முன்னே ஒரு குழந்தை சூரியனை நோக்கிச் செல்வதைக் கண்டான்.



வாயுதேவனின் அம்சமான ஆஞ்சநேயனை சூரியனின் வெப்பத்திலிருந்து பாதுகாக்க வாயு பகவானும் துணைபுரிந்தார். தனக்கு முன்னே சூரியனைத் தாவிப் பிடிக்க மற்றுமொருவன் செல்வதைக் கண்ட ராகு, ஓடிச்சென்று ஆஞ்சநேயரைத் தாக்க முற்பட்டான். ஆனால் குழந்தையான ஆஞ்சநேயரை ராகுவால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆஞ்சநேயர் ராகுவின் தலைமுடியைப் பிடித்து கீழே உருட்டினார். செய்வதறியாது தவித்த ராகு தேவேந்திரனிடம் ஓடிச் சென்று முறையிட்டான். தனது ஆணைப்படி, சூரியனை மறைக்கும் பணியை மேற்கொள்ளச் சென்ற ராகுவுக்கு இடையூறு செய்தவனைத் தண்டிக்க, தனது ஐராவதம் எனும் யானை மீதேறிச் சென்றார் இந்திரன். தனது வஜ்ராயுதத்தை வீசினார், அந்த ஆயுதம் ஆஞ்சநேயரின் நாடியில் பட்டு, அவரைத் தரையில் வீழ்த்தியது.

தனது புத்திரனான ஆஞ்சநேயரை இந்திரன் தாக்கியமையினால் சினம் கொண்ட வாயு, ஆஞ்சநேயரைத் தூக்கிக் கொண்டு ஒரு புறம் சென்றுவிட்டார்.

வாயு தனது பணியைச் செய்யாமல் ஒதுங்கி விட்டமையினால் சகல சீவராசிகளும் சுவாசிக்க முடியாமல் தவித்தன. நிலைமையை அறிந்த பிரம்மதேவன் வாயுவிடம் சென்று, ஆஞ்சநேயரின் காயத்தைத் தடவிவிட்டார். அவர் சுகமடைந்து எழுந்ததைக் கண்ட வாயு பகவான் தனது கோபத்தை நீக்கி காற்றாக வீச ஆரம்பித்ததும் சகல சீவராசிகளும் சுவாசிக்க ஆரம்பித்தன. பிரம்மதேவன் ஆஞ்சநேயருக்கு, எந்த ஆயுதத்தாலும் காயம் ஏற்படமாட்டாது என்று வரமளித்ததுடன் ஏனைய தேவர்களையும் ஆஞ்சநேயருக்கு ஆசிவழங்கி வாழ்த்துமாறு கேட்டுக்கொண்டார்.

சூரியன், ஆஞ்சநேயருக்கு வேதம் முதலான சகல கல்வி அறிவையும் புகட்ட முன்வந்தார். இந்திரன் தனது வஜ்ராயுதம் எந்தக் காலத்திலும் ஆஞ்சநேயனுக்கு எத்தீங்கும் விளைவிக்காது என்று வரமருளினார். நினைத்த நேரத்தில் நினைத்த உருவத்தினைப் பெறும் வல்லமையை பிரம்மதேவன் வழங்கினார்.

நாடியில் வெட்டுக் காயம் ஏற்பட்டமையினால் அனுமன் (ஹனுமான்) என்ற காரணப் பெயரையும் ஆஞ்சநேயர் பெற்றார். சகல தேவர்களும் ஆஞ்சநேயருக்கு வரங்களை அள்ளி வழங்கியமையினால் அனுமன் எல்லாம் வல்ல பராக்கிரமசாலியாக வளர்ந்தார்.

வயதுக்கும் அளவுக்கும் மீறிய உடல் வலிமையையும் ஆற்றலையும் பெற்றமையினால், அனுமன், தனக்கு வேண்டப்படாத பல காரியங்களில் தலையிடலானார். யானை, சிங்கம், புலி ஆகியவற்றோடு சண்டையிட்டு அவற்றை இம்சிக்கலானார். வலுச்சண்டைக்குப் பலரையும் இழுத்து வம்புகளை விலைக்கு வாங்குபவரானார்.

ஒரு தடவை யாகம் செய்து கொண்டிருந்த முனிவர்களிடம் குறும்பு செய்து அவர்களின் கோபத்துக்கு இலக்கானார். சிறு பிள்ளைதானே என்று சினம் அடங்கிய முனிவர்களில் ஒருவர். "நீ இத்தனை பராக்கிரமசாலியாகவும் அறிவாளியாகவும் இருந்தும் மற்றவர்களைத் துன்புறுத்துகிறாய், ஆகவே, நீ உன் ஆற்றலை உணராமல் இருப்பாய். இருப்பினும் முக்கியமான தேவை ஏற்படும்போது மட்டும் உன் ஆற்றல் வெளிப்படும்!" என்று சபித்தார். இதன் பின்னர் அனுமன் அமைதியாக நாட்களைக் கடத்தலானார்.

துடுக்குத்தனமாக நடந்த தன் குழந்தையை அதுவரை அடக்க முடியாதிருந்த அஞ்சனாதேவி, அனுமனை சூரியனை நோக்கித் தவமிருந்து, அவர் கொடுத்த வாக்கின் படி, வேத சாஸ்திரங்களைக் கற்று விடுமாறு கூறி அனுப்பினாள். அதன்படி அனுமன் சூரியனை நோக்கித் தவம் செய்ய, அவர் அனுமனுக்கு வேண்டிய கலைகளைக் கற்றுக் கொடுத்தபின், தனது மகனான சுக்கிரீவனுக்குத் துணையாக இருக்கும்படி கூறி அனுப்பி வைத்தார்.

(தொடர்ந்து வரும்)

### இராஜகுமாரன்

நெடுங்காலம் தன்னை நோக்கிக் கடுந்தவம் புரிந்த இராவணன் மீது இரக்கம் கொண்டு, அந்த வரத்தினைக் கொடுத்தார். தனக்கு அழிவில்லை என்ற அகங்காரம் மேலிட்ட அரக்கர் தலைவன், பல அக்கிரமங்களையும் செய்யத் தலைப்பட்டான். அவற்றில் முக்கியமானது, முனிவர்கள் இயற்றிய யாகங்களுக்கு இடையூறு விளைவித்தமை. தான் மட்டுமல்லாமல், தனது ஆதிக்கத்துக்குட்பட்ட வேறு பல அரக்கர்களையும், முனிவர்கள் முதலானோரின் யாகங்களை அழிப்பதற்கு ஏவிவிட்டான்.

தவசிரேட்டர்கள், கடும் தவம் மேற்கொள்வதன் மூலமும் யாகங்கள் செய்வதன் மூலமும் தேவர்களை மகிழ்வித்து, தன்னைப் போல் வரங்களைப் பெற்றுவிடக்கூடும் என்று கருதியமையினால்- அவ்வாறு எதுவும் நடைபெறாமல் தடுக்க இராவணன் நினைத்திருக்க வேண்டும். தன்னைமீறி எவரும் மேலான வரங்களைப் பெற்றால் தனக்கு ஆபத்து வந்துவிடக்கூடும் என்று இராவணன் அச்சம் கொண்டிருக்க வேண்டும். இதைத் தவிர இராவணன் முனிவர்கள் மீது கோபம் கொள்வதற்கு வேறு எவ்வித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

அரக்கர்கோன் பிரம்மதேவனிடம் வரம் கோரும்போது, தனக்கு மானிடர்களால் அழிவு ஏற்படலாகாது என்று கோரவில்லை. இராவணனின் கொடுமைகளைப் பற்றி முனிவர்கள் பிரம்மதேவனிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் திருமாலிடம் செல்கின்றனர். இதனால்தான் இராவண சங்காரத்துக்காக, தானே மானிட உருவில் அவதரிக்க முற்பட்டார். அவர் தன்னுடைய அம்சமாகவே இராமபிரான் என்ற குழந்தை தசரத மாமன்னனுக்குப் பிறப்பதற்கு அருளினார். அதேபோன்று பரதன், இலக்குமணன், சத்துருக்கன் ஆகியோரையும் தனது அம்சங்களாக அவதரிக்க வைத்தார்.

### அனுமனின் கதை

இராமபிரானின் இணையிலாத்தூதனாகவும் தாசனாகவும் மாறிவிட்ட மாருதியின் பிறப்பைப்பற்றிய கதையினை இத்தருணத்தில் அறிந்துகொள்வோம்.

தேவலோகத்தில் பேரழகியாகத் திகழ்ந்த கன்னி பஞ்சிகஸ்தலா என்பவள், தவம் புரிந்து கொண்டிருந்த ஒரு முனிவரின் தவத்தைக் குழப்பிவிட்டாள். இதனால் கோபம் கொண்ட அம்முனிவர், பஞ்சிகஸ்தலாவை பெண்ணுருவம் கொண்ட குரங்காக பூமியில் பிறக்கும்படி சாபமிட்டார். பயந்து நடுங்கிய பஞ்சிகஸ்தலா, தான் அறியாமல் செய்த பிழையை மன்னித்து சாபவிமோசனம் அளிக்குமாறு வேண்டினாள். இரக்கம் கொண்ட முனிவர், " உன் விருப்பப்படி உரிய காலத்தில் விரும்பிய உருவம் பெறுவாய்!" என்று விமோசனமளித்தார்.

பஞ்சிகஸ்தலா கஞ்சர் என்ற வானர இனத்தலைவனின் மகளாகப் பிறந்தாள். அஞ்சனாதேவி என்று பெயர் சூட்டப்பட்டு, சர்வ இலட்சணங்களும் பொருந்திய கன்னியாக வளர்ந்தாள். கேசரி என்ற பெயருடைய மற்றுமொரு வானரவீரனுக்கு அஞ்சனாதேவி மணம் முடித்து வைக்கப்பட்டாள்.

திருமணமாகி பல வருடங்களான பின்னரும் அஞ்சனாதேவிக்குக் குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லை. சிவபிரானை நோக்கி தம்பதியர் இருவரும் தவமியற்றினர். சிவபெருமான், வாயுதேவனின் அம்சமாக ஓர் ஆண்மகவு பிறக்கும் என்று வரமளித்தார். இதன் பிரகாரம் அஞ்சனாதேவி அழகான புத்திரனை ஈன்றெடுத்தாள்.

குழந்தை தங்க விக்கிரகம் போன்றிருந்தது. பிறக்கும் போதே தலையில் பெறுமதி மிக்க மாணிக்கங்கள் பதிக்கப்பெற்ற முடியும் காதணிகளும் குழந்தைக்கு அணி செய்தன. குழந்தையுடன் கூடவே தங்கக் கதாயுதம் ஒன்றும் காணப்பட்டது.

மாருதி, அனுமன், ஆஞ்சநேயன் என்ற பெயர்களால் பின்பு அழைக்கப்பட்ட அக்குழந்தை சிவபிரானின் மற்றுமொரு அம்ச

### இராமாயணப் போட்டி: 117

**சரியானவிடை:- 14 வருடங்கள்**

1. ம. கோமதி, ஆரோக்கியம் வீதி, பெரிய நீலாவணை-1, கல்முனை.
2. டி. நளின், 55/14, 8வது குறுக்கு, இருதயபுரம், மட்டக்களப்பு.
3. பா. சசிகுமார், இல.06, வணிகசேகரபுரம், கொட்டகலை.
4. ஆ. சிவகுமார், விக்டன் தோட்டம், பணிய டிவிஷன், ரோசால்ல.
5. செல்வன் எம்.ஏ.எம். மஜ்பர், இல. 76/1, பாடசாலை ஒழுங்கை, தொட்டவத்தை, பாணந்துறை.

**போட்டி இல. 119** கேள்வி:- ஆஞ்சநேயரைக் காயப்படுத்திய ஆயுதத்தின் பெயர் என்ன?

பெப்ரவரி 07 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.119, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## நுளம்பு எதிர்ப்பு யுத்தம்

புள்ளடி போட்ட மக்களே!

நுளம்பு ஒழிப்பு, கட்டாக்காலி நாய் ஒழிப்பு இலட்சியத்தை நாம் கைவிடப் போவதில்லை. கைவிட உத்தேசித்துள்ளதாக மாற்றுக் கட்சிகள் கூறுவதை நம்ப வேண்டாம்.

நுளம்பு ஒழிப்பின் அவசியம் தொடர்பாக, அரசாங்கத்திற்கு ஃபக்ஸ் செய்தி ஒன்றும், அவசரத் தந்தி ஒன்றும், கண்டன அறிக்கை ஒன்றும் (நாலேமுக்கால் பக்கத்தில்) கொடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை, அச் செய்தி கொடுக்கப்பட முன்னரே பத்திரிகைகளுக்கு செய்தியாக கொடுத்திருக்கிறோம்.

நாங்கள் ஒரு தடவை ஃபக்ஸ் செய்தி கொடுத்தால், அது நூறு தடவை ஃபக்ஸ் செய்தி கொடுத்த மாதிரி.

அதனால்தான் நுளம்பு பெருகக் காரணம் யார்? என்பதைக் கண்டறிய விசாரணைக்கமிஷன் நியமிக்க சம்மதித்துள்ளனர். காரணம் கண்டறியப்படும்வரை நுளம்புகளின் தொல்லைகளை பொறுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்!

அதுவரை நுளம்புத் தொல்லையால் பாதிக்கப்படுவோருக்கும், மலேரியா போன்றவற்றால் மரணமாவோருக்கும் நிவாரணம் பெற்றுத் தருவதற்காக எதிர்காலத்தில் தனியான விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும்.

## மனைவிகள் கண்ணீர்

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட வேட்பாளர்கள் யார் என்று அறிய பொதுமக்கள் பலத்த முயற்சி எடுத்தனர். ஆயினும் பலத்த தோல்வி கண்டுள்ளனர்.

வெற்றி பெற்ற வேட்பாளர்கள் பலர் தங்கள் பகுதிகளுக்கு செல்லவே போவதில்லை, தங்கள் விசேஷ அடையாளங்களை காண்பிக்கப்போவதில்லை என்று சபதம் செய்துள்ளனர்.

வெற்றி பெற்றதாக கூறப்பட்ட மறுநிமிடமே மேற்கண்ட வீரசபதம் எடுக்கப் பட்டுவிட்டதாம்.

இந்த சபதம் காரணமாகவே வெற்றி பெற்ற வேட்பாளர்களை மக்கள் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளதாம்.

தங்கள் கணவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதும், ஓவென்று வாய்விட்டு அழுத மனைவிமார்களையும் காணக்கூடியதாக இருந்தது. அது பற்றி விசாரித்தபோது, "ஆனந்தக் கண்ணீர்' என்று செய்தி போடுமாறு அன்புக் கட்டளையிட்டுள்ளனர் முன்னாள் போராளிகள்.

## கலைஞரின் மதவாதம்

**இந்தியத் தேர்தல் களம் சூடு பிடித்திருக்கிறது. தமிழ்நாட்டில் பாரதிய ஜனதாவும் ஜெயலலிதாவும் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள். இதற்குப் பதிலாக தி.மு.கவும், பாரதிய ஜனதாவும் கூட்டுச் சேர்ந்திருந்தால் கலைஞர் கருணாநிதி என்ன காரணங்கள் கூறியிருப்பார்?**



கா.பூ.கந்தசாமி: பாரதிய ஜனதா கட்சி பற்றி உங்கள் கருத்து என்ன?

கலைஞர்: பாரதிய ஜனதா என்பதை பாரதீய ஜனதா என்று கருதுவது தவறு! 'தி' என்ற எழுத்தை 'தீ' என்ற எழுத்தாக நோக்குவோர் தெளிந்த பார்வை இல்லாதவர்கள் என்றுதான் பொருள்!

கா.பூ.க: பாரதிய ஜனதாவை மதவாதக் கட்சி என்கிறார்களே?

கலைஞர்: ஆம்! நாம் அதனை மறுக்கவில்லையே! ஒவ்வொரு மதத்துக்கும் ஒரு வாதம் இருப்பதால் தான் பல மதங்கள் இருக்கின்றன. எங்கள் இதயதெய்வம் அண்ணா மத பேதம் வேண்டாம் என்றுதான் கூறினாரே தவிர, மதவாதம் வேண்டாம் என்று சொன்னதில்லை.

கா.பூ.க: மதவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளீர்கள் என்று செல்வி ஜெயலலிதா உங்கள்மீது குற்றம் சாட்டியுள்ளாரே?

கலைஞர்: அந்த அம்மாவுக்கு பிடித்திருக்கிறது மதம்! அதனால்தான் அவருக்குப் பிடிக்கவில்லை மதவாதம்!

கா.பூ.க: யானை என்று அவரைக் கூறுகிறீர்களா? அப்படியானால் போட்டி பலமாக இருக்குமோ?

கலைஞர்: மதம் பிடித்துவிட்டது என்பதற்காக அவரை யானை என்று நான் சொன்னதாக யார் உங்களுக்குச் சொன்னது? எதிர்வரும் தேர்தலில் அவர் ஒரு பூனைதான்! இந்தப்பூனைதான் முன்னர் பால்குடித்தது என்பதை தமிழக மக்கள் மறந்துவிடமாட்டார்கள்!

கா.பூ.க: ஜெயின் கமிஷன் அறிக்கை உங்களைப் பாதிக்கவில்லையா?

கலைஞர்: எதிரிகள் எங்களை சைக்கிள் செயினால் அடித்தபோதும் துவளாதவர்கள் நாங்கள். இதுவோ வெறும் ஜெயின் கமிஷன். துவளமாட்டோம்! சுழலுவோம்!

கா.பூ.க: மதவாதத்தை உங்கள் கட்சி ஆதரிக்கிறது என்று சொல்லலாமா?

கலைஞர்: சொல்லலாம்! ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று அன்றே சொன்னார் திருமூலர். அதனை நமக்கு நன்றே சொன்னார் அண்ணா. அது தான் மதம் தொடர்பான நம் வாதம்!

(கந்தசாமியார் நழுவுகிறார்)

## ஜெயாவின் இலட்சியம்

பாரதிய ஜனதாவுடன் ஜெயலலிதா கூட்டுச் சேர்ந்திருக்காவிட்டால்....



கா.பூ.க: பாரதிய ஜனதாவுடன் தி.மு.க கூட்டுச் சேர்ந்திருக்கிறதே?

ஜெ: சாக்கடையில் விழுந்திருக்கிறார் கருணாநிதி. சாட்டையடி கொடுப்பார்கள் தமிழக மக்கள்!

கா.பூ.க: பாரதிய ஜனதாவை நீங்கள் எதிர்க்கக் காரணம் என்னவோ?

ஜெ: இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதவாதிகளை எதிர்த்துப் போராடு என்று என்னிடம் சொல்லியிருக்கிறார். அதனால்தான் திராவிட பாரம்பரியத்தை என் தோளில் சுமக்க வேண்டியவளாக, தன்னம் தனியாளாக நின்று போராடி வருகிறேன்.

கா.பூ.க: ஏன் சசி எங்கே?

ஜெ: நான்சென்ஸ்.. நீர் என்ன கருணாநிதியின் கையாளா? அல்லது மூப்பனாரின் கூட்டாளியா? சசி என் பிரிய சகியே தவிர, அவள் செய்வதில்லை அரசியல் சதி.

கா.பூ.க: தாங்கள் திருந்திவிட்டீர்களா?

ஜெ: தப்புச் செய்தால்தான் திருந்த வேண்டும். உப்புத் தின்றால்தான் தண்ணீர் குடிக்க வேண்டும்.

கா.பூ.க: உங்கள் இலட்சியம் என்ன?

ஜெ: மதவாத சக்திகளிடம் கருணாநிதி அடகுவைத்துள்ள திராவிடப் பாரம்பரியத்தை மீட்டெடுப்பதுதான் என் ஒரே இலட்சியம்!

கா.பூ.க: நீங்களும் பாரதிய ஜனதாவுடன் கூட்டுச்சேர விரும்பியதாகக் கூறுகிறார்களே?

ஜெ: சம்பிரதாயமாக நடைபெற்ற சந்திப்புக்களை, கூட்டுச் சேரும் சம்மதத்துடன் நடைபெற்ற சந்திப்புக்களாக கருணாநிதி கூறிவருகிறார்.

கா.பூ.க: உங்கள் மீதான ஊழல் புகார்கள்?

ஜெ: அவையெல்லாம் பனிப்புகார்கள். விரைவில் காணாமல் போய்விடும்.

கா.பூ.க: பனிப்புகார் மறைய வேண்டுமானாலும், இரட்டை இலை துளிர்க்க வேண்டுமானாலும் உதய சூரியன் தானே உதிக்க வேண்டும்? (ஜெயா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக் கிறது. கந்தசாமியார் காணாமல் போகிறார்)

கற்பனைத் தயாரிப்பு: காதிலை பூ கந்தசாமி

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி வெள்ளவத்தை கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# இனிய இல்லம்




ஸ்ரீ கல்யாணி ஜுவலர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

323657




→ பூமி அதிர்ச்சியில் சாய்ந்துவிட்ட வீடா இது? என்றுதான் எண்ணத் தோன்றும். ஆனால் சாயவுமில்லை, சரியவும் இல்லை.

நியூசிலாந்தில் டுனேடின் என்ற இடத்தில் பால்டுவின் என்னும் வீதி இருக்கிறது. உலகெங்கும் வீதிகள் பல இருக்கலாம். வீதிகள் இல்லாத நாடுகள் உண்டா என்ன? ஆனாலும் பால்டுவின் வீதி உலக சாதனை வீதியாக கருதப்படுகிறது.

காரணம் யாதெனில், உலகிலேயே மிகச் சரிவான வீதி இதுதான்.

பால்ட்வின் தெருவின் சரிவினால் அங்கு வாகனங்கள் செல்ல முடியாது. நடந்துதான் சென்று வரவேண்டும். சமதரையிலிருந்து 20 பாகை சரிவில் உள்ளது. வாகனத்தில் போனால் தொபவென்று சரிந்து தொலைந்து போகவேண்டியதுதான்.

பிரிட்டனின் வடயோர்க் ஷயரில் ரொஸெடேல் அபேய் என்ற ஊரில் சிம்னெய் பாங்க் என்ற வீதியும் சரிவானதுதான். ஆனால் அந்த வீதியில் வாகனங்கள் மெல்ல நிதானமாகச் செல்ல முடியும்.

இதைவிட வாகனங்கள் ஓடத் தடை (நீதி ஓடினால் கவிழ்ந்து விடும்)உள்ள இன்னுமொரு சாலை பிரிட்டனில் ஹார்லெட்ச் என்ற ஊரிலுள்ள 'போர்ட் பென் லெட்ச்' ஆகும். வாகனங்கள் கவிழாமல் செல்ல வேண்டுமானால் சாலையின் சரிவு 30 பாகைக்குமேல் இருக்கக் கூடாது. ■


# அபூர்வம்



↓ வண்ணத்திப் பூச்சிபோல வர்ணம் காட்டுகிறது இந்த அபூர்வ வௌவால். குறிஞ்சாங்கேணிக் கிராமத்தில் இதனைக் கண்டதும், கப்பென்று பிடித்து புகைப்படமாக்கி விட்டார் முரசு வாசகர் மொஹித் அறபாத். முரசு வாசகர்களுடன் தான் கண்ட அபூர்வத்தை பகிர்ந்து கொள்ள ஆசைப்பட்டு பிரசுரிக்கவும் அனுப்பிவைத்தார். அச்சா! அச்சா!

**கூடைப்பந்து ஒலிம்பிக் சாதனைகள்**

1963 இலிருந்து 1972 வரை (தொடர்ந்து) அமெரிக்கா தொடர்ச்சியாக 63 போட்டிகளில் வெற்றிபெற்றது. ஆண்களுக்கான ஒலிம்பிக் கூடைப்பந்துப் போட்டிகள் 11 இலும் வெற்றி பெற்றது. இது ஒரு சாதனையாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. பெண்களுக்கான போட்டிகளில் முன்னாள் சோவியத் யூனியன் முறையே 1976, 1980 மற்றும் 1992ம் ஆண்டுகளில் தங்கப்பதக்கம் வென்றது. அமெரிக்கப் பெண்கள் அணி முறையே 1984, 1988 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் உலக சாம்பியன் தங்கம் வென்றன.



# அப்படிப் போடு

→ பறக்கும் பந்து பறக்கும். ஆனால் கூடைப் பந்து பறக்காது. இலாவகமாகப் பிடித்துக் கொண்டு சென்று கூடைக்குள் போடவேண்டும். கூடைக்குள் பந்தைப் போடும் உலக சாதனைப் போட்டி ஒன்று 1996 செப்டம்பர் 16ல் அமெரிக்காவில் புளொறிடா மாநிலத்தில் நடைபெற்றது.

3.58 மீட்டர் (11 அடி 8 அங்குலம்) உயரமான கம்பத்தின் உச்சியில் வட்டவடிவ கம்பியைச் சுற்றியுள்ள வலைக்குள், நேர் செங்குத்தாக பந்தைப் போட வேண்டும். சிரமப்படாமல் வெகு நிதானமாக பந்தைக் கையாண்டு கூடைக்குள் போடவேண்டும் என்பது நிபந்தனை. தாவித் தாவி விழாமல் ஒரே போடாகப் போடவேண்டும்.

இந்தப் போட்டியில் சீன் வில்லியம்ஸ் மற்றும் மைக்கேல் வில்லியம்ஸ் இருவரும் சமமான புள்ளிகளைப் பெற்றனர். இவர்கள்தான் இன்றுவரை கூடைப் பந்தை கச்சிதமாக போடுவதில் உலக சாதனை வீரர்கள். பந்து செங்குத்தாக போடப்பட்டு வலையை தாண்டி விழும்போது எடுக்கப்பட்ட படம் தான் இது...

← மலர்களோ செம்மலர்களோ? அல்ல அல்ல. இதற்குத்தான் சொல்வார்கள்: 'கண்ணை நம்பாதே, உன்னை ஏமாற்றும்'.

அத்தனையும் கம்பளிப் பூச்சிகள். மரம் ஒன்றின் கீழ் மலர்கள் போலவே கம்பளிப் பூச்சிகளைப் படமாக்கியுள்ளார். படமாக்கியவர் வெளிநாட்டுக்காரர் அல்ல. நம்நாட்டவர்தான். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முரசு வாசகர். பெயர்: கி.சுரேஷ். அசத்தலான ஐடியா. கடும் முயற்சியால் கிடைத்த கச்சிதமான புகைப்படம். ■

# பிறந்த நாள் வாழ்த்து



**செல்வன். எஸ். துஷ்யந்தன் (21.01.1998)**

இலங்கை புத்தூர் [illegible] சேர்ந்த [illegible] தம்பதிகளின் செல்லப் புதல்வன் துஷ்யந்தன் தனது முதலாவது பிறந்த தினத்தை 21.01.1998 அன்று Switzerland Zurich இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, [illegible] வாழ்த்துகின்றனர்.

தகவல்: [illegible] (Switzerland)

# மலர் போலவே





# நெடிது நெடிது

→ உலகிலேயே மிக உயர்வாக வளர்ந்துள்ள கள்ளி இனத் தாவரம் இதுவாகும். அமெரிக்க அரிசோனா மாநிலத்திலுள்ள சாகெரோ தேசிய வனத்தில் உள்ள கள்ளி இதுவாகும். 1988 ஜனவரி 17ல் இந்த உலக கள்ளிச் செடியின் உயரத்தை கணக்கிட்டு உலக சாதனையாகப் பதிவு செய்தனர். இதன் உயரம்: 17.67 மீட்டர் (57அடி 11 3/4 அங்குலம்) சராசரி மனித உயரம் 6 அடியாகும். சுமார் 10 மனிதர்களின் உயரம். படத்திலுள்ள கள்ளிச் செடி இன்னமும் இருந்து வருவதால் உலக சாதனைச் செடியாகக் கொள்ளப்படுகின்றது. இந்தச் செடியின் விஞ்ஞானப் பெயர்- செரியஸ் கிகான்ரெஸ் அல்லது கார்னேஜியா கிகான்ரியா.

இந்த இனக்கள்ளி மரத்தில் மிக அழகான வெண் நிறப் பூக்கும். இந்தப் பூவையே அரிசோனா மாநிலத்தின் தேசியப் பூவாகப் பிரகடனப் படுத்தியுள்ளனர். ■



இரத்மலானை கொழும்பு [illegible] 25, [illegible] அச்சகத்தில் பெப்ரவரி 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.